உ
சிவமயம்

# கர்மயோகம்

சேர் பொன். இராமநாதன் அவர்கள்
பகவத்கீதைக்கு இயற்றிய
உரையைத் தழுவி எழுதப்பெற்றது.

தி. செல்வமனோகரன்

எழுதியவர் :
ஆசிரியர் மு. ஞானப்பிரகாசம்

வெளியீடு :
சுன்னுகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்.
1968

# KARMA YOGA
# &
# GUNA VIBHAGA YOGA

## BRIEF EXPLANATORY NOTES

*All Rights Reserved.*

**North - Ceylon Tamil Works Publishing House**
**Chunnakam**

## சமர்ப்பணம்

யாழ்ப்பாண ஞான பரம்பரையில் தோன்றி
பெருங் கொடைவள்ளல்களாயும்,
பிரபுக்களாயும் திகழ்ந்த
சிவஞானச் செல்வர்களின்
பாததாமரைகளுக்கு.

சுன்ஞகம் வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தினருக்காக, குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால், சுன்ஞகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# முகவுரை

உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் கர்மங்களை அல்லது தொழில்களைச் செய்து வாழவேண்டியவர்களாகவே இருக்கின்றனர். செய்யவேண்டிய கர்மங்களை மிகச் சிறந்த முறையிற் குறைந்த நேரத்தில் ஆத்ம திருப்தியுடன் நிறைவேற்றுதற்கு மனிதர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்களை விளக்கும் நெறி **கர்மயோக நெறி** எனப்படும். இந்த நெறி மிகமிகப் புராதனமானது. மனிதன் இவ்வுலகில் தோன்றிய காலந் தொடக்கம் இந்த நெறியைப்பற்றி ஆராய்ச்சி நிகழ்ந்து வருகின்றதாயினும், இதனை முதலில் ஆராய்ந்து தெளிந்தவர்கள் இந்திய ஞானிகளே. மிகவும் பழைய காலத்தில் வாழ்ந்த இந்திய ஞானிகளுள் ஒரு கூட்டத்தினர் சாங்கியர் என்று அழைக்கப்பட்டனர். *அவர்களுள் ஒரு சாரார் கடவுள் உண்மையை ஒப்புக்கொள்பவராகவும் இன்னொரு சாரார் அதனை ஒப்புக்கொள்ளாதவராகவும் இருந்தனர். இந்தச் சாங்கியர்கள் இயற்கையைப் பிரகிருதி என்ற பெயரால் அழைத்தனர். இவர்கள் பிரகிருதி எனப்படும் இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சிகள் பல செய்திருக்கின்றனர். பிரகிருதியானது அசைவுநிலை பெற்று, பிரபஞ்சமாக மாறுதலடையும்பொழுது அதி சூக்கும இயல்புள்ள மூன்று குணங்களாகப் பிரிகின்றதென்றும் அந்த மூன்று குணங்களும் சித், அசித் வடிவாயுள்ள சக்திகளென்றும் பல்வேறு வீதங்களில் அவை சேர்ந்த சேர்க்கையினாலேயே உலகப் பொருள்களெல்லாம் தோன்றியுள்ளனவென்றும் தங்கள் ஆராய்ச்சிகள் மூலம் இந்தச் சாங்கியர்கள் நிரூபித்துக்காட்டியுள்ளனர். இவர்கள் தம் ஆராய்ச்சி

---

*சுவேதாசுவதரசுருதி – 6ஆம் அத்தியாயம் — 13ஆம் மந்திரம்.

களாற் கண்ட மூன்று குணங்களாவன: சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்பன. சாங்கியர் கொள்கையின்படி, இந்த மூன்று குணங்களின் மய மாகவே மனிதர்களுடைய உடம்பும் உலகிலுள்ள பொருள்களும் இருந்துவருகின்றன. மனிதன் சிறப் பாகக் கடமையாற்ற வேண்டுமெனில், முதலில் தன் னுடம்பும் உடம்பிலுள்ள கருவி கரணங்களும் கொண்டுள்ள குணத்தை நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல்வேண்டும் என்பதே சாங்கிய மதத்தினர் கூறிய அடிப்படை உண்மையாகும். இந்த அடிப்படை உண்மையில் எழுந்ததே **கர்மயோகம்** எனச் சொல் லப்படும் சிறந்த நெறி.

இந்தியாவில் வாழையடிவாழையாக வந்து தோன்றிய தத்துவஞானிகள் அனைவருஞ் சாங்கியர் கூறிய அடிப்படை உண்மையில் வைத்தே தங்கள் தத்துவக் கொள்கைகளைக் கட்டியுள்ளனர். *அதனால் பிற்காலத்திற் தோன்றிய இந்திய தத்துவ ஞானிகள் அனைவரும் மிகவும் பழைமை வாய்ந்த சாங்கிய தரி சனத்துக்குக் கடமைப்பட்டவராவர். கடவுள் உண் மையை ஒப்புக்கொண்டாலுஞ் சரி, ஒப்புக்கொள்ளா விட்டாலுஞ் சரி, இவர்கள் சாங்கியர் கூறிய பிர கிருதியையும் அந்தப் பிரகிருதியிற் தோன்றும் முக் குணங்களையும் அடிப்படையில் வைத்தே தத்தம் முடிபுகளை நிரூபித்துக் காட்டிவந்திருக்கின்றனர். எனவே, இந்தக் கர்மயோகநெறி இந்திய சமயங் களைப் பொறுத்தவரையில் ஒரு பொது நெறியாகும். இதனை மிகச் சிறந்த முறையில் விளக்கும் நூல் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உணர்த்திய உபதேச மொழிகளைத் தன்னகத்தே கொண்ட பகவத்கீதை ஆகும்.

இவ்வுலகிலே எந்தத் தொழிலில் ஈடுபட்டு எந்த நிலைமையில் இருப்பவர்க்கும் எந்தக் குணங்களுடன்

---

* சுவேதாசுவதரசுருதி - 5ஆம் அத்தியாயம் — 2ஆம் மந்திரம், பகவத்கீதை - 10ஆம் அத்தியாயம் — 26ஆம் மந்திரம்.

பிறந்தவர்க்கும் பகவத்கீதை உய்யும்வழியைக் காட்ட வல்ல உயர்ந்த சாஸ்திரம் எனப் பெரியோர்கள் கருதுகின்றனர். இந்துசமய தத்துவ ஞான உலகில் மிகவும் உயர்ந்த இடத்தை வகிக்கும் இந்நூல் கடவுள் உண்மையை ஒப்புக்கொண்ட மிகவும் பழைமை வாய்ந்த சாங்கிய தரிசனத்தின் அடிப்படையில் எழுந்த மிகச் சிறந்த நூலென்பதே எமது தாழ்மை யான அபிப்பிராயமாகும்.

பண்டைக்காலந் தொடக்கம் தமிழகத்தில் நிலவி வரும் சைவசித்தாந்தம் வைஷ்ணவ சித்தாந்தம் ஆகிய இரு தரிசனங்களும் கடவுள் உண்மையை ஒப்புக் கொள்வன. இவையிரண்டும் ஒரு இறைவனின் சந்நிதியிலேயே பிரகிருதி இயங்குகின்றது என்ற கொள்கையை உடையன. அதனுல் பகவத்கீதையில் வரும் பிரகிருதியின் இயக்கத்தை விளக்கும்போதெல் லாம் பிரகிருதியில் அகப்பட்டுத் தத்தளிக்கும் ஜீவாத் மாவைப் பற்றியும் பிரகிருதியிலிருந்து நீங்கி அனைத்தையும் தானே நின்று தொழிற்படுத்திவரும் பரமாத்மாவைப் பற்றியும் நன்கு விளக்கிக் கொண்டே செல்வன. சேர் பொன். இராமநாதன் அவர்கள் சைவசித்தாந்த மரபில் நின்ற ஒரு அனுபூதி மானுய்த் திகழ்ந்தவராதலின், அவர் **கர்மயோகம், குணவிபாகயோகம்** ஆகிய இவற்றுக்கு எழுதிய உரை சைவசித்தாந்தக் கண்கொண்டு எழுதப்பட்ட மிகச் சிறந்த உரையாகும். இதனை எம்மாலியன்ற ஒரு வகையில் திருவருட்டுணை கொண்டு இந்தச் சிறிய நூலில் விளக்க முயன்றிருக்கின்றேன். முதற் பதிப் பாகிய இதனை அடுத்துவரும் பதிப்புக்களில், இந்த விளக்கவுரையை மேலும் திருவருட்டுணைகொண்டு தெளிவாக்கவும் விரிவாக்கவும் முயலுவேன்.

வணக்கம்.

**மு. ஞா.**

பரமேஸ்வரக்கல்லூரி
யாழ்ப்பாணம்
கீலக஁ு சித்திரைமீ

# A FOREWORD

*by*

**A Student of Hindu Philosophy**

This publication comprising spiritual discourses and elucidatory notes on the Karma Yoga in the Gīta, one may safely assert, is a unique endeavour in a direction very rarely attempted by scholars in the domain of Philosophy.

The Gīta is conventionally regarded along with the Upanishads and the Brahma Sūtra as an exposition on the Vedantic brand of Hindu Thought. The author breaks new ground in treating the Gīta — hitherto a Philosophical anathema to the Saiva Siddhāntins—as an exposition, synonymous with the basic tenets of Saiva Siddhanta Philosophy. Bringing to bear on the subject his deep Siddhāntic turn of mind and vision, and taking his cue from the Guru-Sisya Bhāva immanent in the Gīta, he successfully expounds the philosophical analogy between the Gīta and the Guru-Sisya tenet of the Siddhanta System.

Secondly Mr. M. Gnanapiragasam seems to acknowledge in his notes, though implicitly, the intellectual debt, the various systems of both the Ancient East and the West owe to the Sāñkhya doctrine. He avers that in their failure to acknowledge the debt they owe to the Sāñkhya Doctrine, philosophers down the ages have committed a breach of faith, an intellectual dishonesty of no small magnitude. With a view to drive home this thought, the author

has included towards the end of this book a brief addendum on the Sāñkhya System of Philosophy. Thus the breadth of vision of the author is both refreshing and thought provoking.

This is more the work of a 'Mumukshu', one desirous of Absolution than that of a Paṇdita, Mr. M. Gnạnapiragasam is more a Spiritual-seeker who wants to serve than a Scholar who is eager to impress. However it should fascinate the scholar because of novelty of the approach and at the same time attract the spiritual aspirant on account of its sincerity in treatment.

Whether or not the purists will approve of the author's interpretation of the ideals in Gita in terms of the Saiva Siddhanta Doctrine—one does not know. But it does certainly open a new vista both in the study of the Gīta and of the Siddhanta System of Philosophy.

# பதிப்புரை

'**கர்மயோகம்**' எனப்படும் இந்நூல் சமய ஞானிகள் படிக்கவேண்டிய சமயநூல். 'வாழ்க்கை வாழ' வழிகாட்டும் வாழ்க்கை நூல். அன்றியும் இக்காலத்தில், இந்துசமய தத்துவஞானக் கல்வியைத் தாய்மொழிமூலம் படிக்க விரும்பும் உயர்தர வகுப்பு, பல்கலைக்கழக வகுப்பு மாணவர்கள் முக்குணங்கள், சுவதர்மம், பரதர்மம் போன்ற அடிப்படைச் சமய உண்மைகளைத் தாமாகவே படித்து உணர்ந்துகொள்வதற்கு உதவக்கூடிய 'ஆரம்ப சமயபாட நூல்' என்பதையுங் கூற விரும்புகிறோம். இந்நூலாசிரியர் சைவப் பேரறிஞர், திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள். ஆசிரியர் அவர்களின் சமயவாழ்வு கல்வியறிவு முதலியன யாவர்க்கும் தெரிந்தனவே.

சுன்னாகம் **பதிப்பகத்தார்**
*இலகஷூ சித்திரைமீ*

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முகவுரை | v |
| மதிப்புரை (ஆங்கிலத்தில்) | viii |
| பதிப்புரை | x |

## கர்மயோகம் – பகவத்கீதை

### அத்தியாயம் 3

| | | |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| பாடல்கள் | | |
| 1. | இந்த யுத்த கர்மத்தில் புகுத்துவது ஏனோ? | 3 |
| 2. | கர்மமா புத்தியா எது சிறந்தது? | 4 |
| 3. | இருவகை நிஷ்டைகள் | 5 |
| 4. | போலி யோகமும் போலித் துறவும் உனக்கு வேண்டாம் | 8 |
| 5. | எவனும் செய்கையின்றி இருப்பதில்லை | 10 |
| 6. | பொய்யொழுக்கமுள்ளவன் யார்? | 11 |
| 7. | கர்மயோகியே சாலச்சிறந்தவன் | 13 |
| 8. | உன் இயற்கையை அனுசரித்துத் தொழிலைச் செய் | 14 |
| 9. | பற்றைக் களைந்து தொழிலைச் செய் | 15 |
| 10. | பிரமாவின் படைப்பு விநோதம் | 16 |
| 11. | வேள்வியினால் தேவர்களைப் பூசிக்கக் கடவீர் | 18 |
| 12. | தேவர்களுக்கு நன்றி செலுத்தாது உண்பவன் கள்வன் | 19 |
| 13. | வேள்வியின் மிச்ச உணவை உண்பதே சிறந்தது | 21 |
| 14. | கர்மத்திலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன | 23 |
| 15. | யக்ஞ கர்மமே பிரமத்தின் சிறந்த இருப்பிடம் | 24 |
| 16. | கர்மசக்கரத்தின் தன்மையை அறிந்து உன் வாழ்க்கையைச் செலுத்து | 26 |
| 17. | கர்மசக்கரத்திலிருந்து விடுபட்ட ஞானியின் ஆனந்த நிலை | 28 |
| 18. | ஜீவன்முக்தன் எப்படியிருப்பான்? | 29 |
| 19. | கர்மசக்கரத்தை அனுசரித்தால் உனக்கு மேலான பதவிகள் நிச்சயம் | 31 |

| பாடல்கள் | பக்கம் |
|---|---|
| 20. நீயும் கர்மத்தைச் செய்வதற்கே தக்கவன் | 32 |
| 21. உயர்ந்தோன் செய்கையே உலகுக்குப் பிரமாணமாகிறது | 33 |
| 22. நான் தொழிலிலேதான் இயங்குகின்றேன் | 33 |
| 23. மனிதர் என் வழியையே பின்பற்றுகின்றனர் | 34 |
| 24. எனது ஆணையும் நியதியும் இல்லாவிடில் எல்லாம் எங்கும் குழம்பியவண்ணமே இருக்கும் | 35 |
| 25. அறிவில்லாதோர் கர்மபலத்தில் பற்றுடையோர்; அறிவுடையோர் அதில் பற்றில்லாதவர் | 37 |
| 26. கர்மயோகி தன் தொழிலைச் செய்வது மாத்திரமன்றி ஏனையோரையும் அவரவர்க்குரிய தொழில்களிற் செலுத்துதல் வேண்டும் | 38 |
| 27. தொழில்கள் பிரகிருதியால் இயக்கம் பெறுகின்றன | 40 |
| 28. குணங்களிலிருந்தே கர்மங்கள் ஜனிக்கின்றன | 41 |
| 29. அபக்குவிக்கு ஞானோபதேசம்வேண்டியதில்லை | 43 |
| 30. யான் எனது என்பது அற்று, நின்று, போர்செய் | 44 |
| 31. தொழில்களிலிருந்து விடுபடுவது எப்படி? | 45 |
| 32. நைஷ்கர்மிய மதத்தை அனுசரியாதோர்க்கு ஏற்படும் கதி | 47 |
| 33. இயற்கையை அடக்குதல் பயன்படாது | 48 |
| 34. மனத்தில் எழும் விருப்பு வெறுப்புக்கள் செல்லும் கதிக்குப் பெருந்தடைகள் | 49 |
| 35. குணமற்றதாயினும் சுவதர்மமே சிறந்தது | 51 |
| 36. பரதர்மத்தில் என்னைச் செலுத்திக்கொண்டிருப்பது எது? | 53 |
| 37. காமக்குரோதங்களே பரதர்மத்திற் செலுத்துகின்றன | 56 |
| 38. காமத்தால் இந்த ஜீவாத்மா மறைக்கப்பட்டிருக்கிறது | 57 |

பாடல்கள் பக்கம்

39. இந்தக் காமமே ஞானிக்கு நித்திய பகை 58

40. இந்தக் காமமே ஜீவாத்மாவைப் பலவாறு மயக்குகிறது 59

41. முதலில் நீ இந்திரியங்களைக் கட்டுப்படுத்து 60

42. ஜீவாத்மாவுக்கு மேலான பொருள் உலகிலில்லை 62

43. ஆசை எனும் உன் பகைவனைக் கொல்வாய் 63

## முக்குணப் பாகுபாடு – பகவத்கீதை

### அத்தியாயம் 14

முன்னுரை 65

1. மேலான பரஞானத்தை உனக்கு உபதேசிக்கிறேன் 67

2. பரஞானம் பெற்ற பெரியோர் பிறவார் இறவார் 68

3. எனக்கு ஆதாரம் மஹத் எனப்படும் பிரமமே 70

4. எல்லா வடிவங்களுக்கும் பெரிய முதற் காரணம் மஹத் எனப்படும் இந்தப் பிரமமே 72

5. குணங்கள் ஜீவாத்மாவைப் பிணித்துக் கொள்கின்றன 73

6. சத்துவகுணத்தின் இயற்கைத் தன்மைகள் 74

7. ரஜோகுணத்தின் இயற்கைத் தன்மைகள் 75

8. தமோகுணத்தின் இயற்கைத் தன்மைகள் 77

9. முக்குணங்களும் பந்தங்களே 78

10. முக்குணங்கள் தமக்குள் ஒன்றோடொன்று இணங்குவதில்லை 79

11. சத்துவகுணத்திற் பிறப்பன எவை? 81

12. ரஜோகுணத்திற் பிறப்பன எவை? 82

13. தமோகுணத்திற் பிறப்பன எவை? 83

14. சத்துவகுணம் எங்கே சேர்த்துவிடுகின்றது? 84

15. தமோகுணம் ரஜோகுணம் ஆகிய இவை மறுமையில் எங்கே சேர்த்துவிடுகின்றன? 84

| பாடல்கள் | | பக்கம் |
|---|---|---|
| 16. | முக்குணங்களால் விளையும் பலன்கள் | 86 |
| 17. | முக்குணங்களிலிருந்தும் தோன்றுபவை | 87 |
| 18. | முக்குணங்களினுலும் பெறப்படும் உலகங்கள் | 88 |
| 19. | ஜீவாத்மா குணங்களிலிருந்து நீங்கி நிற்றல் | 89 |
| 20. | முக்குணங்களையும் கடந்தவன் அமிர்தநிலை பெறுகின்முன் | 91 |
| 21. | முக்குணங்களையுங் கடந்த ஞானி எங்ஙனம் ஒழுகுவான்? | 92 |
| 22. | ஞானிகளிடத்து விருப்பு வெறுப்பு இல்லை | 94 |
| 23. | ஞானி அலட்சியம் செய்பவன் போலவு மிருப்பான்; இலட்சியம் கொண்டவன் போலவு மிருப்பான் | 95 |
| 24. | ஞானி பொன்னையும் ஓட்டையும் நிகராகவே காண்பன் | 96 |
| 25. | ஞானி எல்லாச் சங்கற்ப விகற்பங்களையும் கடந்தவன் | 97 |
| 26. | பக்தி யோகத்தால் இறைவனை வழிபடுபவன் குணங்களைக் கடந்தவன் | 98 |
| 27. | பிரமத்துக்கு வேறில்லாத என்னிடத்தில் தோன்றுவன | 99 |


## அநுபந்தம்


| | | |
|---|---|---|
| 1. | கர்மயோகமும் - சாங்கிய தரிசனமும் | 101 |
| 2. | ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குச் செய்த உபதேசம் | 102 |
| 3. | கர்மயோகம் — அதன் பொதுநிலை | 105 |
| 4. | கர்மயோகம் — அதன் சிறப்புநிலை (1) | 107 |
| 5. | கர்மயோகம் — அதன் சிறப்புநிலை (2) | 109 |
| 6. | முக்குணப் பாகுபாடு | 111 |
| 7. | பக்தியோகம் | 113 |
| 8. | சாங்கிய யோகம் | 115 |
| 9. | சாங்கிய யோகம் — அதன்சார்பாக ஒரு வேண்டுகோள் | 118 |
| 10. | அருஞ்சொற் பொருள்விளக்கம் | 119 |

பகவத்கீதை 3ஆம், 14ஆம் அத்தியாயங்களில் வரும் வடமொழி மந்திரங்களுக்குப் பதிலாக, சேர் பொன். இராமநாதன் அவர்கள் அம்மந்திரங்களை மொழி பெயர்த்து வழங்கிய அறிவுரைகளே இந்நூலிற் தரப்படுகின்றன.

உ
சிவமயம்

# கர்மயோகம்

## முன்னுரை

பாண்டவர்களும் கௌரவர்களும் யுத்த களத்தில் எதிர்த்துநிற்குஞ் சமயத்தில் அர்ச்சுனனுக்கு நேரிட்ட மனச்சோர்வையுந் துக்கத்தையும் நிவிர்த்திசெய்யும்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் உபதேசித்த உண்மைகள் பகவத்கீதையில் பதினெட்டு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடநூற் பகுதியில் 3ஆம் அத்தியாயத்திற் கூறப்படும் கர்மயோகத்தைப் பற்றிய அறிவுரைகளும், 14ஆம் அத்தியாயத்திற் கூறப்படும் குண விபாக யோகத்தைப் பற்றிய அறிவுரைகளுமே இடம்பெறுகின்றன.

ஸ்ரீ கிருஷ்ணபகவானின் உபதேசமொழிகளைக் கேட்டுத் தெளிந்ததன் பின்னர் அர்ச்சுனன் தன் சோர்வெல்லாம் நீங்கப்பெற்று கர்மயோக அனுஷ்டானம் கைவரப்பெற்று, தர்மக்ஷேத்திரத்தில் தனிப்பெரும் வீரனாய் நின்று போர் புரிந்து தர்மத்தை நிலைநாட்டிய நிகழ்ச்சியை மஹாபாரதத்திற் படித்தறிக. பகவத் கீதை என்ற சொற்பதம் பகவான் மொழிந்தவை எனப் பொருள்படும். பகவத் கீதை மூன்றும் அத்தியாயம் கர்மயோகத்தின் பொதுநிலை, சிறப்புநிலை

ஆகிய இரண்டு நிலைகளையுந் தெளிவாக விளக்குவதுமன்றி, அந்த யோகத்தினால் ஒருவன் பெறக்கூடிய சித்திகளையும் பெறுபேறுகளையும் நிஷ்டை நிலைகளையுங் கூறுகின்றது. ஆணவ மல சம்பந்தத்தினாலே தானல்லாதவற்றைத் தானென்று மயங்கும் உயிர்க்கூட்டங்களை உய்யக்கொள்ளும் பொருட்டே கர்மங்களும் சரீரங்களும் புத்திகளும் போகங்களும் உண்டாயின வென்றும், மயக்கத்தினால் வரும் இன்ப துன்பங்களை நிவிர்த்தி செய்வதற்கு சுவகர்மத்தை மிகுந்த அன்போடும் சிரத்தையோடும் ஒருவன் அநுஷ்டிக்க வேண்டுமென்றும், கர்மங்களின் பலன் தன்னைப் பற்றாதிருத்தற்குத் தான் ஆசை அபிமானங்கள் இல்லாது சமபுத்தி பெற்றவனாய் மனத்தின் வேககதி, மந்தகதி ஆகிய இரண்டையும் நீக்கி சுவகர்மங்களைச் செய்து ஒழுகவேண்டுமென்றும், அவ்வாறு ஒழுகும்பொழுது தன்னிடத்தில் அற்புதமான செயலற்ற நிலையாகிய நைஷ்கர்மிய நிலை ஓங்கிப் பொலியுமென்றும், அந் நிலையினால் மேலான ஞானம் தன்னிடத்தில் வந்து சித்திக்குமென்றும், ஞானம் வாய்க்கவே பயம் துக்கம் ஆகிய இவை பற்றறக் கழியுமென்றும் இந்த அத்தியாயத்திற் கூறப்படுகிறது. ஆசை அபிமானங்களால் உந்தப்பெற்றுப் பலன் கருதிச் செய்யப்படும் கர்மாக்கள் பிறப்பிறப்புக்களைத் தருவதனால் அவற்றை வெறுங் க்ர்ம நிகழ்ச்சிகளென்று கூறலாமேயன்றி அவற்றைக் கர்மயோக நிகழ்ச்சிகளெனக் கருதுதல் கூடாது.

# அறிவுரைகள்

## 1

### இந்த யுத்த கர்மத்தில் புகுத்துவது ஏனோ?

அர்ச்சுனன் :

ஜனார்த்தன, கேசவ, கர்மத்திலும் புத்தி மிகப் பெரிதென்று உனக்கு எண்ணமானால், அகோர யுத்த கர்மத்தில் ஏன் என்னை ஏவுகின்றாய்.

பொழிப்பு :

ஜனார்த்தன! செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்த தென்பது நின் கொள்கை யாயின் இந்தக் கொடிய செய்கையில் என்னைப் புகுத்துவது என்னே! கேசவா?*

குறிப்பு : 1

ஜனார்த்தனன், கேசவன் என்பன ஸ்ரீ கிருஷ்ணபகவா னின் மற்றைய நாமங்கள்.

குறிப்பு : 2

அர்ச்சுனன் செய்கைக்கும் புத்திக்கும் ஒரு தொடர்பு மில்லையென எண்ணிக் கொடிய செய்கையில் ஏன் என்னை ஏவுகின்றாய் என இங்கு வினவுகின்றான். அவ்வாறு அவன் எண்ணியமைக்குக் காரணம், பலன் நோக்கிச் செய்யப் படும் செய்கைக்கும் புத்தி யோக நிலைக்கும் ஒரு தொடர் பும் இல்லையென்றும் அதனாற் செய்கையிலும் பார்க்கப் புத்தியோக நிலையே மேலானதென்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் முந்திய அத்தியாயத்திற் கூறியமையேயாகும். கர்மா முக்கியமன்று; கர்மா செய்யும்பொழுது இருக் கும் மனோபாவமே முக்கியமாகு மென்பது முந்திய அத்தி யாயத்தில் நிகழ்த்தப்பெற்ற உபதேசத்தின் சாரம்.

---

* சுப்பிரமணிய பாரதியார் — பகவத்கீதை மொழிபெயர்ப்பைத் தழுவி எழுதப்பெற்றது.

குறிப்பு: 3

கொடிய செய்கை, பலருங் கொலையுண்டு இறப்ப தற்கு ஏதுவான கோரமான யுத்தத்தைக் குறித்தது. க்ஷத்திரிய குலத்தில் உதித்தவன் அர்ச்சுனன் ஆதலின், அவனைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் ''நீ சமத்துவ நிலைபெற்று முறையாக யுத்த கர்மத்தைச் செய்'' எனப் பணித்தனர். பணித்தபொழுது மனக்கலக்கத்துடன் அர்ச்சுனன் எழுப்பிய வினாவே மேலே தரப்பட்ட அறி வுரையின் சாரமாகும்.

## 2

## கர்மமா புத்தியா எது சிறந்தது ?

**கலப்புள்ளதுபோ லிருக்கின்ற வாக்கியத்தால் எனது புத்தியை மயக்குகின்றவன்போலிருக் கின்றாய். கர்மம், புத்தி என்ற இரண்டனுள் எதனால் நான் சிரேயஸை அடைவேனோ, அவ் வொன்றை நிச்சயஞ்செய்து கூறுவாயாக.**

பொழிப்பு:

குழப்பமான பேச்சினால் என் புத்தியை மயங்கச் செய்கிறாய். ஆதலால், எது எனக்கு நன்மைதரும் என்பதை உறுதிப்படுத்தி ஒரே வார்த்தையாகச் சொல்.

குறிப்பு: 1

அர்ச்சுனன் கர்மமும் புத்தியும் ஒன்றையொன்று பற்றியுள்ளன என்பதை அறியாதவனாதலின், 'கர்மமா புத்தியா எனக்கு மேலான சுகத்தைத் தரக்கூடியது' என்ற பொருத்தமற்ற கேள்வியொன்றை இச் செய்யுள் மூலம் எழுப்புகின்றான்.

குறிப்பு: 2

ஸ்ரீ கிருஷ்ணபகவானின் உபதேச தாற்பரியத்தை உணர்ந்துகொள்ளும் சக்தியின்றி கர்மம் புத்தி ஆகிய

இரண்டனுள், 'ஒரு சந்தர்ப்பத்தில் புத்தி மேலானதென்றும், வேருெரு சந்தர்ப்பத்தில் கர்மமே மேலானதென்றும் இந்தப் பகவான் கூறுகின்ருரே' என அர்ச்சுனன் மனக் கலக்கங் கொண்டு ''இது குழப்பமான பேச்சு'' என்ருன்.

குறிப்பு: 3

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனை நோக்கி ஒரு சந்தர்ப்பத்தில், ''நீ க்ஷத்திரியனுதலின் உனக்குக் கர்மமே அதிகாரம். அதுவே உனக்கு மேலானது'' என்ருர். இன்னெரு சந்தர்ப்பத்தில், ''நீ கர்மத்திற் பிரவேசிக்கும் பொழுது பலன்களில் மனத்தைச் செல்லவிடாது புத்தியைச் சரணடைந்து அதனை மேலானதாகப் பேணிக் கொள்ளல் வேண்டும்'' என்ருர். ஒன்றுக்கொன்று முரண் போலத் தோன்றும் இவ்வுபதேச மொழிகளால் அர்ச்சுனன் மனம் குழம்பி நின்ருன் என அறிக.

குறிப்பு: 4

பின்வரும் அறிவுரைகள் மூலம் கர்மத்திற்கும் புத்திக்கும் இடையிலுள்ள தொடர்பையும், கர்மத்துக்கும் கர்ம பலனுக்குமிடையிலுள்ள தொடர்பையும், கர்மானுஷ்டானத்துக்கும் கர்மத்திலிருந்து நீங்கி நிற்கும் நிலைக்கும் இடையிலுள்ள தொடர்பையும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனன்மீது அளவற்ற தயவோடு விளக்கி அருளுகின்ருர்.

## 3

## இருவகை நிஷ்டைகள்.

**ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்தருளுகின்ருர்:**

**பாபமற்றவனே! இந்த லோகத்தில் சாங்கியர்களுடைய ஞானயோகத்தாலும் யோகிகளுடைய கர்ம யோகத்தாலும் நிஷ்டை இரு விதமாக முன் என்னுற் கூறப்பட்டது.**

பொழிப்பு :

பாபமற்றவனே! இவ்வுலகத்தில் இரண்டுவித நிஷ்டைகள் முன்னர் என்னுற் கூறப்பட்டன. சாங்கியர்களின் ஞானயோகத்தால் எய்துவது ஒன்று. யோகியர்களின் கர்மயோகத்தால் எய்துவது மற்றையது.*

குறிப்பு : 1

'நான் தர்மத்திற்கு விரோதமாக நடக்கின்றவன் போலும்' என எண்ணிப் பயத்தையும் துக்கத்தையும் அடைந்துநிற்கும் அர்ச்சுனனுக்கு அவற்றைப் போக்கி அருளுவதற்குப் 'பாபமற்றவனே' என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவனை விளிக்கின்றுர்.

குறிப்பு : 2

இவ்வுலகம் எனக் கூறியது, கர்மேந்திரியம், ஞானேந் திரியம் முதலிய் கருவிகளைத் தாங்கி கர்மம் செய்தற் குரியதாகிய கர்மபூமி இவ்வுலகம் என உணர்த்தும் பொருட்டு.

குறிப்பு : 3

முந்திய பிறப்பிலேயே உலக அநித்தியத்தை நன்கு உணர்ந்து தத்தமக்குரிய சுவ கர்மங்களை விருப்பு வெறுப் பின்றி அன்போடும் சிரத்தையோடும் செய்துவந்த உயிர் களுக்கு மாதாவின் கர்ப்பத்திலேயே சத்துவகுண சொரூப மாகிய சாங்கியத் தன்மை இயல்பாகவே அமைந்துவிடும். இத்தன்மை பெற்றவர்கள் கர்ப்பத்திலிருக்கும்பொழுதே நிராசை கைவந்த மெய்யறிவு முதிர்ச்சி பெற்ற உயிர்க ளாய்த் திகழுவர். இவ்வுலகில் அவதரித்த பின்னர் இவர்கள் சிந்தனைகள் தியானங்கள் முதலியன சச்சிதா னந்த முழுமுதற் பொருளாகிய இறைவனைப்பற்றியனவே யாகும். இந்தச் சாங்கியர்களின் தூய்மை நிறைந்த உள் ளத்தில் வந்து வாய்க்கும் யோகம் ஞானயோகம் எனக் கூறப்படும்.

* இரண்டு யோகங்களும் ஒன்றையொன்று தழுவிநிற்பன. இராதா கிருஷ்ணன் — பகவத்கீதை : பக். 132. 1960ஆம் ஆண்டுப் பதிப்பு.

குறிப்பு: 4

ஆசை காரணமாக மனத்தின்கண்ணே விருப்பு வெறுப்பு நிகழ, அவற்றால் வேதனையுற்று அவை இரண்டையுஞ் சமப்படுத்துவதற்குப் பிரயத்தனஞ் செய்பவர்களே யோகிகள். இவர்களுக்கென வகுக்கப்பட்ட அப்பியாசங்கள் எட்டாகும். அவை எட்டையும் ஒருங்கே சேர்த்து அட்டாங்க யோகம் எனக் கூறுவர். குறிக்கப்பட்ட அந்த எட்டு அங்கங்களும் பின்வருவன:

(அ) இயமம் — புலன்களை அடக்கும் அப்பியாசங்கள்.

(ஆ) நியமம் — புலன்களுக்கு, மேன்மை வாய்ந்த உறுதியான பழக்கங்களைத் தரும் அப்பியாசங்கள்.

(இ) ஆசனம் — மனத்துக்குச் சுகத்தையும் சாந்த அனுபவத்தையும் தரவல்ல இருப்பு நிலைகள்.

(ஈ) பிராணாயாமம் — பிராணவாயுவின் 'உட்செல்வதும் வெளிவிடுவதும்' ஆகிய சுவாச இயக்க நிலைகளைத் தேய்விக்கவும் ஓய்விக்கவும் வல்ல உபாயங்கள்.

(உ) பிரத்தியாகாரம்—புறநோக்கிலே செல்லும் புற இந்திரியங்களை விடயங்களிலிருந்தும் திருப்பி அகநோக்கிற்குச் சாதகமாக்கிக் கொள்ளல்.

(ஊ) தாரணை — மனம் முதலிய அந்தக்கரணங்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தித் தன் இஷ்ட தேவதையின் சொரூபத்தில் நிறுத்துதல்.

(எ) தியானம் — புத்தி உறுதிப்பட்டு இஷ்ட தேவதையில் நிலைத்து நிற்கும்பொழுது மனம் அதனை நினைந்து நினைந்து அவிழ்ந்து அவிழ்ந்து பிரவாகித்துப் பெருகுதல்.*

* இராமநாதர் — பகவத்கீதை: பக். 78.

(ஏ) சமாதி — இஷ்ட தேவதையில் முழுவதும் கரைந்து பிரகாசம்பெற்றிருக்கும் ஆத்மாவாகிய தனது உண்மை வடிவத்தை அனுபவத்திற் காணும் நிலை. இதனைச் சைவ சித்தாந்திகள் 'ஆத்ம தரிசனம்' எனக் கூறுவர்.*

குறிப்பு : 5

மேற்கூறிய அட்டாங்க யோகிகளே கர்மயோக அனுஷ்டானத்திற்கு அருகதையுள்ளவர்கள். கருமங்களைச் செய்யும் பொழுது பலனைக் கருதாமல் ஈஸ்வரப் பிரீதியாக அவற்றைச் செய்யவல்ல பெரியோர்களே கர்ம யோகிகளாகும் — அவர்களே மனத்தில் இடையறுது எழும் விடய சுக இச்சைகளையும் விருப்பு வெறுப்பு நிலைகளையும் நீக்கிச் சமபுத்தி உடையராய்க் கருமங்களை ஆற்றவல்லோர்.

குறிப்பு : 6

மனம் புத்தி முதலிய அந்தக்கரணங்கள் அனைத்தும் உபசாந்தமுற்று உறுதிப்பட்டு நிற்கும் நிலை நிஷ்டை எனப்படும்.

## 4

## போலி யோகமும் போலித் துறவும் உனக்கு வேண்டாம்.

**கர்மங்களின் அனுரம்பத்தால் புருஷன் நைஷ்கர்மியத்தை அடைகிறுனில்லை. கர்மசந்யாசத்தாலேயே அந்த நைஷ்கர்மிய சித்தியையும் அடைகிறுனில்லை.**

பொழிப்பு :

தொழில்களைத் தொடங்காமலே இருப்பதனுல் மனிதன் செயலற்ற நைஷ்கர்மிய நிலை அடைவதில்லை. துறவினுலேயே மனிதன் ஈடேற்றம் பெற்றுவிடமாட்டான்.

---

* இராமநாதர் — பகவத்கீதை : பக். 78.

குறிப்பு : 1

நைஷ்கர்மியநிலை செயலற்றிருக்கும் நிலை. கர்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள் முதலியன செய்யும் கர்மங்களை நான் செய்யவில்லையென்றும், ஈஸ்வரனே அவற்றைச் செய்தும் செய்வித்தும் வருகின்றானென்றும், அவற்றால் வரும் பலன்களில் எனக்கு விருப்பு வெறுப்புக்கள் இல்லையென்றும், தான் தன் அறிவில் கண்டு ஆன்மா சாக்ஷி ரூபமாய் இருக்கும் தன்மை நைஷ்கர்மியநிலை யெனப்படும்.

குறிப்பு : 2

தொழில்களைத் தொடங்காதிருப்பவர்கள் தமோ குணம் மிகுந்துள்ள சோம்பர்கள். இவ்வுலகிற் பிறந்தவர்கள் அனைவருந் தொழில்களை — அதாவது தமது சுவ கர்மங்களைத் தொடங்கி நடத்தவேண்டியவர்களே. சுவ கர்மங்களை முறையாக சமபுத்தியுடன் நடாத்திவருங்கால் நைஷ்கர்மியநிலை வந்து சித்திக்கும்.* அந்த நிலை சித்தித்தாலன்றி ஞானமுமில்லை மோட்சமுமில்லை.

குறிப்பு : 3

துறவு துறவு எனக் கூறி உலகிலுள்ள அநேகர் சுவ கர்மங்களையும் சுவதர்மங்களையும் முற்றாக விட்டுவிடுகின்றனர். அதனால் அவர்கள் பெறுவது தமோகுண மிகுதியும் சோம்பருமே. அறிவு இச்சை செயல்கள் தொழிற்படாமையால் அவர்கள் சிறிதேனும் ஞான விளக்கமில்லாதவர்களாய், உலகுக்கே பெரும் பாரப்பொருள்களாய் மாறிவிடுகின்றனர்.

குறிப்பு : 4

கர்ம பலனைக் கருதாதிருக்கும் நிலையே சமய நூல்களில் துறவு எனக் கூறப்பட்டது. போலித் துறவினாலும் போலி யோகத்தினாலும் நைஷ்கர்மிய நிலையோ ஞானமோ மோட்சமோ சித்திப்பதில்லை என்பது இவ்வறிவுரையின் சாரமாகும்.

---

* இராமநாதர் — பகவத்கீதை: பக். 81.

குறிப்பு: 5

உயிர்கள் கர்மங்களைச் செய்யாதிருத்தல் இயலாது.* ஏனெனில் அவை தேகங்களைத் தரித்து தேகங்களுக்கேற்ற குணங்களால் எப்பொழுதும் உந்தப்படுகின்றன. உயிர்கள் தேகத்துக்குரிய குணங்களுக்கு அடிமைப்பட்டுச் சுதந்திர மிழந்து நிற்கும் நிலையை அடுத்த மந்திரம் விளக்குகின்றது.

## 5

### எவனும் செய்கையின்றி இருப்பதில்லை.

**சகலரும் தன்வசமற்று பிரகிருதி ஜன்ய குணங் களினால் கர்மத்தைச் செய்விக்கப்படுகின்றன ராதலால், ஒருவனும் ஒருசமயத்திலும் ஒரு கணமும் கர்மத்தைச் செய்யாதவனாக இருக் கின்றானில்லை.**

பொழிப்பு:

எவனும் ஒரு கணப்பொழுதேனுஞ் செய்கை யின்றி இருப்பதில்லை. தேக இயற்கையில் விளையும் குணங்களே எல்லா உயிர்களையும் அவசரமாகத் தொழில்புரிவிக்கின்றன.

குறிப்பு: 1

தேக இயற்கையின் குணங்களை பிரகிருதி குணங்கள் என்பர். அவை சத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம் என்பன. மனம் சுறுசுறுப்பாய் இருக்கும்பொழுது அது ரஜோகுணத்தின் வசப்படுகிறது. அது மந்தமுற் றிருக்கும்பொழுது தமோகுணத்தின் வசப்படுகிறது. இரண்டுமின்றி மனம் சாந்தமாயிருக்கும்பொழுது அது சத்துவ குணத்தின் வசப்படுகிறது.

குறிப்பு: 2

சத்துவகுண புருஷர்கள் சாந்தகுண முள்ளவர்களாய் புலமை மிக்கோராய் கடவுட்பக்தி யுடையவர்களாய்

* இராதாகிருஷ்ணன் — பகவத்கீதை: பக். 133. 1960ஆம் ஆண்டுப் பதிப்பு.

விளங்குவர். இவர்களுக்குச் சாந்தகுணம் கல்வியறிவு முதலியவற்ருற் பந்தப்) ஏற்படுகிறது. ரஜோகுணப் புருஷர்கள் விருப்பு வெறுப்பு நிலேகளில் மிகவும் அழுந்தி கர்மேந்திரியங்களின் வசப்பட்டுக் கர்மாக்கள் பல புரிந்து, கர்மாக்களால் மிகவும் பந்தமுறுகின்றனர். கர்மாக்கள் என்பது செயல்களேக் குறிக்கும். தமோகுண புருஷர்கள் அறிவு, இச்சை, செயல் எனப்படும் அடிப்படை ஆற்றல்கள் தானும் விளங்குதலின்றி, நித்திரை, சோம்பல், செயலின்மை முதலியவற்ருற் பந்தமுறுகின்றனர்.

குறிப்பு : 3

தேகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பும் மேலே கூறப்பட்ட மூன்று பிரகிருதி குணங்களின் வடிவாகவே அமைந்திருக்கின்றது. அதனுல், இக் குணங்கள் தேகத்தின் உறுப்புக்களே ஓயாமல் ஏவித் தொழில்களேச் செய்வித்துக் கொண்டே இருக்கின்றன. உயிர்கள் தங்களேக் குணங்களென்றும்,தேகத்தின் உறுப்புக்களென்றும், மயங்கிப் பந்தமுறுகின்றன. எப்பொழுது இந்த உயிர்கள் குணங்கள் தத்தம் தொழில்களேப் புரிகின்றனவெனக் காண்கின்றனவோ, அப்பொழுதே அந்த உயிர்கள் நைஷ்கர்மிய நிலேயைப் பெற்றுவிடுகின்றன.

## 6

### பொய்யொழுக்க முள்ளவன் யார் ?

**எவன் கர்மேந்திரியங்களே ஒடுக்கி மனசால் இந்திரியார்த்தங்களே நினேக்கின்ருனே அந்த விமூட புத்தியுள்ளவன் மித்தியாசாரன் என்று கூறப்படுகின்ருன்.**

பொழிப்பு :

கர்மேந்திரியங்களே அடக்கிக்கொண்டு, ஆனுல் இந்திரிய விஷயங்களே மனத்தால் மனனஞ் செய்துகொண்டு இருப்பவனுகிய மூடாத்மா, பொய்யொழுக்கமுள்ளவனென்றுசொல்லப்படுகின்ருன்.

குறிப்பு: 1

கர்மேந்திரியங்களை அடக்குதல் பொய்யொழுக்கத்துக்கு ஏதுவாகின்றது என்பது இங்கு கூறப்படுகின்றது.

குறிப்பு: 2

கர்மேந்திரியங்களாவன வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்பன. வாக்கு வசனித்தலைச் செய்வது. அதன் செயல் உள்ளத்தில் எழும் கருத்துக்களைச் சொற்கள் மூலம் வெளிப்படுத்தலாகும். வாக்கு வசனித்தல் ஆகிய தன் தொழிலைச் செய்யாது விடுதலும், பாதம் நடத்தல் ஓடல் முதலிய தன் தொழில்களைச் செய்யாது விடுதலும், பாணி கொடுத்தல் வாங்கல் முதலிய தன் தொழில்களைச் செய்யாது விடுதலும், பாயு உபஸ்தங்கள் மலசல விசர்க்கம் முதலிய தத்தம் தொழில்களைச் செய்யாது விடுதலும் கடைசியில் பொய்யொழுக்கங்களுக்கு ஏதுவாகின்றது என்பதையே இப்பாடல் கூறுகின்றது.

குறிப்பு: 3

இந்திரியங்களை அடக்குபவன்போல நடித்து ஓரிடத்திற் கண்ணை மாத்திரம் மூடிக்கொண்டு இந்திரிய விஷயங்களை மனனஞ் செய்துகொண்டு இருக்கும் போலி யோகியே இங்கு கண்டிக்கப்படுகின்றான். கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்து அறியப்படும் இந்திரிய விஷயங்களைச் சதா சிந்தித்துக்கொண்டு இருப்பவன், எவ்வாற்றாலும் யோகியாகவோ துறவியாகவோ இருக்கமாட்டான் என்பது கருத்து. *

குறிப்பு: 4

போலி யோகமும் போலித் துறவும் உலகில் நிகழ்வதற்குக் காரணங்கள் பல. ஆன்ம விசாரமென்பது சிறிதுமின்றி, அறியாமையால், கோபத்தால், போலிக் கௌரவநாட்டத்தால், கடன்காரர் பயத்தால், பொருளை இழந்துபோன துன்பத்தால், நெருங்கிய உறவினரைப் பறிகொடுத்த பெருங் கவலையால் நிகழும் துறவு பெரும் பான்மையும் போலித் துறவிலேயே ஒருவனைச் செலுத்தி விடுகிறது. ‡

---

* இராதாகிருஷ்ணன் — பகவத்கீதை: பக். 134; 1960ஆம் ஆண்டுப் பதிப்பு.

‡ இராமநாதர் — பகவத்கீதை: பக். 84.

## 7

## கர்மயோகியே சாலச் சிறந்தவன்.

**அர்ச்சுன, மனசால் இந்திரியங்களை ஒடுக்கி கர்ம யோகத்தைக் கர்மேந்திரியங்களால் எவன் சங்க மற்று ஆரம்பஞ் செய்கின்றானோ அவன் இவனி லும் வேறு.**

**பொழிப்பு :**

அர்ச்சுனா ! எவன் இந்திரியங்களை மனத்தால் கட்டுப்படுத்திக்கொண்டு கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைப் பற்றற்று அனுஷ்டிக்கின்றானோ அவன் சிறந்தவன்.

குறிப்பு : 1

முதலில் இந்திரியங்கள் எனக் கூறியது ஞானேந்திரி யங்களை — ஞானேந்திரிய்ங்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. இவை இயற்கையாகவே தத்தம் புற விஷயங்களாகிய பரிச, ரச, ரூப, கந்த, சத்தங்களைப் பற்றிக்கொள்வன. அங்ஙனம் புற விடயங்களைப் பற்ற விடாமல், ஞானேந்திரியங்களை மனத்தால் உள்ளே இழுத்துவைத்தலே இந்திரியங்களைக் கட்டுப்படுத்தலாகும்.

குறிப்பு : 2

கர்மேந்திரியங்களால் கர்மயோகம் அனுஷ்டித்தல்— கர்மபலன் நோக்காது சமபுத்தியுடன் நின்று தனக்கு என்று ஏற்பட்ட சுவ கர்மாக்களைச் செய்து ஒழுகுதல்.

குறிப்பு : 3

கர்மேந்திரியங்கள் தத்தம் தொழில்களைச் செய்ய, தான் அவற்றின் வசப்படாது சாட்சி மாத்திரையாய் நிற்கும் கர்மயோகியே சிறந்தவன் எனக் கூறப்பட்டது. அவனே உண்மைத் துறவி என்றும் அறிவுறுத்தியவாறும்.

## 8

## உன் இயற்கையை அனுசரித்துத் தொழிலைச் செய்.

அகர்மத்திலும் கர்மம் மிகச் சிறந்ததானதால் உனக்கு நியமிக்கப்பட்ட கர்மத்தை நீ செய். அகர்மத்தால் சரீரத்தின் யாத்திரையும் நடைபெறாது.

**பொழிப்பு :**

உன் இயற்கையால் உனக்கு விதிக்கப்பட்ட தொழிலை நீ செய். தொழில் தொழிலின்மையைக் காட்டிலும் சிறந்ததன்றோ! தொழிலின்றி இருப்பதால் உடம்பைக் கொண்டுசெலுத்துதல்கூட உனக்கு இயலாமற் போய்விடும்.

குறிப்பு : 1

'க்ஷத்திரியனாகிய நீ உன் சுவதர்மத்தை அனுசரித்து உனக்குரிய தொழிலைச் செய்' என்று முதலில் பணித்தருளுகின்றார். கர்மேந்திரிய ஞானேந்திரியங்களையும் அறிவிச்சை செயல்களையுந் தகுந்தவாறு உபயோகிக்கத் தெரியாதவனே, தொழில் செய்யாது அவஸ்தையுறுகின்றான். அதுமாத்திரமன்றி, அவன் தன் சரீரத்தின் கதியாகிய போதல் வருதல் ஆகிய தொழில்களையே செய்ய இயலாது தத்தளிக்கின்றான்.

குறிப்பு : 2

கர்மம் செய்துகொண்டிருப்பதே இவ்வுலகில் உடம்பெடுத்த ஒவ்வொரு உயிர்க்கும் ஏற்பட்ட கதி என்பதை இச் செய்யுள் மூலம் வலியுறுத்துகின்றார். கதி — நிர்ணயிக்கப்பட்ட ஒழுக்கம்.

குறிப்பு : 3

தொழிலின்மை, தமோகுணத்தை மிகுதிப்படுத்திச் சோம்பல் முதலியவற்றிற் செலுத்திவிடும் என்று எச்சரிக்கின்றார் ஸ்ரீ கிருஷ்ணபகவான்.

## 9

## பற்றைக் களைந்து தொழிலைச் செய்.

**கௌந்தேய, யக்ஞார்த்த கர்மத்திலும் வேறான**
**கர்மத்தில் இந்த லோகம் கர்மபந்தனம்.**
**ததர்த்த கர்மத்தை சங்கமற்றவனாக நீ சேய்.**

**பொழிப்பு :**

கௌந்தேயனே! வேள்வியின் பொருட்டென்று செய்யப்படும் தொழில் தவிர மற்றைய தொழில்கள் மனிதருக்குத் தளையாகின்றன. ஆதலினாலே பற்றைக் களைந்து தொழில் செய்து கொண்டிரு.

குறிப்பு : 1

கௌந்தேயனே – குந்தியின் மகனே.
தளை – கட்டு அல்லது பந்தம்.

குறிப்பு : 2

இகபர சிற்றின்பங்களைக் கருதாமல் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்யப்படும் கர்மம் யக்ஞார்த்த கர்மம் அல்லது வேள்வியின் பொருட்டுச் செய்யப்படும் கர்மம் எனப்படும். சமயச்சடங்குகளுடன் கூடிய கிரியைகளும், அன்னதானம், பூதானம், வித்தியாதானம் முதலிய தானங்களும், விரதமனுஷ்டித்தல், தீர்த்த யாத்திரை செய்தல் முதலிய தவங்களும் பலன் நோக்காது ஈஸ்வர பிரீதியாக நிகழும் பொழுதே உண்மைக் கர்மயோக நிகழ்ச்சிகளெனக் கருதப்படுகின்றன.*

குறிப்பு : 3

இந்த உலகத்தில் வாழும் மனிதர்கள் பலன்களை நோக்கியே கர்மங்களைச் செய்வார்கள். அதனால் அவர்கள் எப்பொழுதும் கர்மங்களினாற் பந்திக்கப்படுகின்றனர்.

* இராமநாதர் — பகவத்கீதை: பக். 85.

குறிப்பு : 4

'' குந்தியின் மகனுகிய நீ 'நாங்கள் அரசாள வேண்டும் துரியோதனன் ஆதியோர் தோல்வியுற வேண்டும்,' என்ற இவை போன்ற எண்ணங்களை யெல்லாம் அறவே கை விட்டு, பற்றின்றி யுத்தத்தைச் செய்'' என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் இம் மந்திரம் மூலம் அர்ச்சுனனைப் பணித்து அருளுகின்ருர்.

## 10

## பிரமாவின் படைப்பு விநோதம்.

முற்காலத்தில் பிரஜாபதி பிரஜைகளை யக்ஞங்க ளோடு கூடி சிருஷ்டித்து இதனுல் அவித்யா வில் கட்டுண்ட ஜீவாத்மாவை வெளிவிடுங்கள். இந்த யக்ஞகர்மம் உங்களுடைய இஷ்டங் களுக்குக் காமதேனுவாகும் என்று கூறினர்.

பொழிப்பு :

முன்பு பிரமதேவர் பிரஜைகளாகிய சூட்சும பூதங்களையும் வேள்விகளையும் படைத்துப் பின்வரு மாறு சொன்னுர் : இந்த வேள்விகளினுல் ஜீவாத் மாக்களை உத்தாரணஞ் செய்யுங்கள். நீங்கள் விரும்பும் விருப்பங்களையெல்லாம் இந்த வேள்வி கள் உங்களுக்குக் கறந்து தரும். ( இங்கு பிரம தேவர் சூட்சும பூதங்களை விழித்துக் கூறினர் என்ற செய்தியை ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுன னுக்கு உபதேசித்து அருளுகின்ருர்.)

குறிப்பு : 1

முன்பு என்றது சிருஷ்டியின் ஆரம்ப காலத்தைக் குறித்தது. *

* இராமநாதர் — பகவத்கீதை : பக். 86.

குறிப்பு : 2

மாயையைக் கலக்கி மாயையிலிருந்துஞ் சூட்சும பூதங்களைத் தோற்றுவிக்கும் பதி பிரமா எனப்படுவர். சூட்சும பூதங்களைத் தன்மாத்திரைகள் எனக் கூறுவர். இந்தத் தன்மாத்திரைகளை உயிர்கள் விளங்கித் தோன்று வதற்கு ஏதுவாகிய வியஞ்சக சக்திகள் எனச் சைவ சித்தாந்திகள் கூறுவர். இந்தத் தன்மாத்திரைகள் ஒவ் வொன்றும் மகா சக்திவாய்ந்ததாயுள்ளது. அண்டத்தி லும் பிண்டத்திலும் உள்ளனவாகிய இந்தத் தன்மாத் திரைகள் ஒன்றினால் இன்னொன்று கவரப்பட்டும் இயக்க முற்றும் பெரிய கர்மயோகிகள்போல பரஸ்பரம் ஒன்று கூடும்போது ஜீவாத்மாக்கள் வெளிப்பட்டுத் தோன்று கின்றன. அதனாற்றான் பிரமதேவர் அந்தச் சூக்கும பூதங் களை விளித்து, ''நீவிர் பரஸ்பரம் ஒன்றுகூடி ஜீவாத் மாக்களை அவற்றின் அதிசூக்கும காரண நிலையிலிருந்து உத்தாரணஞ் செய்து அவை விளங்கித் தோன்றுமாறு உதவி புரிவீர்களாக'' என்று பணித்தருளினார்.

குறிப்பு : 3

தன்மாத்திரைகளின் மயமாகவே தூல சூக்கும உடம்புகளும் அவற்றுக்கு விடயமாகிய போக போக்கியப் பொருள்களும் இருந்து வருகின்றன. மஹா சக்திமய மாய்த் திகழும் இத் தன்மாத்திரைகள் பரஸ்பர சம்பந்த மாக ஒன்றுகூடி, ஜீவாத்மாவுக்கு அறிவை விளக்கும் விளக்குப்போல இருந்து அவனுக்கு வேண்டிய பக்குவங் களையும் போதனைகளையும் முத்திபரியந்தஞ் செய்யுந் தத்து வங்களாகவும் இருப்பதனால் — அவற்றைப் பிரஜைகள் எனக் குறிப்பிட்டார். பிரஜைகள் என்றால் தோன்றிய வர்கள் என்பது கருத்து. *

குறிப்பு : 4

தானம், தவம், யக்ஞம் ஆகிய மூன்றும் வேள்வி யென்றும் விசேஷ கர்மங்கள் என்றும் கூறப்படும்.

* இராமநாதர்—பகவத்கீதை: பக். 86.

இவற்றை நீங்கள் சிரத்தையோடு அன்புடன் செய்தால் உங்கள் மனம் எந்த இகபர சுகங்களை விரும்புகின்றதோ, அந்த இகபர சுகங்களெல்லாம் உங்களுக்கு எளிதில் வந்து கைகூடும் என்னும் உண்மையையே இப் பாடலின் பிற்பகுதி கூறுகிறது.

## 11

### வேள்வியினுல் தேவர்களைப் பூசிக்கக் கடவீர்.

**இதனுல் தேவர்களை மனேபாவனை செய்யுங்கள். அந்தத் தேவர்கள் உங்களை மனேபாவனை செய்வார்கள். ஒருவர்க்கோருவர் பாவனை செய்கின்றவர்களாய்ப் பரம சிரேயஸைப் பிறகு பேறுவீர்கள்.**

பொழிப்பு :

இந்த வேள்வியினுல் தேவர்களை உபாசித்து அவர்களுக்கு அன்பு செய்யக்கடவீர். அந்தத் தேவர்களும் உங்களுக்கு அன்புசெய்யக்கடவர். ஒருவர்க்கொருவர் பரஸ்பரமாக இருந்து இங்ஙனம் அன்புசெய்வதனுற் கடைசியில் உயர்ந்த முத்திப் பெரும்பேற்றைப் பெறுவீர்கள்.

குறிப்பு : 1

பூஜை, வேள்வி முதலிய கர்மானுஷ்டானங்கள் செய்து தேவர்களை உபாசனைசெய்யுங்கள் என இம் மந்திரங் கூறுகின்றது. பூசை செய்தல், வேள்வி இயற்றுதல், தானங் கொடுத்தல், தவத்திலிருத்தல் முதலிய மன அடக்க நிகழ்ச்சிகள் மனிதர்களுக்கும் அவர்களை உள்நின்று செலுத்தும் அதிதேவதைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பு நிலைகளையே சுட்டிக்காட்டுகின்றன. அதனுல்

''வேள்விகள் மூலம் தேவர்களைப் பூசிக்கக்கடவீர்'' என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனைப் பார்த்துக் கட்டளையிடுகின்றார்.

குறிப்பு: 2

பூசிக்கப்பட்ட தேவர்கள் பூசிப்பவர்களைத் தழுவியே நிற்பார்கள். பூசிப்பவர்கள்மீது அவர்களும் அன்பு செலுத்துவார்கள் என்றபடி.

குறிப்பு: 3

இங்ஙனம் தேவர்களைச் சிரத்தையுடன் பூசித்து வருங்கால், பல்வேறு பேறுகளுஞ் சித்திகளும் வாய்க்குமாயினும், அனைத்தையும்விட மிக மேலான முக்கிய பேறு பூசிக்கும் பூசகனுக்கு வாய்க்கும் சித்தசுத்தியே. இந்தச் சித்தசுத்தி பூரணமாக வந்து சித்தித்ததன் பின்னரே, விருப்பு வெறுப்பின்றி, சமபுத்தியுடன் பூசிக்கும் நிலையாகிய 'நைஷ்கர்மிய நிலை' வாய்க்கிறது. அந்த நிலை வாய்க்கவே, ஞானயோகப்பேறும், அதனைத் தொடர்ந்து முத்திப்பெரும்பேறும் சித்திக்கும் என இப்பாடலிற் கூறப்பட்டது.

குறிப்பு: 4

''தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலுள்ள சம்பந்தநிலையைத் தெளிந்து முதலில் தேவபூசை செய்யப் பயின்று கொள்வாய்'' என ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உணர்த்தியருளினார்.

## 12

## தேவர்களுக்கு நன்றிசெலுத்தாது உண்பவன் கள்வன்.

**தேவர்கள் யக்ஞத்தாற் பாவனை செய்யப்பட்டு உங்களுக்கு இஷ்டபோகங்களைக்கொடுப்பார்கள். அவர்களாற் கொடுக்கப்பட்டவைகளை அவர்களுக்குக் கொடாமல் எவன் அநுபவிக்கின்றானோ அவன் கள்வன்.**

பொழிப்பு :

வேள்வியிற் பாவனை செய்யப்பட்ட தேவர்கள் உங்களுக்கு விரும்பிய போகங்களையெல்லாந் தருவர். அவர்களுக்குக் கைம்மாறு செலுத்தாமல் அவர் கொடுப்பதை உண்பவன் கள்வனேயாவன்.

குறிப்பு : 1

'திவ்' என்ற வடமொழித் தாதுவில் தோன்றியது தேவன் என்னும் பதம். 'திவ்' பிரகாசத்தைக் குறிக்கிறது. எனவே, தேவர்கள் என்னுஞ் சொல் கருவி கரணங்களிலும் புத்தி சித்திகளிலும் பிரகாசம் பெற்ற ஆன்மாக்களைக் குறிக்கும். 'இவ்வுலகில், புண்ணிய கர்மங்கள் செய்தொழுகும் ஆன்மாக்கள் தேவப்பிறப்பை எய்துகின்றனர்' எனப் பெரியோர் கூறுவர்.

குறிப்பு : 2

யக்ஞம் முதலிய வேள்விகளினுல் அன்போடு உபாசிக்கப்படும் தேவர்கள் அன்போடு தரிசனமாகி உபாசிப்பவனுடன் கலந்து விரும்பின இகபர சுகங்களை அருளுகின்ருர்கள். அவர்களுடைய அருளும் கருணையும் இன்றி உபாசகனுக்குப் போகங்கள் கிடைப்பதில்லை. எனவே, அவர்களிடமிருந்து பெற்ற பொருளில் ஒரு சிறு பாகத்தையாயினும் அவர்களுக்கு நிவேதனஞ் செய்த பின்னரே ஒவ்வொருவருந் தமக்கு வழங்கப்பெற்ற போகத்திற் பிரவேசித்தல் வேண்டும்.

குறிப்பு : 3

தேவர்களுக்கு நிவேதனஞ் செய்யாது நன்றியுணர்ச்சியை வளர்க்காது போகத்தில் அழுந்துபவர்கள், மற்றவர்களின் பொருளை அபகரிக்குங் கள்வர்கள் தண்டிக்கப்படுவதுபோலத் தண்டிக்கப்படுவார்கள்.

குறிப்பு : 4

மிகப் புராதனமான இந்து தர்மத்தில் மனித உள்ளத்தில் நன்றியுணர்ச்சியையும் ஜீவகாருண்யத்தையும்

விளைவிக்கவல்ல ஐந்து மிகச்சிறந்த வேள்விகள் கூறப்பட்டுள்ளன.* அவையாவன :

(அ) தேவயக்ஞம் — தேவர்களுக்கு மந்திரபூர்வமாக ஹோமம் வளர்த்து மந்திரபூர்வமாகத் திரவியங்கள் நிவேதித்தல்.

(ஆ) பிதிர்யக்ஞம் — பிதிர்களுக்குப் பிரீதிசெய்யும் பொருட்டு எள்ளு, பிண்டம், தண்ணீர் முதலியன வழங்குதல்.

(இ) அதிதியக்ஞம்—விருந்தினரை மனைக்கு அழைத்து முறையோடு பூசை முதலியன செய்து அன்னம், கறி முதலியன உண்பித்தல்.

(ஈ) மாஹேஸ்வரயக்ஞம் — தம்மனைக்கு எழுந்தருளி வரும் சீவன்முக்தராகிய சிவனடியார்களுக்குப் பாதபூசை முதலியன செய்து, சிவபிரான் எனப் பாவித்துத் திருவமுது உண்பித்து அவர்களது ஆனந்த நிலையைப் பெருக்குதல்.

(உ) பூதயக்ஞம்—பூத பிரேத பைசாச கணங்களுக்குப் பலி முதலியன ஊட்டி அவைக்கேற்ற உணவுகளால் அவற்றைத் திருப்திப்படுத்துதல்.

## 13

## வேள்வியின் மிச்ச உணவை உண்பதே சிறந்தது.

**தேவ யக்ஞ சிஷ்டத்தை உண்ணுகின்ற சத்துக்கள் எல்லாப் பாபங்களில்நின்றும் விடப்படுகின்றனர். எந்தப் பாபிகள் தம் தேகத்துக்காகப் பாகம் செய்கின்றார்களோ, அவர்கள் துக்கத்தை அநுபவிக்கின்றார்கள்.**

* திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் — தேவாரம்: திருவெழுகூற்றிருக்கைப் பதிகம்.

பொழிப்பு:

வேள்வியின் மிச்சத்தை உண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகின்றார்கள். தம்பொருட்டென்றே உணவு அமைக்கும் பாபிகள் பாபத்தையே உண்ணுகின்றார்கள்.

குறிப்பு: 1

வேள்வியின் மிச்சமென்றது தன்னால் உபாசிக்கப் படும் அதிதெய்வத்துக்கு நிவேதனஞ் செய்தபின் எஞ்சிய அன்னம் பழம் முதலிய உணவுத் திரவியங்களைக் குறித் தது. அதிதெய்வம் — தனக்குக் கருவி கருணங்களைத் தந்து தன்னைக் கர்மங்களிலும் போகங்களிலும் உடனாய் நின்று செலுத்திநிற்குந் தெய்வ சக்தி. இதனைச் சைவசித்தாந் திகள் திரோதான சக்தி எனக் கூறுவர்.

குறிப்பு: 2

நல்லவர்கள் என்றது தன்னைப் பரிபாலித்துவரும் அதிதெய்வத்துக்குப் படைத்த அன்னத்தை அதன் திரு வருட் பிரசாதமென்று அன்புடன் உண்டு வருகிறவர் களைக் குறித்தது.

குறிப்பு: 3

தன் அதிதெய்வத்தை மறந்து தன் தேகசுகத்திற்கு மாத்திரம் அன்னத்தைப் பாகஞ் செய்கின்றவன் மேன் மேலும் பிறப்பிறப்புக்குட்பட்டுக் காமம் குரோதம் முதலிய ஆணவமல குணங்களால் வேதனையுற்றுச் சாந்தி யில்லாதவனாய்த் திரிவான்.

குறிப்பு: 4

அன்பே தன் சொரூபமாக இருக்கவேண்டிய ஜீவாத்மா வானவன் தேகத்தையே நான் என்றும் தேகத்தில் நிகழும் காமமோகங்களையே சுகமென்றும் கருதும்வரைக்கும் இப் பாடலிற் கூறப்படும் தேவபூசையைச் செய்ய வேண்டிய வனாக இருக்கிறான். அவனுக்கே இங்கு கூறப்பட்ட தேவ பூசை விதிக்கப்பட்டது.

## 14

## கர்மத்திலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன.

**அன்னத்தில் நின்று ஸ்தூல பூதங்கள் பிறக்கின்றன. மேகத்தில் நின்று அன்னம் பிறக்கின்றது. யக்ஞத்தில் நின்று மேகம் பிறக்கின்றது. யக்ஞம் கர்மத்தில் நின்று பிறக்கின்றது.**

பொழிப்பு :

கர்மத்திலிருந்து வேள்வி பிறக்கின்றது. வேள்வியிலிருந்து மழை உண்டாகிறது. மழையிலிருந்து அன்னம் தோன்றுகிறது. அன்னத்திலிருந்து தூல சரீரங்கள் உற்பத்தியாகின்றன.

குறிப்பு : 1

கர்மம் இருவகைப்படும். ஒன்று சாமானிய கர்மம். கர்மேந்திரியங்களால் நிகழ்த்தப்படும் தொழில்கள் அனைத்தும் இந்தச் சாமானிய கர்மத்தின்பாற்படுவன. மற்றையது விசேடகர்மம். வேள்வி, தானம், தபம் முதலியன விசேட கர்மங்களாகும். கர்மத்திலிருந்து வேள்வி பிறக்கின்றது எனக் கூறியது, அடிப்படைக் கர்மசக்தி அல்லது ஆணையிலிருந்து தேவப்பிரீதியின் பொருட்டுச் செய்யப்படுங் கர்மங்களாகிய வேள்விகள் தோன்றின என்பதைக் குறிப்பதன்பொருட்டு. சைவசித்தாந்திகள் இந்த அடிப்படைக் கர்ம சக்தியை ஆணையெனக் கூறுவர்.

குறிப்பு : 2

வேள்வியினால் மழை உண்டாகின்றது எனக் கூறியது, மனிதர்கள் தர்ம உணர்ச்சியோடு வேள்விகளைச் செய்ய, தர்மதேவதை தர்மத்துக்கு ஏற்றபடி மழையைப் பெய்விக்கின்றது என்பதை உணர்த்தும்பொருட்டு.

குறிப்பு : 3

நெல்லு, கோதுமை முதலிய தானிய வகைகள் எல்லாம் அன்னம் ஆகின்றன. இவற்றுள்ளே சூக்கும சரீரங்களோடு கூடிய ஜீவாத்மாக்கள் பொருந்தியுள்ளன. தூல சரீரத்தை விட்டு நீங்கிச்செல்லும் ஜீவாத்மாக்கள் சம்சார கதியில் இருக்கும்பொழுது, மேகமண்டலத்திற் பிரவேசித்து மழைத்துளிகளில் அகப்பட்டுத் தானியங்கள் நிறைந்துள்ள வயல்களில் வீழ்ந்து தானிய வேரினுல் இழுக்கப்பட்டு, கதிரிற் சென்று, நெல்லு, கோதுமை முதலிய தூல ரூபங்களைப் பெறுகின்றன. இது பற்றியே மழையிலிருந்து அன்னம் (தானியம்) பிறக்கின்றது எனக் கூறப்பட்டது.

குறிப்பு : 4

அன்னத்தின் சாரம் ஆண் பெண் இனங்களாகப் பிரிந்து விளங்கும் பிராணிகளின் சேர்க்கையால் தூல சரீரமாய்ப் பரிணமித்துக் கடைசியில் தாயின் கர்ப்பத்தி லிருந்து சிசுவாய்த் தோன்றுகின்றது. அன்னத்திலிருந்து தூல சரீரம் உற்பத்தியாகின்றது என்பதன் பொருள் இதுவே.

குறிப்பு : 5

யக்ஞ கர்மத்திலேயே அனைத்துந் தோன்றுகின்றன எனக் கூறிய பின்னர், யக்ஞ கர்மத்திலேயே சர்வவியாபக நித்திய வஸ்துவாகிய பிரமமும் நிலைத்திருக்கிறது எனவுங் கூறுகின்ருர்.

## 15

## யக்ஞ கர்மமே பிரமத்தின் சிறந்த இருப்பிடம்.

**கர்மத்தைப் பிரகிருதி பிரமத்தில் பிறந்ததாகவும், பிரகிருதி பிரமத்தை அழிவற்ற பரப்பிரமத்தில் நின்று பிறந்ததாகவும் நீ அறி. ஆதலால் சர்வ வியாபகமும் நித்தியமுமாகிய பரப்பிரமம் யக்ஞத் தில் பிரதிஷ்டை பெற்று நிற்கிறது.**

பொழிப்பு:

யக்ஞ கர்மம் பிரகிருதியிலிருந்து பிறப்பதென்றுணர். பிரகிருதி அழிவற்ற பரப்பிரமத்திலிருந்து தோன்றுவது. ஆதலால் அழிவற்ற இந்த சர்வவியாபக பரப்பிரமம் யக்ஞ கர்மத்தில் நிலை பெற்றுள்ளது.

குறிப்பு: 1

யக்ஞ கர்மம், சாமானிய கர்மம் ஆகிய இருவகைக் கர்மங்களும் ஒருகாலத்தில் இறைவனுற் சிருஷ்டிக்கப் பட்டனவல்ல. அவை இறைவனுடைய திருவருளால் பிரகிருதியிலிருந்தும் தோன்றியன. சைவசித்தாந்திகள் இறைவனுடைய திருவருளால் மாயையிலிருந்து உலகம் தோன்றிற்று எனக் கூறுவதுபோல இங்கு பிரகிருதியிலிருந்து கர்மம் தோன்றிற்று எனக் கூறப்படுகின்றது. பிரகிருதி முதற் காரணம். கர்மம், முதற்காரணத்திலிருந்து தோன்றிய காரியம்.

குறிப்பு: 2

தோன்றியும் மறைந்தும் ஒடுங்கியும் விரிவுபெற்றும் இருக்கும் இயல்பினதாகிய பிரகிருதி அழிவற்ற பரமாத்மாவிலிருந்து தோன்றியது. இறைவனிடத்திலே ஒடுங்கிய மாயை அவனிடத்தில் தோன்றிய தன்மைபோல சிதாகாச வடிவமாகிய பரமாத்மாவில் ஒடுக்கம்பெற்ற பிரகிருதி பரமாத்மாவிலிருந்து தோன்றியது எனக் காண்க. ஏனெனில், பரப்பிரமமாகிய பரமாத்மாதான் பிரகிருதியாயிற்று என்று கருதவே கூடாது.* சைவசித்தாந்திகள் இந்தப் பிரகிருதியைப் பரிக்கிரகசக்தி எனக் கூறுவர். அனுதிமல சம்பந்தமுற்ற ஆன்மாக்களின் மலங்களை நீக்கும்பொருட்டு பிரகிருதியை முதற் காரணமாகக் கொண்டு முறையே கர்மங்களும் யக்ஞங்களும், அன்னங்களும் தூலசரீரங்களும் ஆகிய காரியங்கள் தோற்றுவிக்கப்

* இராமநாதர்—பகவத்கீதை: பக்; 100.

பட்டன. கர்மங்களால் தன்னைப் பூசித்து மலங்கள் நீங்கி மேலான பதவிகளைப் பெற்று ஆன்மாக்கள் உய்யவேண்டு மென்ற கருணையினுல் இறைவன் தனது திருவருட்சக்தி யாற் பிரகிருதியிலிருந்து கர்மங்களைத் தோற்றுவித்தனன் என அறிக.

குறிப்பு : 3

யக்ஞம், தானம், தாபம் முதலிய விசேட கர்மங் களை முறையாக அனுஷ்டித்து ஒழுகும் பெரியோர்களில் பரமாத்மா நிலையாக நின்று பிரகாசிக்கும். இறைவனின் திருவருளைச்சிந்தித்தும் தியானித்தும் நாள்தோறும் கர்மா னுஷ்டானங்கள் புரிந்து வாழும் ஞானிகளிடத்தில் இறை வன் தயிரில் நெய்போல விளங்கித் தோன்றுவன் எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறும். இந்த உண்மையையே இந்தப் பாடல் பரப்பிரமம், யக்ஞகர்மத்தில்—அதாவது யக்ஞகர்மம் செய்தொழுகும் பெரியோரிடத்தில், நிலை பெற்றுள்ளது எனக் கூறுகிறது.

## 16

## கர்மசக்கரத்தின் தன்மையை அறிந்து உன் வாழ்க்கையைச் செலுத்து.

**பார்த்த, எவன் இவ்விதம் நடத்தப்பட்ட கர்மசக்கரத்தை இவ்விடத்தில் அநுசரிக்க வில்லையோ, அவன் துன்பத்தையே ஜீவனமாகக் கொண்டும் இந்திரியக் கிரீடையைப் பெற்றும் பயனின்றிச் சீவிக்கின்றுன்.**

பொழிப்பு :

இங்ஙனம் ஒய்வு ஒழிவு இன்றிச் சுழன்றுவரும் கர்மசக்கரத்தை இவ்வுலகிற் பின்பற்றி ஒழுகா தோன் பாப வாழ்க்கையுடையான். பார்த்தா, அவன் வாழ்க்கை விழலேயாம்.

குறிப்பு: 1

பிரகிருதியிலிருந்து கர்மவஸ்துத் தோன்ற அதிலிருந்து யக்ஞமும், யக்ஞத்தில் நின்று மேகமும், மேகத்தில் நின்று அன்னமும், அன்னத்தில் நின்று தூல சரீரமும், பின் கர்மமும் என இவ்வாறு பிரளயகாலம் வரையும் காரண காரியத் தொடர்புற்று ஓயாமல் தோன்றிச் சுழன்று வருவதனுல், கர்மத்தைக் கர்மசக்கரமென்ருர்.

குறிப்பு: 2

இவ்வுலகில் என்றது, இந்தக் கர்மபூமியில் வாழும் ஜீவர்கள் இந்தக் கர்மசக்கரத்தை அனுசரித்தே வாழுதல் வேண்டும் என வற்புறுத்தும்பொருட்டு.

குறிப்பு: 3

கர்மசக்கரத்தின் தன்மையை அறியாதவன் விருப்பு வெறுப்பில் அழுந்தி ஒன்றிலுந் திருப்தி பெருதவனுய்த் துன்பத்தைத் தரும் பாப வாழ்க்கை யுடையவனுகிருன்.

குறிப்பு: 4

அவன் மெய் வாய் கண் மூக்கு செவி என்ற இந்திரியங்களின் விளையாட்டுக்கு அடிமைப்பட்டவனுதலின், அவன் வாழ்க்கை விழலாகின்றது. அவன் மானுடதேகத்தைப் பெற்றும் அதனுற் பெறவேண்டியனவாகிய திரிகரண சுத்தியையும் அதன் அவாந்தர இறுதிப் பயன்களாகிய காரியசித்தியையும் ஞானத்தையும் பெறுவதற்கு இயலாதவனுய்த் தனது ஆயுளை வீணுகப் போக்குகின்ருன் என்பதனுல், 'விழல்' எனக் கூறப்பட்டது.

குறிப்பு: 5

அடுத்த பாடலில் கர்மசக்கரத்தின் பயனை முற்றுகப் பெற்று ஆனந்த சொரூபியாகத் திரியும் ஞானி அந்தச் சக்கரத்தில் நின்று விடுபட்டவன் என்று கூறியருளுகின்ருர்.

# 17

## கர்ம சக்கரத்திலிருந்து விடுபட்ட ஞானியின் ஆனந்த நிலை.

**எந்த மானவன் ஆத்மாவில் அன்பு பெற்றவனே, ஆத்மாவினுல் திருப்தி அடைந்தவனே, ஆத்மாவில் சந்தோஷம் பெற்றவனே அவனுக்குக் கர்மசக்கரம் கார்யமில்லை.**

பொழிப்பு:

எந்த மானவன் தன் ஆத்மாவில் அன்பு பெற்றவனே, தன் ஆத்மாவினுல் திருப்தி யடைந்தவனே, தன் ஆத்மாவில் சந்தோஷம் காண்பவனே அந்த ஆத்மஞானிக்குக் கர்ம சக்கரம் ஒரு காரியமில்லை.

குறிப்பு: 1

மானவன் - மனிதன். இங்கு ஞானியைக் குறித்தது.

குறிப்பு: 2

எந்த ஞானி பரமாத்மாவிற் பிரீதி கொண்டு அந்தப் பரம்பொருளே தனக்குப் போதுமென்றும் அதனிலேயே ஆனந்தம் அடைந்துகொண்டும் இருப்பானே, அந்த ஞானி கர்மபலன்களைக் கருதமாட்டான்.

குறிப்பு: 3

ஆத்மஞானியாகிய இவன் யக்ஞம், தவம், தானம் முதலியவற்றுல் உடனுக்குடன் வந்து சித்திக்குஞ் சுவர்க்க வாழ்வு முதலிய சிற்றின்பங்களையெல்லாங் கருதாது மேலான கர்மபலன்களாயுள்ள சித்தசுத்தியையுஞ் சம புத்தியையும் பெற்று ஆத்மானந்தரூபியாக இருப்பன்.

குறிப்பு: 4

சித்தசுத்தியையும் சமபுத்தியையும் நைஷ்கர்மிய நிலையையும் ஆத்மானந்த அனுபவத்தையும் பெற்று

வாழும் இந்த ஆத்மஞானிக்கு கர்ம சக்கரத்தால் வரும் பிரயோசனம் ஒன்றுமில்லையாதலின், ' அவனுக்கு கர்ம சக்கரம் காரியமில்லை ' எனக் கூறினர். அவன் கர்ம சக்கரத்தின் ஆணையிலிருந்து விடுபட்ட அக்கணமே, இறைவனுடைய திருவருளோடு சார்ந்துங் கூடியும் நிற்பன்*.

குறிப்பு : 5

†இந்த ஆத்தமஞானியைப் பொறுத்தவரையில் கர்ம சக்கரம் "சவம் சுடு தடி போலாகும்."

# 18

## ஜீவன்முக்தன் எப்படியிருப்பான் ?

**இவ்விடத்தில் அவனுக்கு யக்ஞாதி கர்மங்களைச் செய்தலாலும் ஒருபலனுமில்லை ; செய்யாமை யாலும் பலனில்லை. சகல பூதங்களிலும் தன் பலனுக்காக அண்டவேண்டிய பூதமொன்றும் இவனுக்கில்லை.**

பொழிப்பு :

இந்த உலகத்தில் அவனுக்கு செய்கையில் யாதொரு பயனுமில்லை. செயலின்றி இருப்பதிலும் பயனில்லை. சகல பூதங்களுள்ளும் தன் பயனைக் கருதி அண்டி நிற்கவேண்டிய பூதம் ஒன்றுதானும் அவனுக்கு இல்லை.

குறிப்பு : 1

இந்த உலகத்தில் என்றது, இந்தப் பூமி செயல் செய்துகொண்டிருக்க வேண்டிய கர்மபூமியாக இருப்பதாயினும், என உணர்த்தும்பொருட்டு.

---

* சிவஞானபோதம் — 8ஆம் சூத்திரம்: 4ஆம் அதிகரணம்.

† இராமநாதர் — பகவத்கீதை : பக். 104.

குறிப்பு: 2

ஆத்மஞானியாகிய இந்த ஜீவன்முக்தன் சாமானிய விசேட கர்மங்களைச் செய்தாலும் செய்யாவிடினும் ஒன்றே. இவனுக்கு அக்கர்மங்களினுல் ஒரு பயனுமில்லை.

குறிப்பு: 3

மாயையிலிருந்தும் மூலகன்ம மலத்தின் பிடியி லிருந்தும் கழன்று, கர்மசக்கரத்திற்கப்பாற்பட்ட சர்வ வியாபக பரவஸ்துவாகிய பரம்பொருளை அண்டியும் அணைந்தும் அதனுடன் ஒன்றுபட்டும் நிற்கின்ற தன்மை யினுல் இந்த ஜீவன்முக்தனுக்கு எவ்வித கர்மங்களாலும் ஒருபயனுமில்லை யென்ருர்.

குறிப்பு: 4

இந்த ஜீவன்முக்தன் தன் கர்மேந்திரியங்கள்மூலம் செய்யும் கர்மங்களின் பலன்கள் அவனைச் சாரமாட்டா. அந்தப் பலன்களை கர்மசக்கரம் அவன் நண்பர்களுக்கும் பகைஞர்களுக்கும் பிரித்து ஊட்டும். நண்பர்கள் புண்ணிய பலன்களைப் பெறுவார்கள். பகைஞர்கள் பாப பலன் களைப் பெறுவார்கள்.

குறிப்பு: 5

இந்த ஜீவன்முக்தன் தேவர், மனிதர் முதலிய எவர் களையும் தன் நன்மைக்காகப் பின்தொடரவேண்டியதில்லை. இவன் சர்வவியாபக வஸ்துவாகிய பரம்பொருளையே அண்டி இருப்பதால் இவனுக்கு வேண்டியவற்றை எல்லாஞ் சராசரங்கள் மூலம் அது நிறைவேற்றியவண்ணமிருக்கும்.

குறிப்பு: 6

10ஆம் மந்திரம் தொடக்கம் 18ஆம் மந்திரம் வரைக்கும் கர்மங்களைப் பற்றியும் கர்மயோக நிலை பெற்ற பெரியோர்களைப் பற்றியும் கர்மயோக நிலையி லிருந்து கழன்று நிற்கும் ஜீவன்முக்தர்களைப் பற்றியும் உபதேசித்தருளிய பின்னர், 'க்ஷத்திரியனுகிய நீ, உனக் குரிய யுத்த கர்மத்தைக் கைவிட்டால் கர்மசக்கரத்திற்கு விரோதமாக நடந்தவனுவாய்' என ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனை எச்சரிக்கின்ருர்.

# 19

## கர்மசக்கரத்தை அனுசரித்தால் உனக்கு மேலான பதவிகள் நிச்சயம்.

**ஆதலால், செய்யவேண்டிய கர்மத்தை எக்காலமும் சங்கமற்றுச் செய். கர்மத்தைச் சங்கமற்றுச் செய்யும் புருஷன் பரத்தைப் பெறுகின்றான்.**

பொழிப்பு :

*ஆதலால், எப்போதும் பற்று நீங்கிச் செய்ய வேண்டிய தொழிலைச் செய்துகொண்டிரு. பற்றில்லாமற் செய்துகொண்டிருக்கும் மனிதன் மேலான பதவிகளைப் பெற்றுக் கடைசியில் பரம் பொருளையும் எய்துகின்றான்.*

குறிப்பு : 1

*ஆதலால் என்பதன் கருத்து, கர்மசக்கரத்தின்நிலை இங்ஙனம் இருப்பதனால் என்பது.*

குறிப்பு : 2

*செய்யவேண்டிய கர்மம், உன் குண இயற்கைக்கும் மனோபாவத்துக்கும் மனத்தில் எழும் மனோநிலைகளுக்கும் ஒத்துவரும் கர்மம். 'க்ஷத்திரியனாகிய நீ உனக்குரிய யுத்த கர்மத்தைப் பற்றின்றிச் செய். அங்ஙனஞ் செய்யாது விடின் நீ கர்மசக்கரத்தை அலட்சியஞ் செய்தவனாகின்றாய்' என, ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறினார்.*

குறிப்பு : 3

*மேலான பதவிகள் என்றது, தேவாம்சம் பெற்ற சித்திகளோடு கூடிய உயர்ந்த தெய்வபதப் பேறுகளை.*

## 20

### நீயும் கர்மத்தைச் செய்வதற்கே தக்கவன்.

**ஜனகன் முதலானவர்கள் கர்மத்தினுலேயே சம்சித்தியைப் பெற்றூர்கள். நீயும் லோகசம்கிரகத்தையே கவனிக்கின்றவனுய் கர்மத்தைச் செய்வதற்குத் தக்கவன்.**

**பொழிப்பு :**

ஜனகன் முதலியோர் செய்கையாலே சித்தி பெற்றனர். நீயும் உலக நன்மையைக் கருதிக் கர்மத்தைச் செய்வதற்கே தக்கவன்.

**குறிப்பு : 1**

அரசர்களில் மிகவும் புகழ்பெற்ற ஜனகன் அரச பரிபாலனஞ் செய்துகொண்டே நைஷ்கர்மிய சித்திநிலையைப் பெற்றனன்.

**குறிப்பு : 2**

உனக்குரிய கர்மசக்கரநிலை எனக்கு மிகவும் தெளிவாகத் தெரிகிறது எனக் கூறும் ஸ்ரீ கிருஷ்ணபகவான், "நீ யுத்தகர்மத்தைச் செய்வதற்கே தக்கவன்" என்றூர்.

**குறிப்பு : 3**

"பரமேஸ்வரன் தன் பஞ்சகிருத்தியங்களைத் தன் நன்மைக்குச் செய்யாமல் ஜீவாத்மாக்கள் உய்யும்பொருட்டே செய்வதுபோல, நீயும் உன் சுகங்களைக் கருதாமல் உலக நன்மையின்பொருட்டே யுத்த கர்மத்தைச் செய்" என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பணித்தருளினூர்.

**குறிப்பு : 4**

உலக நன்மை என்றது உலகம் கெட்டவழியிற் செல்லவிடாமல் நிறுத்துதல், அதனைத் தர்மவழியிற் பரிபாலனஞ் செய்தல் முதலியன.

## 21

### உயர்ந்தோன் செய்கையே உலகுக்குப் பிரமாணமாகிறது.

சிரேஷ்டன் எதனை எதனைச் செய்கின்ருனே அதனை அதனை மற்றவர்கள் செய்கின்ருர்கள். அவன் எதனைப் பிரமாணமாகக் கொள்ளு கின்ருனே அதனை லோகம் அனுஷ்டிக்கின்றது.

பொழிப்பு : தி. செல்வமனோகரன்

எதனை யெதனை உயர்ந்தோன் செய்கின்ருனே, அதனையே மற்றைய மனிதர் பின்பற்றுகின் றனர். அவன் எதனைப் பிரமாணமாக்குகின்ருனே அதனையே உலகத்தார் தொடருகிருர்கள்.

குறிப்பு : 1

உயர்ந்தோன் என்றது கல்வி கேள்விகளிலும், ஒழுக்கம் ஞானம் முதலியவற்றிலுஞ் சிறந்து விளங்குபவனை.

குறிப்பு : 2

உயர்ந்தோன் எதனைச் சித்தியைத் தரும் கருவியாக மேற்கொள்ளுகின்ருனே, அதனையே ஏனையோர் பிரமாண மாக ஏற்றுக்கொள்வர், என இவ்வறிவுரை கூறுகின்றது*.

## 22

### நான் தொழிலிலேதான் இயங்குகின்றேன்.

பார்த்த, மூவுலகங்களிலும் எனக்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. இதுவரையில் என் ஞற் பெறப்படாததாய் இனிப் பெறவேண்டிய பொருளில்லை. ஆனல் நான் பஞ்சகிருத்தியம் என்ற கர்மத்திலேயே இருக்கின்றேன்.

---

*இராதாகிருஷ்ணன்—பகவத்கீதை : பக். 140. 1960ஆம் ஆண்டுப் பதிப்பு.

பொழிப்பு:

பார்த்தா! மூவுலகங்களிலும் எனக்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. நான் இதுவரை பெற்றிராத பேறுமில்லை — எனினும் நான் கர்மத்திலேதான் இயங்குகின்றேன்.

குறிப்பு: 1

முதலில் 'என் நன்மையைக் கருதி நான் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை' யெனக்கூறுகின்றார். தொடர்ந்து 'நான் பிரயாசப்படத் தேவையில்லை. ஏனெனில் எல்லாப் பேறுகளும் என்னிடத்திலேயே அடங்கியிருக்கின்றன' எனக் கூறுகின்றார்.

குறிப்பு: 2

'கர்மசக்கரத்தை இயக்குபவன் யானே, பஞ்சகிருத்திய தொழில்களைச் செய்பவன் யானே' என்பார், நான் கர்மத்திலேதான் இயங்குகின்றேன் எனக் கூறினார்.

குறிப்பு: 3

பஞ்சகிருத்தியத் தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய இவை.

## 23

### மனிதர் என் வழியையே பின்பற்றுகின்றனர்.

மனுஷர் எல்லாம் என் வழியை அனுசரிக்கின்றனர். நான் ஒரு சமயத்திலாவது எனது பஞ்சகிருத்தியத்திற் சோம்பலுற்று இருக்கவில்லையாகில் அவர்கள் தங்கள் கருமத்தைச் செய்ய மாட்டார்கள்.

பொழிப்பு:

மனிதர் எல்லாம் என் வழியையே அனுசரிக்கின்றனர். நான் ஒருகணமாவது சோம்பல்

காரணமாக எனது பஞ்சகிருத்தியத் தொழிலைக் கைவிடுவேனாகில் அவர்கள் தங்கள் கருமத்தைச் செய்யமாட்டார்கள்.

குறிப்பு : 1

எல்லாத் தேசங்களிலுமுள்ள எல்லா நல்லவர்களும் யான் வகுத்த கர்மானுஷ்டான மார்க்கத்தைப் பேணித் தொழில்செய்தவண்ணமே இருக்கின்றார்கள்.

குறிப்பு : 2

சோம்பலுக்கிடமின்றி மிகுந்த விழிப்புடன் யான் எனக்குரிய பஞ்சகிருத்தியத் தொழில்களைச் செய்தவண்ணமே இருக்கின்றேன். அதனாற்றான் உலகிலுள்ள சராசரங்கள் அனைத்துந் தத்தமக்குரிய கடமைகளையும் கர்மங்களையும் தவறின்றிச் செய்து ஒழுகுகின்றன. சூரிய சந்திரர்களும் பஞ்சபூதங்களும் தத்தமக்குரிய வரம்புக்குள் நின்று தத்தமக்குரிய கர்மங்களைத் தவறின்றிச் செய்து ஒழுகும் அற்புதத்தைச் சிந்தித்துப் பார்.

குறிப்பு : 3

யுத்தம் புரியும் எண்ணமின்றி ஆயுதங்களை எறிந்துவிட்டு மனச்சோர்வுடன் நிற்கும் அர்ச்சுனனைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் இங்ஙனமெல்லாம் இடித்திடித்துக் கூறி மேலும் உபதேசித்தருளுகின்றார்.

## 24

## எனது ஆணையும் நியதியும் இல்லாவிடின் எல்லாம் எங்கும் குழம்பியவண்ணமே இருக்கும்.

**நான் பஞ்சகிருத்தியத்தைச் செய்யாதிருந்தால் இந்த லோக ஜனங்கள் சிதறுவார்கள். சங்கிரத்தையும் செய்கின்றவனாவேன். இந்தப் பிரஜைகளை ஹிம்சை செய்கின்றவனாவேன்.**

பொழிப்பு :

நான் பஞ்சகிருத்தியத் தொழிலைச் செய்யா விட்டால் இந்த ஜனங்கள் எல்லாம் அழிந்து போவார்கள். குழப்பத்தை நான் ஆக்கியோ னுவேன். இந்த மக்களையெல்லாங் கொல்பவனு மாவேன்.

குறிப்பு : 1

எனது பஞ்சகிருத்திய நியதி இல்லாவிட்டால் ஒழுங்கு பட்ட மார்க்கங்களை அனுசரிக்காமல் ஆசைமேலிட்டு இந்த ஜனங்கள் ஒருவரையொருவர் கொன்றும் அழித்தும் திரிவார்கள் என முதலிற் கூறுகின்றூர்*.

குறிப்பு : 2

'என் பஞ்சகிருத்தியத் தொழில் ஒருகணம் நிற்கு மாயின், சிருஷ்டித்த கன்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக் கரண தத்துவங்களின் கர்மயோக நியதிகள் அனைத்தை யுங் குழப்பிவிட்ட கர்த்தாவும் யானே ஆகிவிடுவேன்' எனக் கூறி, தானே தலைசிறந்த கர்மானுஷ்டான கர்ம யோகி என்பதனை ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு இங்கு குறிப்பாக உபதேசிக்கின்றூர். அர்ச்சுனனுக்கு கர்மயோகத்தில் மன எழுச்சி ஏற்படும்வண்ணம் உபதேசம் நிகழ்த்தப்படுகின்றது.

குறிப்பு : 3

இவ்வறிவுரையின் கடைசியில் 'மக்களையெல்லாம் ஒரு நன்மையின் பொருட்டல்ல, ஒரு தர்மராச்சிய தாப னத்தின் பொருட்டல்ல, பிரயோசனமின்றிக் கொன்று குவிப்பவன் இந்தக் கிருஷ்ணன்' என்ற பழிச்சொல் தன்மீது வந்து சேருமெனக் கூறுகின்றூர் ஸ்ரீ கிருஷ்ண பகவான். இங்ஙனமெல்லாம் மேன் மேலும் தன்மீது வைத்துக் கூறியது, அர்ச்சுனனுக்கு மேன் மேலும் யுத்தகர்மத்தில் மன எழுச்சி தோற்றுவிக்கும் பொருட்டே என அறிக.

---

*இராதாகிருஷ்ணன் — பகவத்கீதை : பக். 141. 1960 ஆம் ஆண்டுப் பதிப்பு.

## 25

## அறிவில்லாதோர் கர்மபலத்தில் பற்றுடையோர்; அறிவுடையோர் அதில் பற்றில்லாதவர்.

பார்த்த, எவ்விதம் கர்மபலத்திற் பற்றுவைத்து அவித்வான்கள் கர்மங்களைச்செய்கின்றூர்களோ, அவ்விதம் வித்வான் லோக சங்கிரகத்தைச் செய்யக்கருதி கர்ம பலத்திற் பற்றற்றவனுய்க் கர்மங்களைச் செய்வான்.

பொழிப்பு :

*பார்த்தா! அறிவில்லாதோர் கர்மபலத்திற் பற்றுடையோராய் எப்படித் தொழில் செய் கிறூர்களோ அப்படியே அறிவுடையோர் பற் றின்றி உலக நன்மையை நாடித் தொழில் செய்ய வேண்டும்.*

குறிப்பு : 1

*அறிவில்லாதோருக்கும் அறிவுடையோருக்குமுள்ள வித்தியாசம் இவ்வறிவுரையிற் கூறப்படுகின்றது.*

குறிப்பு : 2

*அறிவில்லாதோர் கர்மபலனைக் கருதுபவர்கள். அறிவுடையோர் அதனைக் கருதாது பற்றின்றித் தொழில் செய்பவர்கள்.*

குறிப்பு : 3

*' அர்ச்சுனு! உனக்கு அமைந்துள்ள சக்தி முழுவதையும் பிரயோகித்துப் பற்றின்றி உலக நன்மையை நாடி யுத்த கர்மத்தைச் செய்' என்று குறிப்பாகக் கட்டளையிடுகின்றூர்.*

குறிப்பு : 4

கர்மயோகத்தைப் பற்றி விபரீதமான விளக்கங்கள் இருந்து வருகின்றன. கர்மயோக நிகழ்ச்சி நிகழும் பொழுது கர்மேந்திரியங்கள் மாத்திரந் தொழில்புரிவன என்றும் ஏனைய கருவி கரணங்கள் செயலற்றுக் கிடப்பன என்றும் அதனுல் இன்ப விளைவு என்பது சிறிதுமில்லை யென்றுஞ் சிலர் கருதுகின்றனர். ஆனுல் அது அப்படி யன்று. கர்மயோக நிகழ்ச்சி நிகழும்பொழுது கர்மேந் திரியங்கள், ஞானேந்திரியங்கள், அந்தக்கரணங்கள் ஆகிய கருவிகள் அனைத்தும் ஒருமுகப்பட்டு நேர்நின்று யோக நிலையுற்றுத் தத்தமக்குரியனவாகிய சக்திகளை உபகரித்து உதவுவதனுல் கர்மயோக நிலையில் வாய்க்கும் இன்பம் சொல்லுந்தரத்தது அன்று. கர்மயோகி, அச் சக்திகள் அனைத்தையும் ஈஸ்வர சக்திகளாகவே காண்பவனுதலின், அவன் 'ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு தன் உள்ளமும்போய் தான் கெட்டுப்' பெறும் இன்பம் இறை வன் தரும் பேரின்பம் என அறிக.

## 26

## கர்மயோகி தன் தொழிலைச் செய்வது மாத்திரமன்றி ஏனையோரையும் அவரவர்க்குரிய தொழில்களிற் செலுத்துதல் வேண்டும்.

கர்மபலத்திற் பற்று வைத்த அஞ்ஞானிகளுக்கு வித்வான் அக்கர்மானுஷ்டானங்களைப் பழித்துப் புத்தி பேதத்தைப் பிறப்பிக்கக் கூடாது. தானும் சமத்வ புத்தி யுக்தனுய்த் தனக்குரிய கர்மத்தைச் செய்துகொண்டு பிறருக்குரிய சகல கர்மங்களை யுஞ் செய்விக்கவேண்டும்.

பொழிப்பு :

அறிவுடையோனெனப்படுபவன் கர்மபலனிற் பற்று வைத்து ஒழுகும் அறிவில்லாதோரை இழித்துக் கூறி, அவர்கள் புத்தியைப் பேதித்தல் கூடாது. அவன் தான் தனக்குரிய கர்மயோகத்தில் நின்று கர்மங்களைச் செய்து, ஏனையோரையும் அணைத்து அவர்களுக்கென உரிய கர்மங்களை அவர்களைக்கொண்டே செய்வித்தல் வேண்டும்.

குறிப்பு : 1

கர்மபலனிற் பற்று வைத்து ஒழுகுபவர்கள் அறிவில்லாதவர் என்பதும் கர்மபலனிற் பற்றின்றி ஒழுகுபவர் அறிவுடையோர் என்பதும் முந்திய அறிவுரைக் குறிப்பில் தரப்பட்டது.

குறிப்பு : 2

'உன் மனோநிலையை ஏனையோர்க்கும் நீ செலுத்துதல் கூடாது' என எச்சரிக்க விரும்பிய பகவான், 'சபலமுற்றிருக்கும் மனோநிலையோடு கூடிய நீ ஏனையோரை இகழ்தல் கூடாது' என்றார். 'அந்த ஏனையோர் கர்மபலனைக் கருதுபவராயினும் அவர்கள் நிச்சயபுத்தியுடன் தொழில் செய்கின்றார்கள். ஆதலின் அவர்களை இழித்துக் கூறி, அவர்களது நிச்சய புத்தியை மாற்றி அவர்களுக்கு உனது சந்தேகங்கள் நிறைந்த கலக்கமான சபலபுத்தியைக் கொடுத்துவிடாதே' எனக் கூறுகின்றார்.

குறிப்பு : 3

நீ இப்பொழுது செய்யவேண்டியது உன் விருப்பு வெறுப்புக்களை நீக்கிப் புத்தியிற் சரண்புகுந்து நிச்சயமுற்று உனக்குரிய யுத்த கர்மத்தைச் செய்தல். அவ்வாறு செய்வதனால் நீ ஏனையோரையும் அவரவர்க்கு உரியனவாகிய தொழில்களில் ஒருவித சிரமமுமின்றிச் செலுத்திவிடும் தகுதி பெறுவாய்*.

*இராதாகிருஷ்ணன்—பகவத்கீதை : பக். 142. 1960ஆம் ஆண்டுப் பதிப்பு.

## 27

## தொழில்கள் பிரகிருதியால் இயக்கம் பெறுகின்றன.

**கர்மங்கள் எல்லாம் பிரகிருதியின் குணங்களி னுற் செய்யப்படுகின்றன. அகங்கார விமூடாத்மா நான் கர்த்தா என்று எண்ணுகின்ருன்.**

**பொழிப்பு :**

எங்கும் எப்பொழுதுந் தொழில்கள் பிரகிருதியின் குணங்களால் இயங்குகின்றன. அகங்காரத்தால் மயங்கிய மூடாத்மா 'நான் கர்த்தா, நான் செய்கின்றேன்' என எண்ணுகின்ருன்.

**குறிப்பு : 1**

கர்மயோக அனுஷ்டானத்துக்கு முதற்றடையாயிருப்பது 'நான் செய்கின்றேன்' என்று மனத்தில் எழும் அகங்கார நிலையாகும். இந்த நிலை ஜீவாத்மாவுக்கு ஆணவம் எனப்படும் மூலமல சம்பந்தத்தால் உதயமாவது; கர்மமல சம்பந்தத்தால் வளர்ந்து வருவது; மாயாமல சம்பந்தத்தாற் பழுத்துக் கனிவது.

**குறிப்பு : 2**

இந்த அகங்காரத்தினுலேயே ஜீவாத்மா பிரகிருதியின் தொழில்களையெல்லாந் தனது தொழில்கள் என மயங்கி அவற்றைத் தானே சுவீகரித்துக்கொள்கிறது.

**குறிப்பு : 3**

கர்மசக்கரத்தின் ஒரு கோணத்தில் தோன்றி, அந்தக் கோணத்திலேயே சதா நின்றுகொண்டு, கர்மசக்கரத்தில் அகப்பட்டுத் திக்குத்திசை தெரியாது மலபந்தத்தால் நான் எனக் கூச்சலிட்டுத் திரியும் ஜீவாத்மாக்களின் எண்ணிக்கை நூறு நூருயிரங் கோடி என்றும் அனந்தம் என்றும் கூறுவர்.

குறிப்பு : 4

இங்ஙனம் மும்மல பந்தத்தால் உண்மையை உணராது 'யானே கர்த்தா ; யானே செய்கின்றேன்' என மயங்கு வதனுல் ஜீவாத்மா இந்த மந்திரத்தில் மூடாத்மாவென அழைக்கப்படுகின்ருன்.

குறிப்பு : 5

ஜீவாத்மா சார்ந்ததன் வண்ணமானது. அது கர்ம சக்கரத்திலகப்பட்டுப் பிரகிருதியைச் சார்ந்து நிற்கையில் பிரகிருதியின் தொழிலே, மயக்கத்தினுல் தன் தொழி லாகக் கருதி 'நான் செய்கிறேன் ; நான் காண்கின்றேன்' எனக் கூச்சலிடுகின்றது.

## 28

## குணங்களிலிருந்தே கர்மங்கள் ஜனிக்கின்றன.

> மஹாபாகு, குணகர்ம விபாகத்தின் உண்மையை அறிந்தவன் குணங்கள் குணங்களில் இருக் கின்றன என்று நிச்சயித்து குணங்களில் சங்கத் தைப் பெறுகின்ருனில்லே.

பொழிப்பு :

குணங்களின் இயற்கைக்கேற்ப கர்மங்கள் பலவிதமாகத் தோன்றுகின்றன என்ற உண் மையை அறிந்தவன் குணங்கள் குணங்களிற் பொருந்திநின்று யோகம் புரிகின்றன என உணர்ந்து பற்றற்றிருப்பான்.

குறிப்பு : 1

பிரகிருதியிலிருந்து தோன்றுங் குணங்கள் மூன்று. அவையாவன சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்பன. இந்தக் குணங்களே அவற்றின் காரியங்களினுல் அறியலாம். சத்துவகுணத்தின் காரியம் விசாரம், கல்வி, சுகம் என்பன. ரஜோகுணத்தின் காரியம் விருப்பு, வெறுப்பு, செயல் என்பன. தமோகுணத்தின் காரியம்

அஞ்ஞானம், மோகம், மறதி என்பன. மேலே தரப்பட்ட மூன்று குணங்களும் சத்துவத்தில் சத்துவம் என்றும் சத்துவத்தில் ரஜோகுணமென்றும் சத்துவத்தில் தமோ குணமென்றும் ரஜோகுணத்தில் சத்துவகுணமென்றும் ரஜோகுணத்தில் ரஜோகுணமென்றும் ரஜோகுணத்தில் தமோகுணமென்றும், தமோகுணத்தில் சத்துவகுண மென்றும், தமோகுணத்தில் ரஜோகுணமென்றும் தமோ குணத்தில் தமோகுணமென்றும் இவ்வாறு ஒன்பது பெரிய பிரிவுகளாகப் பிரிந்தும் விளங்கும். இந்தக் குணங்கள் இவ்வாறு பிரிந்து விளங்க, இவற்றின் காரியங்களும் பல வேறாய்த் திரிந்து இயலும். இப்படிக் குணங்களிலிருந்து காரியம் தோன்ற, காரியங்கள் தத்தமக்கென அமைந்த கர்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக்கரணங்களிற் பிரவே சித்து தத்தமக்கென வேண்டிய கர்மங்களைச் செய்விக்கும். இப்படிக் குணங்களிலிருந்து கர்மங்கள் தோன்றுகின்றன எனத் தன்னறிவில் தெளிந்த ஞானி கர்மேந்திரியங்கள் செய்யும் கர்மங்களை நான் செய்கின்றேன் என மயங்க மாட்டான்.

குறிப்பு : 2

எவ்வாறு குணங்களின் காரியங்களாய் தனுகரணங் கள் விளங்குகின்றனவோ, அவ்வாறே குணங்களின் காரி யங்களாய்ப் புவனபோகங்களும் இருக்கின்றன. அகக் கருவிகளாகிய தனுகரணங்களின் உதவிகொண்டே புற விடயப் பொருள்களாகிய புவனபோவங்கள் துய்க்கப் படுகின்றன. அதனுற்ருன் குணங்கள் குணங்களில் நின்று யோகம் புரிகின்றன என்று இம்மந்திரங் கூறிற்று. இந்த உண்மையைத் தன் அறிவிற் சிந்தித்துத் தெளிந்த ஞானி, குணங்களையாவது, குணங்களின் காரியங்களையாவது, பற்ருமல் வாழ்வான்.

குறிப்பு : 3

பிரகிருதியின் குணங்கள் ஜீவாத்மாவின் குணங்க ளன்று. ஜீவாத்மா பளிங்கை ஒத்தது; சார்ந்ததன் வண்ணமானது. தன் முத்தி நிலையில் இறைவனின் எண்குணங்களுந் தன்னிடத்தில் விளங்கித் தோன்றும் சிறப்பையுடையது.

## 29

### அபக்குவிக்கு ஞானேபதேசம் வேண்டியதில்லை.

**பிரகிருதியின் குணங்களினுல் மிகமோகம் பெற்ற வர்கள் குணங்களுடைய கர்மங்களிற் பற்றைப் பெறுகின்றனர். அகண்ட வஸ்துவை அறியாத மாந்தர்களை அகண்ட வஸ்துவை அறிந்தவன் புத்திபேதம் செய்து சலனப்படுத்தவும்மாட்டான்.**

பொழிப்பு :

பிரகிருதியின் குணங்களைத் தமது குணங்க ளென்று மயங்குபவர்கள் எப்பொழுதும் குணங் களிலுந் தொழில்களிலுமே பற்றுதலடைகின் ருர்கள். ஞானிகள் அகண்ட பரிபூரண வஸ்து வாகிய பரமாத்மாவைப் பற்றிய உண்மைகளை அபக்குவிகளுக்கு உணர்த்தமாட்டார்கள். அந்த மாந்தர்களை இகழ்ந்து சலனப்படுத்தவும் மாட் டார்கள்.

குறிப்பு : 1

குணங்கள் இந்திரியங்கள் வாயிலாக கர்மங்களைச் செய் கின்றன என்ற உண்மையை உணராதவர்கள் பிரகிருதி யின் குணங்களைத் தமது குணங்களென நினைப்பவர்கள். அவர்களே அபக்குவிகள். (பக்குவமில்லாதவர்கள்).

குறிப்பு : 2

மயக்கமுள்ளவர்கள்—குணங்கள் செய்யும் கர்மங்களை நான் செய்கின்றேன் என எண்ணி அதிற் சிக்குண்டு பயம் சோர்வு துக்கம் முதலியவற்றில் அழுந்துபவர்கள்.

குறிப்பு : 3

ஞானிகள், பக்குவமில்லாத ஜீவாத்மாக்களுக்குத் தாம் தெளிந்த உண்மையை உணர்த்துவதற்கு முயலமாட்

டார்கள். ஏனெனில், உணர்த்துவதனுற் பக்குவமில்லாத அவர்கள் தமது புத்தி கலங்கித் தமக்குரிய கர்மானுஷ்டானங்களையே கைவிட்டுவிடுவார்கள்.

குறிப்பு : 4

பக்குவமில்லாத ஒருவனுக்குக் கர்மயோகத்தைப் பற்றியோ, நைஷ்கர்மிய அனுபவத்தைப்பற்றியோ, உபதேசம் வேண்டியதில்லை என இந்த இருபத்தொன்பதாம் மந்திரம் கூறுகின்றது.

## 30

### யான் எனது என்பது அற்று, நின்று, போர் செய்.

*அத்யாத்ம புத்தியால் எல்லாக் கர்மங்களையும் என்னிடம் நியாசம் செய்து தன் பிரகிருதியின் ஹிதத்தை அபேக்ஷிக்காதவனும் மமதையற்றவனும் துக்கமற்றவனும்ஆகி, யுத்தம் செய்.

பொழிப்பு :

எல்லாச் செய்கைகளையும் உள்ளறிவினுல் எனக்கு அர்ப்பணமாகத் துறந்துவிட்டு ஆசை நீங்கி எனது என்பது அற்று மனக்கர்ய்ச்சல் தீர்ந்தவனுய்ப் போர்செய்யக் கடவாய்.

குறிப்பு : 1

முதலில் 'பிரகிருதி குணங்களால் நிகழும் சகல கர்மங்களையும் என்னிடம் அர்ப்பணமாக அர்ப்பணித்துவிடு' எனப் பணித்தருளுகின்ருர்.

குறிப்பு : 2

ஈஸ்வர அர்ப்பண கர்மம்—ஈஸ்வரனிடம் ஒப்புவிக்கப்பட்ட கர்மம்.

---

*இந்த நியாசம் செய்து நிற்கும்நிலை கைவந்தவர்களை 'சர்வ சங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள்' எனச் சிவஞானசித்தி கூறும்.—சிவஞான சித்தியார் : 8ஆம் சூத். 2ஆம் அதிகரணம் 35ஆம் பாடல்.

குறிப்பு: 3

நான் கர்மங்களைச் செய்யவில்லையென்றும், அவற்றைப் பிரகிருதியின் குணங்களே செய்கின்றனவென்றும், பிரகிருதியும் குணங்களும் ஈஸ்வரனின்றி நடவாதபடியால் ஈஸ்வரனே சர்வகாரணனென்றும் நிச்சயித்து, ஈஸ்வரனிடத்து உடல் பொருள் ஆவியாகிய மூன்றையும் அர்ப்பணஞ் செய்தல் ஈஸ்வர அர்ப்பணமெனப்படும்.

குறிப்பு: 4

ஆசையற்று—கருவி கரணங்களில் எழும் விருப்பு வெறுப்புக்களில் தொடர்பில்லாதவனாய் ஒழுகி ஆசையை நீக்கி. ஆசை நீங்கவே, அகந்தையும் போய்விடுகின்றது.

குறிப்பு: 5

எனது என்பது அற்று—தன் தேகத்தைச் சூழ்ந்திருக்கும் உயிர்ப்பொருள், உயிரில் பொருள் ஆகிய அனைத்தையும் எனது என்று எண்ணாமல் வாழ்கின்ற பெருவாழ்வில் தலைப்பட்டு.

குறிப்பு: 6

மனக்காய்ச்சல் தீர்ந்தவனாய் என்றது, க்ஷத்திரியனாகிய நீ உனக்குச் சிறிதும் பொருந்தாத மனச்சோர்வை நீங்கினவனாய் என உணர்த்தும்பொருட்டு.

குறிப்பு: 7

போர் செய்வதே உன் கடமை என இம் மந்திரத்தில் கூறிவிட்டு, அடுத்த மந்திரத்தில் 'ஈஸ்வர அர்ப்பணமாக நீ போர் செய்வாயெனில் உண்மையிற் போர் செய்பவன் நீயல்லன்' எனக் கூறுகின்றார்.

## 31

## தொழில்களிலிருந்து விடுபடுவது எப்படி?

**எந்த மனுஷர்கள் எனது இந்த நைஷ்கர்மிய மதத்தை அசூயையற்றவர்களாகவும் சிரத்தையுள்ளவர்களாகவும் நித்தியம் அனுஷ்டிக்கின்றார்களோ, அவர்கள் கர்மங்களால் விடப்படுகின்றனர்.**

பொழிப்பு :

எந்த மனிதர்கள் என்னுடைய இந்த நித்திய மான நைஷ்கர்மிய மதத்தைச் சிரத்தையுடை யோராய்ப் பொருமையின்றிப் பின்பற்றுகிருர் களோ அவர்கள் தொழில்களிலிருந்து விடுபடு கின்றனர்.

குறிப்பு : 1

நைஷ்கர்மிய மதம் — ஈஸ்வர அர்ப்பணநெறியில் முதிர்ச்சிபெற்ற ஒருவரது மனத்தில் வந்து வாய்க்கும் செயலற்ற ஓர் அற்புதநிலை. நித்தியமான நைஷ்கர்மிய மதம் என்றது, அது நிலைத்துநிற்கும் இயல்பினது என் பதைக் குறித்தது.

குறிப்பு : 2

பொருமையின்றி — பொறுமை மிகுதியுடன். 'இந்த மார்க்கம் கடினமாயிருந்தாலும் இதனை அவதானமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவோம்' என்ற பொறுமை மிகுந்த புத்தியுள்ளவர்கள், பொருமையின்றி இந்த நைஷ் கர்மிய மதத்தைப்பற்றிக் கேட்குந் தகுதியுள்ளவர்கள்.

குறிப்பு : 3

'நான் கர்மங்களைச் செய்கிறதில்லை, குணங்களே கர்மங்களைச் செய்கின்றன. குணங்களும் என்னுடையன வல்ல; பிரகிருதியினுடையனவாகும். பிரகிருதியும் ஈஸ்வர னுடைய சந்நிதியில் நின்று தொழிற்படும் ஈஸ்வரனின் பரிக்கிரக சக்தியாகும். எனவே அனைத்தையும் ஈஸ்வர னிடத்திலேயே ஒப்புவித்தல் வேண்டும்' என்று இவ்வாறு தெளிவுபெற முடியாது தத்தளிக்கும் ஜீவாத்மாக்கள் நைஷ்கர்மிய மதத்தில் சிரத்தைபெருதவர்கள். சிரத்தை என்ற வடமொழிச்சொல் அன்பு, ஊக்கம் முதலிய குணங் களையே குறிக்கும். 'யான்' என்ற அகம்பாவம் உள்ளவர் கள் 'நைஷ்கர்மிய நிலை ஒருவருக்கும் சித்திப்பதில்லை' என்றும், 'அது அசாத்தியமானது' என்றும் பலவாறு இகழ்ந்து கூறுவர்.

குறிப்பு : 4

ஈஸ்வரனிடத்தில் தம்மையுந் தாம் செய்யும் செயல்களையுந் தம் உடல் பொருள் ஆவிகளையும் அர்ப்பணம் செய்யும் சாதனையைச் செய்து, அதில் ஒரு சுக அனுபவத்தைப் பெற்று வாழ்பவர்கள் நைஷ்கர்மிய மதத்தைச் சேர்ந்தோர் ஆவர். அவர்கள் கர்மங்கள் செய்து கொண்டிருப்பவர்களாயினும், உண்மையில் கர்மங்களிலிருந்து தம்மைக் கழற்றிக்கொண்டவர்களாவர். அவர்களே கர்மங்களிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளுகிறார்கள் என இம் மந்திரம் கூறுகின்றது.

## 32

## நைஷ்கர்மிய மதத்தை அனுசரியாதோர்க்கு ஏற்படும் கதி.

**எவர்கள் அசூயையுள்ளவர்களாய் எனது இந்த நைஷ்கர்மிய மதத்தை அனுசரிக்கவில்லையோ அவர்களை சர்வஞானத்தில் விமூடர்களாகவும் விவேகமற்றவர்களாகவும், நாசத்தை அடைந்தவர்களாகவும் அறி.**

பொழிப்பு :

எவர்கள் பொறாமைகாரணமாக என்னுடைய இந்த மதத்தை அனுசரிக்கவில்லையோ அவர்களை சர்வக்ஞான மூடர்களாகவும், விவேக மற்றவர்களாகவும் நாசத்தை அடைந்தவர்களாகவும் அறி.

குறிப்பு : 1

இந்த மதத்தின் முறைகளைப் பொறுதியோடு மனம் அடங்கிக் கேட்டும் சிந்தித்தும் அறியாதவர்களை, அனுசரியாதவர்கள் என்றார்.

குறிப்பு : 2

சர்வக்ஞான மூடர்கள் அகண்ட வஸ்துவாகிய பரமாத்மாவைப் பற்றிய ஞானமில்லாதவர்கள்*.

குறிப்பு : 3

விவேகமில்லாதவர்கள் 'பரமாத்மா எது ? ஜீவாத்மா எது ? பிரபஞ்சம் எது ?' எனப் பகுத்துக் காணும் புத்திக் கூர்மையில்லாதவர்கள்.

குறிப்பு : 4

இந்த மதத்தை அனுசரியாதவர்கள் பிறவியெடுத்தும் பிறவிப்பயனை இழந்தவர்கள் ஆதலின், அவர்கள் நாசத்தை அடைந்தவர்கள் எனக் கூறினர்.

## 33

### இயற்கையை அடக்குதல் பயன்படாது.

ஞானவானும் தனது பிரகிருதிக்கு இசைவாக முயல்கின்றான். பூதங்கள் தத்தம் பிரகிருதியை அடைகின்றன. பிரகிருதியை நிக்கிரகம் என்ன செய்ய முடியும் ?

பொழிப்பு :

ஞானமுடையவன்கூட தன் இயற்கைக்குத் தக்கபடியே நடக்கிறான். பூதங்களும் தமக்குரிய இயற்கையின்படியே நடந்துகொள்கின்றன. இயற்கையை அடக்குதல் பயன்படாது.

குறிப்பு : 1

ஞானமுடையவன் கூட என்றது உடம்பு வேறு தான் வேறு என்று உள்ளபடி அறிந்த ஞானிகூட தன் சரீரத்தின் குணங்களுக்கு ஏற்றபடியே முயற்சிகளிற் பிரவேசிக்

*இராமநாதர் — பகவத்கீதை : பக். 114.

கிருன் என்பதை அறிவுறுத்தும்பொருட்டு ஞானிகளுட் பெரும்பான்மையோர் சத்துவகுண இயல்புடையராதலின் அவர்கள் அன்னதானஞ் செய்தல், ஞானசாத்திரங் கற்பித்தல், தர்மோபதேசஞ் செய்தல் முதலிய பரோபகார முயற்சிகளில் ஈடுபட்டு ஒழுகுவர்.

குறிப்பு : 2

பூதங்கள்—ஜீவாத்மாக்கள். பந்தமுற்றுக் கிடக்கும் விலங்கு பறவை முதலிய ஜீவாத்மாக்களும் தத்தம் சரீரங்களின் குண இயற்கைகளுக்கு அடிமைப்பட்டே நின்று இயங்குகின்றன. அதனுல் அவைகளும் இயற்கையின் படியே நடந்துகொள்கின்றன.

குறிப்பு : 3

பிரகிருதியின் குணங்களாகிய சத்துவகுணம், ரஜோ குணம், தமோகுணம் என்பன மாறிமாறிச் சுழன்று தொழிற்பட்டுக்கொண்டிருக்குந் தன்மையினுல், பிரகிருதியில் அகப்பட்டு அதன் ஆட்சியின்கீழ்க் கிடந்து தத்தளிக்கும் ஜீவாத்மாக்கள் பிரகிருதியின் இயற்கையை எவ்வகையிலும் வெல்லுதல் இயலாதென்பதை உணர்த்துவதற்கு இயற்கையை அடக்குதல் பயன்படாது எனக் கூறப்பட்டது.

## 34

## மனத்தில் எழும் விருப்பு வெறுப்புக்கள் செல்லுங் கதிக்குப் பெருந்தடைகள்.

**ஒவ்வொரு இந்திரியத்தின் விஷயத்தில் ராகத் துவேஷங்கள் நிலைபெற்றவைகள். அவ்விரண்டுக்கும் தேகி வசமாகக்கூடாது. அவை இவனுக்குப் பரிபந்திகள்.**

பொழிப்பு :

ஞானேந்திரிய கர்மேந்திரிய விடயங்களில் எப்பொழுதும் விருப்பு வெறுப்புக்கள் நிலைபெற்

றிருக்கின்றன. அவ்விரண்டுக்கும் ஒருவன் வசப் படலாகாது. அவை இவனுக்கு வழித்தடைக ளாகும்.

குறிப்பு: 1

மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய ஞானேந் திரியங்கள் தத்தம் விடயங்களாகிய பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் என்பவற்றைப் பற்றியவுடனே அவ் விடயங்களின் பிம்பங்கள் மனத்திலே தோன்றும். தோன்ற மனம் அப்பிம்பங்களைப் பற்றும். பற்றும்பொழுது அடி மனத்திலுள்ள விருப்பு வெறுப்புக்கள் வெளிவந்து பிம்பங்க ளுடன் ஒன்றுபட்டுச் சேர்ந்து நிற்கும். விருப்பத்தோடு ஒன்றுபட்ட விடயங்களை ஜீவாத்மா நன்றென்று கூறும். வெறுப்போடு ஒன்றுபட்ட விடயங்களை அது தீதென்று கூறும்.

குறிப்பு: 2

விருப்பு வெறுப்புக்களைக் கடந்த ஞானி விடயங்களை நல்லனவென்ருே தீயனவென்ருே கூறுவதில்லை. அவ னுக்கு எல்லாம் நன்றே.

குறிப்பு: 3

விருப்பு வெறுப்புக்கள் மனத்திலே தோன்றினும் ஒருவன் அவைகளுக்கு அடிமைப்படுதல் கூடாது. அவை களிலிருந்து கழன்று பற்றற்று நிற்றல் வேண்டுமென்று இவ்வறிவுரையில் உபதேசித்தருளுகின்ருர்.

குறிப்பு: 4

இந்த விருப்பு வெறுப்புக்கள் ஜீவாத்மா மேலான ஞானங்களைப் பெறுவதற்குப் பெருந் தடைகளாய் நிற் கின்றமையால் இவற்றை 'செல்லுங் கதிக்குப் பெரிய வழித்தடைகள்' எனக் கூறினர்.

# 35

## குணமற்றதாயினும் சுவதர்மமே சிறந்தது.

**சாதுர்யமாக அனுஷ்டிக்கப்பட்ட பரதர்மத்திலும் சுவதர்மம் குணத்தில் தாழ்வா யிருந்தாலும், தேகிக்குச் சிரேயஸைச் செய்யும். சுவதர்மத்தில் மரணம் சிரேயஸைச் செய்யும். பரதர்மம் பயத் தைச் செய்யும்.**

பொழிப்பு:

சாதுரியமாகச் செய்யப்படும் பரதர்மத்தைக் காட்டிலுங் குணமற்றதெனினுஞ் சுவதர்மமே சிறந்தது. சுவதர்மத்தில் இறந்துவிடினும் நன்றே யாம். பரதர்மம் பயத்துக்கிடமானது.

குறிப்பு: 1

இம் மந்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் 'நீ உன் சுவதர்மமாகிய போரினைச் செய்', என உபதேசித்ததன் பின்னர், பரதர்மத்தைப்பற்றிச் சொல்லுகிறார். இப் பொழுது கூறப்படும் உபதேசப் பொருளே கர்மயோக நெறியின் உயிர்நிலையம் எனக் கூறலாம்.

குறிப்பு: 2

மனச்சோர்வுற்றுப் போரில் ஊக்கங் குன்றியிருத்தல் ஏனையோர்க்கு ஒருவேளை சுவதர்மமாக இருக்கலாம். ஆனால் அர்ச்சுனனுக்கு அது சுவதர்மம் அன்று. அது பரதர்மம். இந்தப் பரதர்ம மனோநிலை அர்ச்சுனனுக்கு எங்ஙனம் வந்ததெனில் அவன் மனத்தில் எழுந்த—தம்மவர் பிறர்—என்ற சுயநலத் தொடர்புள்ள ஆசையினால் வந்தது. எனவே, இவ்வுலகில் சுவதர்மத்தைக் கைவிட்டுப் பரதர்மத் தில் மனிதன் பொருந்தி உழைப்பதெல்லாம் தம் இயற் கைக்குச் சிறிதும் பொருந்திவராத சுயநலம் மிகுந்த ஆசை அபிமானங்களாலேயே. இந்து தர்மத்தின்படி, ஆசை என்பது கூட, தன் இயற்கைக்குந் தன் சுபாவத்துக்கும் மாறாக சாமர்த்தியமாக ஒருவன் தன் மனத்தில் ஏற்படுத்தி விடும் மன எழுச்சி நிலையே. இந்து தர்மத்தின் அடிப்

படைக் கொள்கையின்படி, இவ்வுலகில் ஒரு தர்மராச்சியம் உதயமாக வேண்டுமெனில், ஆசை என்பதற்கு இடமின்றி, ஆசை பொல்லாதது என உணர்ந்து, ஒரு குறிக்கப்பட்ட மக்கட் தொகையினராயினுந் தமது சுபாவத்திற்கும் இயற்கைக்கும் ஏற்றபடி கர்மத்தையுந் தொழிலையும் ஆற்றி வாழ்வாங்கு வாழ்ந்து வருதல் வேண்டும். இயற்கைச் சுபாவங்களுஞ் சுவகர்மங்களும் இயற்கையாகவே இயற்கையிலிருந்து பொங்கியவண்ண மிருக்கின்றன. காற்று வீசுவதுபோலவும், அக்கினி எரிவதுபோலவும், தண்ணீர் மேலிருந்து கீழ்நோக்கி ஓடிச்செல்வது போலவும், சந்திர சூரியர்கள் தத்தமக்குரிய வரம்புக்குட்பட்டுத் தோன்றி நிலைபெற்று மறைவதுபோலவும், பிரகிருதியின் குணங்கள் இயற்கையாகவே பிரவாகித்துக்கொண்டிருக்கின்றன. இந்த இயற்கைப் பிரவாகத்தை அனுசரித்து வாழ்வதே இந்து தர்மத்தின் அடிப்படை இரகசியமாகும். அதனாற்றான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் 'ஆசை அபிமானங்களின்றி அர்ச்சுன உன் சுவதர்மத்தை அனுசரித்து நீ போர் செய்' என இடித்து இடித்து உபதேசிப்பாராயினர்.

குறிப்பு : 3

சுவகுணம் — மாதாவின் கர்ப்பத்திலே ஒருவன் சிசுவாயிருக்கும்பொழுது அமைந்திருக்கும் நியமகுணம். அதனைத் திருவள்ளுவர் கருவிலமைந்த 'உண்மையறிவு' எனக் கூறுவர். இந்த நியம குணஞ் சிதறாமல் மரணபரியந் தம் நிலைபெற்று ஜீவாத்மாவை அலையவிடாமற் காக்கும் சக்தி வாய்ந்தது. உறுதியாக அமைந்துள்ள இந்தச் சுவ குணத்தால் தனக்கு நேரிடும் பலவகை அனுபவங்களையுந் தனக்கு ஏற்றவகையிலே விளங்கிக்கொண்டு அங்கு இங்கு என்று அலைந்து திரியாமல் ஜீவாத்மா நிதானமாய் வாழும்.*

*நிதானமிழந்து வீண் ஆசைகளால் ஏவப்பட்டு ஐம்பொறி வழிகளில் அங்கு இங்கு என்று அலைந்து திரிந்து நாடோடிகளாய்த் திரிகின்ற ஜீவாத்மாக்களையும் இறைவன் கைவிடுவதில்லை. துன்பம் என்ற அக்கினியால் வாட்டி அவர்களின் புத்தியில் நிதானமும் தர்மாதர்ம விவேகமும் வருவித்து சுவதர்மானுஷ்டானத்திற் செலுத்திக் கடைசியில் உய்யக்கொள்வன் என்பது இந்து தர்மத்தின் தலைசிறந்த கொள்கை.

இராமநாதர் — பகவத்கீதை : பக். 118இல் கூறியதைப் பார்க்க.

சுவகுணமானது சூட்சும உடம்புடன் ஒன்றுபட்டிருப்பதால் அது மிக மிக அந்தரங்கமாயிருப்பது. அதனை அறிதல் மிக மிகக் கடினம். அதனை ஜீவாத்மாவானது மெல்ல மெல்ல அறிந்து அதன் சார்புகெட ஒழுகுவதற்கு இறைவன் புற உலகிலே படைத்தருளிய கர்மங்களைச் சுவகர்மங்கள் என்பர். ஜீவாத்மாவானது தனது சுவகுணத்துக்கு ஏற்ப சுவகர்மங்களை அனுஷ்டிக்கும்பொழுது நிகழும் அழகும் பொலிவும் நிறைந்த அன்புமயமான தர்மக் காட்சியையே சுவதர்மம் என்பர். சுவகுணத்திற்கு ஏற்பவே கர்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக்கரணங்கள் ஜீவாத்மாவுக்கு ஏற்பட்டுள்ளன. சுவகுணம், அதற்கு இசைந்த கருவி கரணங்கள், அந்தக் கருவி கரணங்களுக்கேற்ற சுவகர்மங்கள் ஆகிய இவை பரஸ்பரம் ஒன்றுபட்டு உழைக்கும்பொழுது நிகழும் தர்மக் காட்சியை அழகும் பொலிவும் நிறைந்த இலட்சியக் காட்சி என்று கூறுவதிற் பிழையில்லை. அதனாற்றான் சுவதர்மக் கொள்கை இந்து தர்மத்தின் அடிப்படை உயிர்க்கொள்கை யென வலியுறுத்தப்படுவதாயிற்று.

குறிப்பு : 4

இந்த உபதேசத்தினாலே, சுவதர்ம உண்மைப்பொருளில் தெளிவுபெற்றவனாகிய அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பார்த்துப் பின்னொன்று வினவுகின்றான். ''சுவதர்மத்தின் பெருமையெல்லாம் இங்ஙனமிருப்ப, யான் ஏன் பரதர்மத்தை நாடினேன்'' என்பது அவ்வினா.

## 36

## பரதர்மத்தில் என்னைச் செலுத்திக்கொண்டிருப்பது எது ?

**அர்ச்சுனன் கூறுகின்றான் :**

**வார்ஷ்ணேய, இந்தப் புருஷன் இச்சையற்றவனாயிருந்தாலும் பலாத்காரமாக ஏவப்பட்டவன் போல், எதனால் பிரயோகிக்கப்பட்டுப் பாபத்தைச் செய்கின்றான்.**

பொழிப்பு:

விருஷ்ணி குலத்தோன்றலே மனிதனுக்கு இச்சையில்லாவிடினும், அவனை வலியக் கொண்டு புகுத்துவதுபோல் பரதர்மத்தில் தூண்டிப் பாவம் செய்விப்பது யாது?

குறிப்பு: 1

ஸ்ரீ கிருஷ்ணபகவானை அர்ச்சுனன் 'விருஷ்ணி குலத் தோன்றலே' என அழைக்கின்றான். விருஷ்ணிகள் கோபால ரென்றும் யாதவரென்றும் அழைக்கப்படுவர்.

குறிப்பு: 2

மனிதனுக்கு இச்சை இல்லாவிடினும்—மனிதனுக்கு பரதர்மத்தில் இயற்கை நாட்டமில்லாவிடிலும்.

குறிப்பு: 3

எதனால் சுவதர்மத்தை மறந்து பரதர்மத்திற் பலாத் காரமாகச் சேர்க்கப்படுகிறான்? சேர்க்கப்பட்டு எதனாற் துன்பத்தை விளைவிக்கும் பாபகர்மங்களைச் செய்கின்றான்? என்ற இவைபோன்ற வினாக்கள் அர்ச்சுனனால் எழுப்பப் படுகின்றன. அர்ச்சுனன் இயற்கையாகவே பரதர்மமாகிய போரில் ஊக்கங்கொள்ளாமையை விரும்பினவனுமல்லன் என்பதும், சுவதர்மமாகிய போர்புரிதலைக் கைவிட்டவனு மல்லன் என்பதும், இம் மந்திரத்திற் கூறப்படுகின்றன.

குறிப்பு: 4

பரதர்மமாகிய 'போரில் ஊக்கமில்லாமையை' அவ னிடத்திற் செலுத்தியது, அவன் தன் பந்துக்கள்மீது கொண்ட ஆசையே என்பதை அடுத்து வரும் மந்திரங்கள் விளக்குகின்றன.

குறிப்பு: 5

பரதர்மம்—ஒருவனுடைய சுவகுணத்திற்கு மாறான கர்மம் நிகழும்பொழுது பரதர்மம் இயலுகிறது. சுவகுணம்

கர்ப்பத்தில் அருளப்பட்ட மனோநிலைகளால் ஏற்பட்ட ஒரு நியமகுணம். மனத்தில் நிதானமின்றி எழும் ஆசை காரண மாக சுவகுணத்திற்கு மாறான ஒரு கர்மத்தை ஒருவன் செய்வானாயின் அது பரதர்மம் ஆகும். அடிப்படைச் சுவ குணம் ஒரு அந்தத்தில் நின்று தேம்ப, செய்யப்படுஞ் செயல் மற்றைய அந்தத்தில்நின்று இழுப்ப, நிகழக்கூடியது யாது? என்பதை நாங்கள் சிந்தனைக்கண்கொண்டுதான் ஊகித்தல் வேண்டும். தன் சுவகுணத்திற்குச் சிறிதேனும் பொருந்திவராத கர்மத்தை ஒருவன் செய்யும்பொழுது கர்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக்கரணங்கள்கூட அவ னுடன் எதிரிட்டுப் போரிடுகின்றன. அவைகள் பேத லித்து வலிமைகுன்றி நாளுக்குநாள் தேய்தலுற்றுக் கடைசி யிற் பயதுக்கங்களில் அழுந்திக் கெட்டுவிடுகின்றன. வேதங் கள் 'என் கைக்கு ஏற்ற செயல்களையே யான் செய்தல் வேண்டும், என் கண்ணுக்கு ஏற்ற காட்சிகளையே யான் காணுதல் வேண்டும், என் மனத்திற்கேற்ற கருத்துக் களையே யான் சிந்தித்தல் வேண்டும்,' எனப் பிரார்த்திப் பதன் நோக்கம் இதுவேயாகும்.* இந்து தர்மத்தை வலி யுறுத்த வந்த பெரியோர்கள் அனைவரும் 'பரதர்மத்தால் ஒருவன் கீழ்நிலை யடைகின்றான்' எனக் கூறிப் பரதர்மத் தைக் கண்டிப்பாராயினர்.

குறிப்பு: 6

ஒருவன் தனது சுவகுணத்திற்கு ஏற்றபடி கர்மத் தைச் செய்து ஒழுகுவானாயின் அக் கர்மம் சமூகத்தின் பார்வையில் இழிந்ததொன்றாயிருப்பினும் அதனால் வரப் போவது ஒன்றுமில்லை. அச் சுவகர்மத்தில் ஈடுபடும் பொழுது அவன் இறக்கவும் நேரிடலாம். அவனுடைய கருவி கரணங்களாகிய அனைத்துந் திருப்திப்படுகின்றன. அவனுடைய மனம் சாந்தமடைகின்றது. அவன் தான் பூசித்து வந்த தன் அதிதெய்வத்தையும் அணுகி, சுவர்க் கத்தையும் பெற்றுவிடுகின்றான்.

*ஈசாவாஸ்ய சுருதி — 17ஆம் மந்திரம் பார்க்க.

## 37

## காமக்குரோதங்களே பரதர்மத்திற் செலுத்துகின்றன.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறுகின்றார் :

இது ரஜோகுணத்தில் நின்று தோன்றினதும் பெருவயிறு பெற்றதும் மஹாபாபத்தைச் செய்விக் கின்றதுமாகிய காமம். இதுவே கோபம். இதனை இவ்விடத்தில் சத்துரு என்று அறிக.

பொழிப்பு :

பரதர்மத்திற் செலுத்துவன காமக் குரோதங்களே. அவை ரஜோகுணத்திற் பிறப்பன; பெருவயிறு பெற்றன; பெரும் பாவத்தைச் செய்விப்பன. இதனை இங்கு சத்துருவாகத் தெரிந்துகொள்.

குறிப்பு : 1

காமக்குரோதங்கள் ஆணவமலத்தின் குணங்கள். தணிக்க முடியாத விருப்பு வெறுப்பு நிலைகளை ஜீவாத்மாவுக்குக் கொடுத்துக்கொண்டிருப்பன.

குறிப்பு : 2

இந்தக் காமக்குரோதங்களே சுவதர்மத்தை மறப்பித்து ஜீவாத்மாக்களைப் பரதர்மத்திற் செலுத்துவன. இவை ரஜோகுண சம்பந்தத்தால் தமது முழு ஆற்றலையுங் காட்டி வெளிப்படுவன. இங்கு கூறப்படும் காமம் கர்மேந்திரிய ஞானேந்திரியங்களை எண்ணற்ற விடயங்களிற் செலுத்திப் புசித்துக்கொண்டிருக்கும். அதனால் இந்தக் காமம் பெருவயிறு பெற்றதெனக் கூறப்பட்டது.

குறிப்பு : 3

'இதனை இங்கு சத்துருவாகத் தெரிந்துகொள்' என்றதனால், காமமும் குரோதமும், ஆசை என்ற ஒரு குணத்திற்

பிறந்த இரட்டைகள் என்பது வலியுறுத்தப்பட்டது. காமம் அல்லது இச்சையைத் தடுக்கும்பொழுது அது குரோதமாக உருவெடுக்கின்றது. ஒருவனுடைய இச்சையைத் தடுத்தால் அது அவனிற் பெருமூச்சையும், சிவந்த கண்ணையும், நுரைத்த வாயையும், தடுமாற்றம் நிறைந்த பேச்சையும் உண்டுபண்ணுகின்ற குரோதமாக மாறுவதை நாங்கள் காண்கின்றோமல்லவா ?*

குறிப்பு : 4

இந்தக் காமம் எனப்படும் ஆசை ஜீவாத்மாவின் அறிவையுஞ் சாந்தியையுங் கெடுப்பதனுல் இதனைச் சத்துரு என்முர்.

குறிப்பு : 5

இந்தக் காமம், விடய அனுபவங்களால் மேன் மேலுங் கூர்மையுற்று வளருவதேயன்றித் தணியாது. அதனுல் அது பெரும் பாபத்தைச் செய்விப்பதென்முர்.

## 38

### காமத்தால் இந்த ஜீவாத்மா மறைக்கப்பட்டிருக்கிறது.

**எவ்விதம் புகையால் நெருப்பு மறைக்கப்படு கின்றதோ, எவ்விதம் அழுக்கால் முகக்கண்ணுடி மறைக்கப்படுகின்றதோ, எவ்விதம் கர்ப்பப் பையால் சிசு மறைக்கப்படுகின்றதோ, அவ்விதம் அதனுல் இது மறைக்கப்பட்டது.**

பொழிப்பு:

புகையினுல் தீ சூழப்பட்டிருப்பது போலவும் அழுக்கினுல் முகக்கண்ணுடி மாசுபடிந்திருப்பது போலவுங் கர்ப்பப்பையாற் சிசு மறைக்கப் பட்டிருப்பதுபோலவும் இதனுல் — இந்தக் காமத் தால் — ஜீவாத்மா மறைக்கப்பட்டிருக்கிறது.

---

* இராமநாதர் — பகவத்கீதை: பக். 124.

குறிப்பு: 1

நெருப்பில் எழும் புகையே கடைசியில் நெருப்பையும் விழுங்கி விடுகிறது. அதுபோல ஜீவாத்மாவிலிருந்து இடையருது எழுகின்றதாகிய காமம் எனப்படும் ஆசை கடைசியில் அந்த ஜீவாத்மாவையும் விழுங்கிவிடுகிறது. அதனுற்ருன் புகையால் நெருப்பு மறைக்கப்படுகிறது போலக் காமத்தீயால் ஜீவாத்மா மறைக்கப்படுகிறது எனக் கூறப்பட்டது.

குறிப்பு: 2

காமம் ஜீவாத்மாவில் வேறறப் பொருந்தியிருந்து அதன் அறிவையுஞ் சாந்தியையுங் கெடுத்துக் கடைசியில் இந்த ஜீவாத்மாவைத் தன்மயமாக்கிவிடும்.

## 39

### இந்தக் காமமே ஞானிக்கு நித்திய பகை.

**கௌந்தேய, புத்திமானுக்கு நித்திய விரோதியும் தான் பற்றின விஷயத்தை மனசில் ஆரோபிக்கின்றதும், அக்கினிபோலத் தன் ஆசிரயத்தை எரிக்கின்றதும் திருப்திசெய்ய முடியாததும் ஆகிய இதனுல் அவனது ஞானம் மறைக்கப்பட்டிருக்கின்றது.**

பொழிப்பு:

குந்தியின் மகனே! காமம் எனப்படும் இந்த நிரப்பொணுத் தீ ஞானிக்கு நித்திய பகையாகும். இது அவன் ஞானத்தைச் சூழ்ந்து நிற்கிறது.

குறிப்பு: 1

'நிரப்பொணுத் தீ' என்றது நெருப்புப்போலத் தான் பற்றிய பொருள்களை யெல்லாம் எரித்துக் கெடுக்குந்

தன்மை பெற்றதுமன்றி, நெருப்புப் போல 'போதும்' என்ற திருப்தித் தன்மையை எக்காலத்திலும் பெருத இயல்பினது காமம் என உணர்த்தும் பொருட்டு.

குறிப்பு : 2

ஞானிக்கு நித்தியப்பகை — ஞானியை ஒவ்வொரு கணப்பொழுதும் போருக்கு இழுத்துக்கொண்டிருக்கும் பகைப் பொருள். இந்தக் காமம், சுற்றிச் சூழ்ந்து இருக்கும் ஆவரண சக்திபோலிருந்து, ஜீவாத்மாவின் அறிவை மூடிக் கொண்டிருக்கிறது.

## 40

## இந்தக் காமமே ஜீவாத்மாவைப் பலவாறு மயக்குகிறது.

இதற்கு இந்திரியங்களும், மனசும் புத்தியும்,
அதிஷ்டானம் என்று கூறப்படுகின்றது. இது
இவைகளால் ஞானத்தை மறைத்து தேகியைப்
பலவித மோகத்தில் ஆழ்த்துகின்றது.

பொழிப்பு :

இந்திரியங்களும் மனமும் புத்தியும் இந்தக் காமத்துக்கு நிலைக்களன் என்பர். இவற்ருல் இது ஞானத்தைச் சூழ்ந்து மனிதனை மயக்குவிக்கிறது.

குறிப்பு : 1

ஆணவமல சம்பந்தத்தினுலே, ஆதியிலிருந்தே ஆசையின் வடிவமாய் இருக்கும் ஜீவாத்மாவுக்கு இறைவன் மாயையிலிருந்து தனுகரணங்களையும் — அதாவது உடம்பையும் அதற்குரிய கர்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக் கரணங்களையும் — வழங்கியருளினுர். ஜீவாத்மாவுடன் ஒன்றுபட்டிருக்கும் இந்த ஆசை ஞானேந்திரிய கர்மேந் திரியங்களுக்கும் மனம் புத்திகளுக்கும் படர்ந்து சென்று அவற்றையுந் தம் வசப்படுத்தி வைத்திருக்கும் என்றதனுல் 'அவற்றைக் காமத்தின் நிலைக்களன்' என்ருர். அறிவு

விளக்கத்திற்கெனத் தரப்பட்டனவாகிய கருவி கரணங்களைச் சூழ்ந்து இந்த ஆசை நிற்பதனுல் கருவி கரணங்களை விடய அனுபவங்களில் தூண்டிக்கொண்டு நிற்பதும் இந்த ஆசையே. அதனுற்ருன் சைவசித்தாந்திகள் ' அறிவு விளக்கத்திற்கெனத் தரப்பட்டனவாகிய கருவி கரணங்கள் மயக்கத்தையுஞ் செய்வன ' எனக் கூறுவர்.

குறிப்பு : 2

இவற்ருல் — இந்திரியங்களால். ஞானத்தைச் சூழ்ந்து ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை நிலைக்களனுகக் கொண்டமையால், இந்த இந்திரியங்கள் மூலமாக இந்த ஆசையானது ஜீவாத்மாவின் ஞானத்தையும் மறைக்கின்றது என்பது கூறப்பட்டது.

குறிப்பு : 3

கருவி கரணங்களினுல் வெளிப்படும் ஆசையினுல் கருவி கரணங்கள் மூலம் வெளிப்பட்டு வரும் அறிவு விளக்கம் மறைக்கப்படுகிறது. அதனுல் நிகழ்வது மயக்க அறிவு ஆதலின், ஆசை கருவி கரணங்களினுல் மனிதனை மயக்குவிக்கிறது எனக் கூறப்பட்டது.

## 41

### முதலில் நீ இந்திரியங்களைக் கட்டுப்படுத்து.

ஆதலால் பரதரிஷப, நீ முதலில் இந்திரியங்களை
ஒடுக்கிப் பாபத்தைச் செய்விக்கின்றதும்,
ஞானம் விஞ்ஞானங்களைக் கெடுக்கின்றதுமாகிய
இதனைக் கோல்லு.

பொழிப்பு :

ஆதலால் பாரதரேறே ! நீ முதலில் இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் அழிப்பதாகிய இந்தப் பாபத்தைக் கொன்றுவிடு.

குறிப்பு : 1

'முதலில் ஆசை காரணமாக இந்திரியங்களில் எழும் விடய இச்சைகளைத் தடுத்தல் வேண்டும்' எனக் கூறுகிறார். "இங்கு கூறப்பட்டது அட்டாங்க யோகத்திற் கூறப்படும் இயமமாகும். இந்தப் போர்க்களத்தில் கண்ணுக்கும் காதுக்கும் உனக்கு விடயமாயிருப்பது உனது பந்துக்களாகிய பாண்டவரும் கௌரவரும். அவர்கள்மீது கொண்ட ஆசையினால் நீ போரில் ஊக்கமின்றி நிற்கின்றாய். போரில் ஊக்கமின்றி நிற்பது உனக்குரிய சுவதர்மமன்று. அது உனக்குப் பரதர்மமாகும். அந்தப் பரதர்மத்தையே நீ மேற்கொண்டு நிற்கிறாய். ஆதலால் முதலில் நீ செய்யவேண்டியது உன் இந்திரியங்களைக் கட்டுப்படுத்துவதே" எனக் கூறினார்.

குறிப்பு : 2

விஞ்ஞானம் என்றது வெவ்வேறாயிருக்கும் பொருள்களைப் பற்றிய நுண்ணிய ஆராய்ச்சி அறிவு.* அதாவது புத்தியின் உதவி கொண்டு பெறப்படும் அறிவு. ஆசை, மயக்க அறிவையே தருமாதலின் வெவ்வேறு பொருள்களைப் பற்றிய உண்மை அறிவைப் பெறுவதற்கு அது தடையாக இருக்கும்.

குறிப்பு : 3

ஞானம் என்பது வேறுவேறாய்த் தோன்றிக்கொண்டிருக்கும் பொருள்களுக்கெல்லாம் ஆதாரமாக இருக்கின்ற பரம்பொருளைப் பற்றிய அனுபவ அறிவு.† இந்த அறிவைப் பெறுவதற்கும் ஆசை காரணமாக எழும் மயக்க அறிவு எப்பொழுதுந் தடையாக இருக்குமென்பது வெளிப்படை. அதனால், ஆசை விஞ்ஞானம், ஞானம் ஆகிய இரண்டையும் அழித்துவிடுமாதலின், முதலில் ஆசைக்குப் பெரிய நிலைக்களன்களாயுள்ள இந்திரியங்களைக் கட்டுப்படுத்து என்றார்.

---

* இராதாகிருஷ்ணன்—பகவத்கீதை : பக். 149. 1966 ஆம் ஆண்டுப் பதிப்பு.

† இராமநாதர் — பகவத்கீதை: பக். 126.

குறிப்பு : 4

ஆசை பாவத்தைச் செய்விப்பதாதலின், ஆசையைப் பாவமெனக் கூறி, 'அதனை வேரோடு களைந்துவிடு', என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கட்டளையிட்டார் என அறிக. ஸ்ரீ கிருஷ்ணபகவானை அர்ச்சுனனின் உள்ளம் தனக்கு வாய்த்த குரு என ஒப்புக்கொண்டு விட்டதாதலின், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இப்போது அர்ச்சுனனுக்குக் கட்டளையிடுபவர் போல ஆணை பிறப்பித்தார்.

குறிப்பு : 5

இந்திரியங்களில், ஆசை வந்து பிரவேசிக்கும் சமயங்களில், விழிப்பாகவிருந்து அதனை அவற்றிற் சீவிக்க விடாதே என்பது குறிப்பாகும்.

## 42

### ஜீவாத்மாவுக்கு மேலான பொருள் உலகிலில்லை.

**விஷயங்களுக்கு மேலானவைகளாக இந்திரியங்களைக் கூறுகின்றனர். இந்திரியங்களிலும் மேலாக மனசைக் கூறுகின்றனர். மனசிலும் புத்தி மேலானதாயிருக்கின்றது. எவன் புத்திக்கும் மேலானவனே அவன் ஆத்மா.**

பொழிப்பு :

இந்திரியங்களை மிக உயர்வுடைய கருவிகள் எனக் கூறுவர். அவற்றிலும் மனம் மேலானது. மனத்திலும் புத்தி மேலானது. எது புத்திக்கும் மேலானதோ, அதுவே ஜீவாத்மா.

குறிப்பு : 1

புறவிடய உலகங்கள் ஞானேந்திரியங்களுக்கு அனுபவப் பொருள்களாகும். அதனால் ஞானேந்திரியங்கள் மிகவும் உயர்வுடைய கருவிகள். ஞானேந்திரியங்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

குறிப்பு : 2

இந்த ஞானேந்திரியங்கள் மனத்தைச் சார்ந்து நின்று மனத்தாற் செலுத்தப்பட்டே தத்தம் தொழில்களைச் செய்கின்றன. அதனால் மனம் ஞானேந்திரியங்களுக்கு மேலானது என்பதும் வெளிப்படை.

குறிப்பு : 3

புத்திக்கு அடிமைப்பட்டால் அன்றி மனம் ஜீவாத்மாவுக்கு எப்பொழுதும் சத்துருவாகவே இருக்கும். அதனல் புத்தி மனத்திற்கு மேலானது என அறிக.

குறிப்பு : 4

ஜீவாத்மாவுக்குப் பணி செய்யும்பொருட்டே புத்தி தோன்றியது. அகம் புறம் ஆகிய இரு திசைகளிலுமிருந்து வரும் செய்திகளையெல்லாம் திட்டவட்டமாக நிச்சயித்துவிடும் தொழிலைச் செய்துவிடுவது புத்தி. இத்தொழிலையும் புத்தி ஜீவாத்மாவுக்குத் தான் செய்யும் பணியாகச் செய்து வருதலின், புத்திக்கு மேலானது ஜீவாத்மா என அறிக.

குறிப்பு : 5

ஆதலினுலே இந்திரியங்களையும் மனத்தையும் ஆசைக்கு நிலைக்களன்களாக வைத்துக்கொள்ளாமல், அவற்றை உள்ளிழுத்து முறைமுறையாகப் புத்தியிலே நிறுத்தி, அவ்வகையிலே நீயும் புத்தியிற் சரண்புகுந்து, ஜீவாத்மாவாகிய உனக்கு நன்மையைத் தரும் உன் சுவதர்மத்தில் நின்று ஒழுகு. 'நீ போர் செய்யவேண்டும்' என்பது ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய மறைமுகமான கட்டளைபோல இப்பாடலின் தொனி விளங்குகிறது.

## 43

### ஆசை எனும் உன் பகைவனைக் கொல்வாய்.

மஹாபாகு, இங்ஙனம் புத்திக்கும் மேலானவனாக ஆத்மாவை அறிந்து, புத்தியை ஆத்மாவில் நிறுத்தி அறியக்கூடாததும் காமசொரூபமுமாகிய சத்துருவைக் கொல்லு.

பொழிப்பு :

இங்ஙனம் புத்திக்கு மேலான ஜீவாத்மாவை உணர்ந்து, புத்தியை ஜீவாத்மாவில் உறுதியோடு நிறுத்தி, பெரும் தோளுடையாய் வெல்லற்கரிய ஆசையென்னும் பகைவனைக் கொல்லக்கடவாய்.

குறிப்பு : 1

இந்த உடம்பின்கண்ணுள்ள அகக்கருவிகளுள் மிகச் சூக்குமமானது புத்தியாகும். புத்தி கர்ப்பப்பைபோலெனில் அதனுள் வசிக்கும் சிசுப்போல விளங்குகின்றது ஆத்மா. இந்த ஆத்மா உடம்பிலுள்ள கருவி கரணங்களுக்கு ஆணை செலுத்தும் தலைவன்போல விளங்குகிறது. ஆத்மாவைப்பற்றிய இந்த உண்மைகளை நன்கு உணர்ந்து தெளிந்ததன் பின்னரே, புத்தியை ஆத்மாவில் நிறுத்துஞ் சாதனை கைகூடும்.

குறிப்பு : 2

'புத்தியை ஆத்மாவில் நிறுத்தி' என்றது, ஆத்மாவின் சிறப்பு இயல்புகளையெல்லாம் நன்கு தெளிந்ததன் பின்னர், அதனை அறியும் முயற்சியில் புத்தியைப் பிரதிஷ்டை செய்து என்பதைக் குறித்தது. அதாவது 'புத்தியை ஆத்ம விசாரத்திற் செலுத்தி, அந்த விசாரத்தில் நிலைநிறுத்து' எனக் கூறப்பட்டது. ஞானேந்திரியங்களும் மனமும் முழுவதும் அகமுகப்படுத்தப்பட்டுப் புத்தியிலே ஒடுங்குவன. புத்தி ஆத்மாவில் ஒடுங்குவது. அதனால் ஆசை, தான் நின்று தொழிற்படுவதற்குரிய தன் நிலைக்களன்களாகிய ஞானேந்திரியங்களும் மனமும் இல்லாமல் மறைந்து போகவே தான் சீவிப்பதற்கு வழியின்றி மெல்ல நழுவி விடும்.

குறிப்பு : 3

புத்தியை ஜீவாத்மாவில் நிறுத்துஞ் சாதனையில் கைதேர்ந்த ஞானியின் உள்ளத்தில், ஆசை இருப்பதற்கு இடமின்மையால், அந்த ஞானி தனக்குரிய சுவதர்மத்தை அன்போடும் சிரத்தையோடும் அனுஷ்டித்துக்கொண்டிருப்பன் என்பது வெளிப்படை. 'அர்ச்சுனா! நீ இந்த உண்மையை உணர்ந்தால் உன்னுடைய சுவதர்மமாகிய யுத்தத்தைக் கைவிடமாட்டாயல்லவா?' எனக் கூறி, ஸ்ரீ கிருஷ்ணபகவான் தனது கர்மயோக உபதேசத்தை முடித்தருளுகிறார்.

உ
சிவமயம்

# முக்குணப் பாகுபாடு

## முன்னுரை

சாங்கிய தத்துவ ஞானிகள் 'பிரகிருதி எனச் சொல்லப்படும் இயற்கை' ஒரு யதார்த்த வஸ்து எனக் கூறுவர். அது அவர்களது ஒரு அடிப்படைத் தத்துவ ஞான உண்மையாகும். ''இயற்கையிலிருந்தே அனைத்துந் தோன்றுகின்றன'' என்பது அவர்கள் அனைவர்க்கும் ஒரு பொதுக்கொள்கையாகவே இருந்து வருகிறது. இயற்கை எவ்வாறு தொழிற்படுகிறது என்ற வினாவிற்கு விடை கூறும் வகையிலேயே, அவர்கள் ஒருவர்க்கொருவர் மாறான கருத்துடையவராய் இருக்கின்றனர். ஆயினும் அவர்களுட் பெரும்பான்மையோர் பிரகிருதி தானாகத் தொழிற்படுவதில்லையென்றும், அது ஒரு இறைவனது சந்நிதியில் நின்றே தொழிற்படுகின்றதென்றுங் கூறுவர். ஸ்ரீகிருஷ்ணபகவான், பகவத் கீதையில் வரும் இந்த 14ஆம் அத்தியாயத்தில் பிரகிருதியைப் பற்றித் தாம் தமது அனுபவத்தில் அனுபவசித்தமாய்க் கண்ட உண்மைகளை அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளுகின்றார்.

பிரகிருதி எனப்படும் இயற்கை, பிரபஞ்சமாக மாறுதலடையும்பொழுது மிகப் பல்வேறு

க - 5

வீதங்களில் கலப்புப் பெற்றனவாகிய பல்வேறு குணங்கள் தோன்றுகின்றன என்றும், அவ்வாறு தோன்றும் பல்வேறு குணங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து உணர்ந்துகொள்ளலா மென்றும், அவ்வாறு பிரகிருதியைப் பற்றி உணர்ந்துகொள்வதனுல், ஓர் அளவிற்காயினும் ஜீவாத்மா பரமாத்மாக்களைப்பற்றிய உண்மை களைத் தெளிதற்குரிய அமைதியும் அறிவும் வாய்க்குமென்றும் இந்த அத்தியாயத்தில் உபதேசிக்கப்படுகின்றது. பிரகிருதியிலிருந்து தோன்றுவனவாகக் கூறப்படும் முக்குணங்க ளாவன சத்துவகுணம், ரஜோகுணம், தமோ குணம் என்பன. ஜீவாத்மாவுக்கு உறைவிடமாகிய தூல சூக்கும உடம்புகள், அதற்கு அனுபவம் தருவனவாகிய புறப்பொருள்கள் ஆகிய இவை அனைத்தும் முக்குணமயமாகவே இருக்கின்றன என்பது, கர்மயோக அத்தியாயத்தில் நன்கு விளக்கப்பட்டது. எனவே இவ்வத்தியாயத்திற் கூறப்படும் முக்குணப் பாகுபாடு பற்றிய உபதேசத்தை, மூன்றும் அத்தியாயத்திற் கூறப் பட்ட கர்மயோக உபதேசத்தின் தொடர்ச்சி யெனக் கொள்ளல் வேண்டும்.

# அறிவுரைகள்

## 1

### மேலான பரஞானத்தை உனக்கு உபதேசிக்கிறேன்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறுகின்றார்:

> இதில் நின்று எதை அறிந்து எல்லா முனிகளும் மேலான சித்தியைப் பெற்றார்களோ, ஞானங்களுக்குள் உத்தமமும் பரமுமாகிய அந்த ஞானத்தை இன்னும் கூறப்போகின்றேன்.

பொழிப்பு :

ஞானங்கள் அனைத்திலும் மேலான பரஞானத்தை உனக்கு இன்னும் உரைக்கின்றேன். அதை அறிந்து முனிவர்கள் எல்லோரும் இவ்வுலகத்திலேயே ஈடேற்றம் பெற்றிருக்கின்றார்கள்.

குறிப்பு : 1

இதற்கு முந்திய அத்தியாயங்களிலும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் மேலான பரஞானத்தின் தன்மைகளை அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளினார். ஆதலின் இப் பாடலில் 'இன்னும் உரைக்கின்றேன்' எனக் கூறுகின்றார்.

குறிப்பு: 2

சமயக்கண்கொண்டு காண்பவர்கள், ஞானங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். அவையாவன: அபரஞானம் பரஞானம் என்பன. அபரஞானத்தைக் கேட்டல் ஞானம் எனக் கூறுவர். மற்றவர் கூறத் தான் கேட்டு ஞாபகசக்தியளவில் வைத்திருக்கும் ஞானம், அபரஞானம். வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள்

முதலியவற்றை நன்கு கற்ற ஒருவனிடத்தில் வந்து சேருவது இந்த அபரஞானமே.*

குறிப்பு: 3

பரஞானம் – ஒருவன் தன் அறிவில் கண்டு தெளியும் அனுபவஞானம். தன் அறிவில் என இங்கு கூறியதைத் தானுகிய ஆன்மாவின் சுத்த அறிவில் என விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். தானுகிய ஆன்மாவில் கண்டு தெளியும் அனுபவ ஞானத்தைச் சைவசித்தாந்த நூல்கள் சிவஞானம் எனக் கூறும். எனவே, பரஞானம் என இங்கு கூறியது சைவசித்தாந்தத்தின்படி சிவஞானத்தை என அறிக.

குறிப்பு: 4

முனிவர்கள் என்றது, மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களிலும் மிகுந்த அடக்கம்பெற்று சித்த சுத்தி கைவந்து வாழும் பெரியோர்களே.

குறிப்பு: 5

மேலான பரஞானத்தை உணர்ந்த முனிவர்கள், பாச பந்தங்களிலிருந்து நீங்கிப் பரமாத்மாவைச் சார்ந்து வாழ்பவராதலின், அவர்கள் இந்த உடம்புடன் இவ்வுலகில் இருக்கும்பொழுதே, பாசபந்தங்களிலிருந்து விடுதலை பெற்றவர்கள். அங்ஙனம் இந்த உடம்புடன் வாழும் பொழுதே விடுதலை பெற்றிருப்பவரை, ஜீவன் முக்தர் என அழைப்பர்.

## 2

## பரஞானம் பெற்ற பெரியோர் பிறவார் இறவார்.

**இந்த ஞானத்தை ஆசிரயமாகக்கொண்டு எனது சாதர்ம்யத்தைப் பெற்றவர்கள் சிருஷ்டி காலத்திலும் பிறக்கின்றார்களில்லை; பிரளயத்திலும் அழிவு பெறுகின்றார்களில்லை.**

---

* இராமநாதர் — பகவத்கீதை: பக். 388.

பொழிப்பு :

இந்த ஞானத்தை அடைந்து அதனுல் என் இயல்பு பெற்ருேர் படைப்புக் காலத்தில் பிறவார் ; ஊழியிலும் சாகமாட்டார்.

குறிப்பு : 1

மேலான இந்த ஞானத்தின் சார்பு கிடைத்தாலன்றி ஆணவம், கன்மம், மாயை எனச் சொல்லப்பட்ட மும்மலங்களும் நீங்கமாட்டா. ஜீவாத்மா விடுதலை பெறவேண்டுமெனில், இந்தப் பரஞானத்தைப் பெற வேண்டியது இன்றியமையாதது என்பதைக் குறிப்பதற்கு '' இந்த ஞானத்தை அடைந்து '' என்ருர்.

குறிப்பு : 2

இந்த ஞானத்தைப் பெறுவதனுல், முனிவர்கள் இறைவனுக்குரிய எண் குணங்களையும் பெறுகின்றனர். எண்குணங்களாவன : முற்றுணர்வு, வரம்பிலின்பம், தன்வயமுடைமை, பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, தூயவுடம்பினனுதல் முதலியன.

என் இயல்பு பெற்ருேரென ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறியதன் கருத்து இதுவே.

குறிப்பு : 3

ஜீவன்முக்தர்கள் இறைவனின் குணங்களைப் பெற்றவ ராதலின், அவர்கள் இறைவனைப்போல் பிறப்பதில்லை இறப்பதில்லை. அவர்கள் ஆரம்ப படைப்புக்காலத்தில் பிறப்பதுமில்லை, உலகம் ஒடுங்குகின்றதாகிய ஊழிக்கால முடிபில் இறப்பதுமில்லை. இறைவனுக்கும் ஜீவன்முக்தர் களுக்கு மிடையிலுள்ள ஒரு வேற்றுமை யாதெனில், இறைவன் இயற்கையிலேயே சக்தியையுடைய சக்திமானு யிருக்கின்ருன். ஜீவன்முக்தரிடத்திலிருப்பது இறைவனுல் அருளப்பட்ட சக்தியேயாகும்.*

* இராமநாதர் — பகவத்கிதை: பக். 389.

## 3

## எனக்கு ஆதாரம் மஹத் எனப்படும் பிரமமே.

**பாரத, மகத்துவம் பெற்ற பிரமம் என்ற மூலப் பிரகிருதி எனது யோனி – அதில் நான் எனது கர்ப்பத்தை வைக்கிறேன். அதில்நின்று சகல பூதங்களின் சம்பவம் உண்டாகின்றது.**

### பொழிப்பு :

பெரிய மஹத் எனப்படும் பிரமமே எனக்கு ஆதாரம். அதில் நான் கருத்தரிக்கின்றேன். பாரதா! எல்லாப் பூதங்களின் தோற்றமும் அதிலேதான் உண்டாகின்றது.

### குறிப்பு : 1

*மஹத் — மிகப் பெருமை பெற்றது.*

*பிரமம் — மிக மிக விரிந்துசெல்லும் இயல்பினது.*

*'மஹத் எனப்படும் பிரமம்' என்றது இங்கு பிரகிருதியை.*

*பெருமை பெற்றதும் மிக மிக விரிந்துசெல்லும் இயல்பினதும் ஆகிய பிரகிருதியே எல்லாத் தோற்றங் களுக்கும் மூலமாயுள்ளது. இந்தப் பிரகிருதியிலிருந்து முதலில் தோன்றுவன குணங்கள். குணங்களிலிருந்து அந்தக்கரணங்கள், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் புறவிடயங்கள் முதலிய எல்லாந்தோன்றுகின்றன. இந்தப் பிரகிருதியிலிருந்து இயற்கையாயெழும் அற்புதப் பெரும் பிரவாகத்தைத் தம் காட்சியில் கண்ட இந்திய ஞானிகள், இந்தப் பிரகிருதியை 'மஹத் பிரமம்' எனக் கூறுவா ராயினர்.*

### குறிப்பு: 2

*எனக்கு ஆதாரம் — எனது சக்தியில் மிகச் சிறிது பகுதியாகிய ஒருதுளியை யான் செலுத்துவதற்கு வாய்த்த ஆதார நிலையம்.*

குறிப்பு: 3

யான் கருத்தரிக்கிறேன். — என்னுடைய சக்தியில் மிகச் சிறிய பகுதியாகிய ஒரு துளியை யான் அதில் தங்கச் செய்கின்றேன். அந்தச் சக்தியின் துளியை இந்தப் பிரகிருதி தரிக்கும்பொழுது, இது மூன்று பெரும் பாகங்களாகப் பிரிந்து நிற்கிறது. ஒருபாகத்தில் பிரகிருதியின் சடத்துவம் தன் வலிமையைக் காட்டி மேலோங்கி நிற்கிறது. இன்னொரு பாகத்தில் பிரகிருதியின் சடத்துவம் தன் வலிமையைக் காட்ட இயலாது, ஒரு சமத்துவ நிலை பெற்று நிற்கிறது. மற்றைய பாகத்தில் பிரகிருதியின் சடத்துவம் தன் வலிமை குன்றி நிற்கிறது. இந்த மூன்று பெரும் பாகங்களையும் தமோகுணம், ரஜோகுணம், சத்துவ குணம் என்பர் போலும்.

குறிப்பு: 4

இந்தப் பிரகிருதியில் எனது சக்தியின் ஒரு துளி சேர்ந்த மாத்திரத்தில் குணங்களேற்பட்டு, அவற்றின் காரியங்களாகிய சூட்சும, தூல, தேகங்கள் முதலிய எல்லாம் உண்டாகின்றன.

குறிப்பு: 5

இறைவனுடைய சக்தியின் ஒரு மிகச் சிறிய துளி பிரயோகிக்கப்படும் நிலைக்களனாகிய இந்தப் பிரகிருதியை, இறைவனின் பரிக்கிரக சக்தியென்றும், வைப்புச் சக்தியென்றும், சைவசித்தாந்த நூல்கள் கூறும். இந்தப் பிரகிருதியின் பல்வேறு குணங்களுள், விரிதலும் ஒடுங்குதலுமே மிக முக்கியமான குணம் என்பதை மேற்கூறப்பட்ட நூல்கள் நன்கு விளக்கிக் கூறும். இக்குணங்களுக்கு வேறாகப் பிரகிருதியில் வேறு குணங்களும் உள. அவை யாவன: சடத்துவத் தன்மையிற் சிறத்தல், தனக்கு அந்நியமான சித்துப்பொருள்களைத் தன்மயமாக்குதல் முதலியன.

## 4

## எல்லா வடிவங்களுக்கும் பெரிய முதற் காரணம் மஹத் எனப்படும் இந்தப் பிரமமே.

**கௌந்தேய, எல்லா யோனிகளிலும் எந்த மூர்த்திகள் பிறக்கின்றனவோ அவைகட்கு மகத்தான பிரமம் யோனி. நான் பீஜத்தைக் கொடுக்கின்ற பிதா.**

பொழிப்பு :

குந்தியின் மகனே! எல்லாக் கருக்களிலும் பிறக்கும் எல்லா வடிவங்களுக்கும் 'மஹத் எனப்படும் இந்தப் பிரமமே' பெரிய காரணம். நான் விதைதரும் பிதா.

குறிப்பு : 1

இவ்வுலகில் எழுவகைப் பிறப்புக்கள், எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்கள் உள என்பர். அந்த யோனி பேதங்களிலிருந்து உற்பவிக்கும் வடிவங்கள் அநந்தம் என்ற எண்ணிக்கை உடையன. அந்த அநந்த வடிவங்களுக்கும் பிறப்பிடமாய் விளங்கும் மஹத்துவம் பொருந்திய மாதா இந்தப் பிரகிருதியே. எல்லாத் தோற்றங்களுக்கும் தானே மூலமாய் இருப்பதால், இந்தப் பிரகிருதியை மூலப் பிரகிருதி எனவுங் கூறுவர்.

குறிப்பு : 2

யானே இந்த மூலப் பிரகிருதிக்குச் சக்தியைத்தருபவன் என்பார், 'யானே விதை தரும் பிதா' எனக் கூறினர்.

குறிப்பு : 3

தேவர், மனிதர், அசுரர் ஆகிய தோற்றங்கள் அனைத்துக்கும் பிறப்பிடம் பிரகிருதியென இவ்வறிவுரையிற் கூறப்பட்டது.

# 5

## குணங்கள் ஜீவாத்மாவைப் பிணித்துக்கொள்கின்றன.

மஹாபாகு, பிரகிருதியினின்று பிறந்த சத்வம்,
ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் மாறுதலற்ற
தேகியை தேகத்தில் பந்திக்கின்றன.

பொழிப்பு :

பெருந்தோளுடையாய்! பிரகிருதியிலிருந்து சத்துவகுணம் ரஜோகுணம் தமோகுணம் என்ற முக்குணங்களும் எழுகின்றன. எழுந்து, அழிவற்ற ஜீவாத்மாவை பந்திக்கின்றன.

குறிப்பு : 1

பெருந்தோளுடையாய்! என்று விழித்தது, அர்ச்சுனனுக்கு அவனிடத்திலுள்ள ஞானம், தீரம் முதலிய உயர்ந்த குணங்களை அவனுக்கு நினைவுறுத்தும் பொருட்டு.

குறிப்பு : 2

குணங்களைத் தானெனை மயங்கிக் கருதும் ஜீவாத்மா, குணங்களின் காரியங்களாகிய அந்தக்கரணங்கள் ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் முதலியவற்றைத் தானென்றும், உடம்பைத் தானென்றும், உடம்பால் அனுபவிக்கப்படும் பொருள்களைத் தானென்றும், இங்ஙனம் பலவாறெல்லாம் பற்பல தத்துவங்களின் பற்பல கோணங்களிலும் நின்று 'நான்', 'நான்' என்ற அகம்பாவ மயக்கத்திற் பொருந்திநின்று, கர்மசக்கரத்தில் அகப்பட்டு பிறப்பிறப்பில் உழன்று, விடுதலை காணாது மயங்கித் திரியும். அழிவற்ற ஜீவாத்மா முக்குண சம்பந்தத்தால் சிறுமையுற்றிருக்கும் இந்நிலையை 'பந்த நிலை' என்பர்.

# 6

## சத்துவ குணத்தின் இயற்கைத் தன்மைகள்.

**அனக, அவைகளில் சத்வம் நிர்மலமாதலால் பிரகாசிப்பிக்கின்றதாயும், அனாமயமாயும் நின்று கொண்டு, சுகசங்கத்தாலும் ஞானசங்கத்தாலும் பந்தனஞ் செய்கின்றது.**

### பொழிப்பு :

பாவமற்றவனே! அவைகளில் சத்துவகுணம் தன் நிர்மலத் தன்மையால் ஒளிகொண்டது; துன்பமற்றது. இன்பச் சேர்க்கையாலும் ஞானச் சேர்க்கையாலும் பந்தப்படுத்துவது.

### குறிப்பு : 1

பாவமற்றவனே! என்றது அர்ச்சுனன் மனச்சோர்வி னால் தன் அமைதியை இழந்து நின்றானாயினும், பாவ கர்மங்களுடன் எவ்வாற்றானுஞ் சம்பந்தப்படாதவன் என்பதைக் குறித்தது.

### குறிப்பு : 2

முக்குணங்களில் சத்துவகுணம், சடசக்தி மலசக்தி முதலியவற்றால் அத்துணை பாதிக்கப்படாத குண மாதலின், அதனை நிர்மலமான குணமென்றார்.

### குறிப்பு : 3

அறியாமை என்னும் இருளில் கிடந்து அழுந்தும் ஜீவாத்மாவுக்கு கருவி கரணங்கள் மூலமாக நல்லறிவு விளக்கத்தைக் கொடுப்பது இந்தச் சத்துவகுணம். அதனால் ஒளி கொண்டது எனப்பட்டது. தன்னுடைய ஒளியினால் ஜீவாத்மாக்களின் அறிவைத் தூண்டி அதனை மென் மேலும் பிரகாசிப்பித்து உபகாரஞ் செய்து வருவதனால், சத்துவகுணம் விளக்குப்போன்றது.

குறிப்பு: 4

கர்மேந்திரிய, ஞானேந்திரிய அந்தக்கரணங்களால் வரக்கூடிய இன்ப துன்பங்களுள், துன்பத்தைத் தடுத்து இன்பத்தையே இடையருது தரும் உத்தம குணம் சத்துவ குணமாதலின், அது துன்பமற்றது எனப்பட்டது.

குறிப்பு: 5

சுகத்தையே நாடி, சுகத்தைத் தரும் விடயங்களையும் சூழல்களையும் நாடிக்கொண்டு இருக்கும்படி செய்வதால், இந்தச் சத்துவகுணமும் பந்தமாகும். 'நான் இவற்றை யெல்லாம் அறிதல் வேண்டும்' என்னும் ஊக்கத்தைத் தந்து, கல்வியில் மிகுந்த மன எழுச்சியை ஏற்படுத்திக் கொண்டிருப்பதும் இந்தச் சத்துவகுணமே.* அதனுல் இது நூலறிவிலும் ஆராய்ச்சி அறிவிலும் மிகுந்த விருப்பத்தை உண்டுபண்ணி ஜீவாத்மாவின் இயற்கை அன்பு நிலையையும் சாந்த அனுபவ நிலையையும் சுருக்கிக்கொண்டிருப்பது. சத்துவகுணம், குணங்களுள் உத்தமகுணமாயினும், நூலறிவு, ஆராய்ச்சி அறிவு முதலியவற்ருல் ஜீவாத்மா வுக்குப் பந்தத்தை ஏற்படுத்துகிறது.

குறிப்பு: 6

சத்துவகுணத்தின் இயற்கைத் தன்மைகள் பின் வருவன: மலசக்தியைத் தேய்த்தல், துன்ப அனுபவத் தைக் குறைத்தல், மேலான ஆத்மீக போதனைகளைக் கேட் டல், கேட்பித்தல் முதலியவற்றில் இயற்கை ஊக்கத்தை எழுப்புதல் முதலியனவாம்.

## 7

## ரஜோகுணத்தின் இயற்கைத் தன்மைகள்.

**கௌந்தேய, ராகசொரூப ரஜசை திருஷ்ணு சங்கத்துக்குக் காரணம் என்று அறி. அது தேகியை கர்மசங்கத்தால் பந்திக்கின்றது.**

* இராதாகிருஷ்ணன் — பகவத்கீதை: பக். 318. 1930ஆம் ஆண்டுப் பதிப்பு.

பொழிப்பு :

ரஜோகுணம் விருப்ப இயல்புடையது. அவாவின் சேர்க்கையாற் பிறப்பது. குந்தி மகனே ! அது ஆத்மாவைத் தொழிற்சேர்க்கை யால் பந்திக்கிறது.

குறிப்பு : 1

ஆணவமலத்தின் குணங்களாகிய காமம், குரோதம், ராகதுவேஷங்களுடன் தொடர்புற்று, இந்த ரஜோகுணம் வெளியிற் பிரவாகித்து வருவதால், இது விரும்புகின்ற இயல்பினையுடையதென்றார். புலனுகர்ச்சிஅனுபவங்களிற் திளைத்து ஆசைகளில் நன்கு தோய்ந்து நிற்கும் ஒருவ னிடத்து ரஜோகுணம் மேலோங்கி நிற்கும்.

குறிப்பு : 2

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்று சொல்லப்படும் மூவித ஆசைகளில் மனம் பற்றுக் கொள் வதற்கு இந்த ரஜோகுணமே காரணம்.* இந்த மூவித ஆசைகளில் மனத்தை ஏவிச் செயல்களிற் பிரவேசிக்கச் செய்வதால், இந்த ரஜோகுணமானது மன அடக்கத்தைக் குறைத்து, இயம நியமங்களைக் குறைத்து, ஆத்மாவின் இயற்கைக் குணங்களாகிய அன்பு நிலையையும் சாந்த அனுபவத்தையுங் குறைத்துநிற்பது.

குறிப்பு: 3

ரஜோகுணத்தின் இயற்கைத் தன்மைகளாவன : புல னுகர்ச்சி அனுபவங்களில் இந்திரியங்களை ஏவுதல், ஜீவாத்மாவை தொழில்களிற் செலுத்தல், ஜீவாத் மாவை தொழில்களாற் பந்தப்படுத்தல் முதலியன.

---

* இராமநாதர் — பகவத்கீதை: பக்: 392.

# 8

## தமோகுணத்தின் இயற்கைத் தன்மைகள்.

**பாரத, தமஸை அஞ்ஞான சொரூபமாகப் பிறந்ததாகவும், சகல பிராணிகளுக்கு மோகத்தைச் செய்கின்றதாகவும் அறி. அது பிரமாதம், சோம்பல், நித்திரை என்றவைகளால் தேகியைப் பந்திக்கிறது.**

பொழிப்பு :

தமோகுணம் அஞ்ஞானத்திற் பிறப்பதென்றுணர். இதுவே எல்லா ஜீவாத்மாக்களையும் மயங்கச் செய்வது. மறதியாலும் சோம்பலாலும் நித்திரையாலும் இது ஜீவாத்மாவைப் பந்திக்கிறது.

குறிப்பு : 1

தமோகுணம் அறியாமையின் வடிவமே. இது அறியாமை காரணமாக ஜீவாத்மாக்களுக்கு சந்தேக விபரீதங்களையே இடையறாது உண்டுபண்ணிக்கொண்டிருக்கும். அதனால் தமோகுணம் மயங்கச் செய்வது எனக் குறிக்கப்பட்டது.

குறிப்பு : 2

மறதியென்பது, மனத்தில் நிலைத்து நிற்கவேண்டிய நினைவுகள் நிலைகொள்ளாது நழுவிப் போதல். மறதி அவதானக் குறைவினால் ஏற்படுவது.

குறிப்பு : 3

மறதி, சோம்பல், நித்திரை ஆகிய இக்குணங்களால் தமோகுணம் ஜீவாத்மாவின் இயற்கைச் சொரூபமாகிய அன்பு நிலையையும் சாந்த அனுபவத்தையும் கெடுக்கின்றது.

குறிப்பு : 4

தமோகுணத்தின் இயற்கைத் தன்மைகளாவன : அறிவின்மைபுரிதல், மயங்கச் செய்தல், மறதி, சோம்பல், நித்திரை முதலியவற்றை வருவித்தல் என்பன.

## 9

## முக்குணங்களும் பந்தங்களே.

**பாரத, சத்வம் தேகிக்குச் சுகத்தில் சங்கத்தைச் செய்கின்றது. ரஜஸ் கர்மத்தில் சங்கத்தைச் செய்கின்றது. தமஸ் ஞானத்தை மறைத்து பிரமாதத்தில் சங்கத்தைச் செய்கின்றது.**

பொழிப்பு :

சத்துவகுணம் இன்பத்திலே பற்றுதல் விளைக்கிறது. பாரதா! ரஜோகுணம் செய்கையில் பற்றுறுத்துகிறது. தமோகுணம் ஞானத்தைச் சூழ்ந்து ஜீவார்த்மாவை மயக்கத்திற் பிணிக்கிறது.

குறிப்பு : 1

கர்மசக்கரத்தில் அகப்பட்டுக் குணங்களைத் தானெனக் கருதும் நிலையிலிருந்து கழன்று, 'நைஷ்கர்மிய நிலை' பெற்று ஜீவாத்மா விடுதலையுற்று இறைவனைச் சார்ந்து இறைவனின் குணங்களையே பொருந்தியிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தும்பொருட்டு, முக்குணங்களும் பந்தமே என்பதை ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவ்வறிவுரை மூலம் அர்ச்சுனனுக்கு உணர்த்துகிறார்.

குறிப்பு : 2

'தேகசுகமும் புலனுகர்ச்சி அனுபவமும் ஆகிய இவையே நல்லன' ஆதலின், 'இவற்றை நாம் தேடல் வேண்டும். தேடி அனுபவித்தல் வேண்டும்.' என்று ஒருவன் எண்ணும் எண்ணங்களுக்குக் காரணம் சத்துவ

குணமாகும். சிற்றின்ப சுகங்களில் புத்தி அழுந்தி நிற்கு மாயின் ஜீவாத்மா இவற்ருல் பந்தமுற்று, பேரின்ப அனுபவத்தை நாடாது என்பது வெளிப்படை. அதனுல் சத்துவகுணமும் பந்தம் எனக் கூறப்பட்டது.

குறிப்பு: 3

தொழில்களின்மீது கொண்ட விருப்பு வெறுப்புக் களுக்குக் காரணம் ரஜோகுணமாதலின், கர்மயோக அனுஷ்டானம் கைகூடாதவரைக்கும், தொழில்களும் மிகப் பெரிய பந்தங்களாதலின், ரஜோகுணமும் பந்தம் எனக் கூறப்பட்டது. சத்துவகுண மிகுதியுள்ளோர்க்கு ஞானயோக சாதனையும், ரஜோகுண மிகுதியுள்ளோர்க்கு கர்மயோக சாதனையும் விடுதலை தரும் மார்க்கங்களெனப் பெரியோர்களால் விதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: 4

தமோகுண மிகுதியினுல், ஜீவாத்மாக்களிடத்தில் நிகழும் மறதி, சோம்பல், நித்திரை ஆகிய இவை ஜீவாத்மாக்களின் அறிவை மறைத்து நிற்றலில், இவை பெரிய பந்தங்கள் என்பது வெளிப்படை.

## 10

## முக்குணங்கள் தமக்குள் ஒன்ருேடொன்று இணங்குவதில்லை.

பார்த, சத்வகுணம் ரஜஸையும் தமஸையும் அவமதித்துநிற்கிறது. அவ்விதமே தமஸ் சத்வத் தையும் ரஜஸையும் அவமதித்து நிற்கின்றது, ரஜஸ் சத்வத்தையும் தமஸையும் அவமதித்து நிற்கின்றது.

பொழிப்பு:

பாரதா! சத்துவகுணம் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் அவமதித்து நிற்கின்றது.

சத்துவகுணத்தையும் தமோகுணத்தையும் அவமதித்து ரஜோகுணம் நிற்கிறது. அங்ஙனமே சத்துவகுணத்தையும் ரஜோகுணத்தையும் அவமதித்து தமோகுணம் நிற்கின்றது.

குறிப்பு : 1

முக்குணங்கள் ஒன்றேடொன்று இணங்காமலிருப்பது அவற்றின் இயல்பு. கல்வி நூலறிவையும், கடவுள் வணக்க நெறியையும் மேலாகக் கொண்டொழுகும் சத்துவகுண இயல்பினையுடைய ஒருவன், போர்புரிந்து வெற்றியீட்டும் ஒரு போர்வீரனையோ, பொருளீட்டலையே பெருநோக்காகக் கொண்டு வாணிபம் முதலிய தொழில்களை ஆற்றி வரும் ஒருவனையோ, மதிப்பதில்லை என்பதையே இவ்வறிவுரை கூறுகின்றது.

குறிப்பு : 2

அங்ஙனமே மறதியிலும் சோம்பலிலும் நித்திரையிலும் சுகங்கண்ட ஒருவன், கர்மானுஷ்டானங்களைச் செய்து கல்வி கற்றுச் சமய வாழ்வு வாழ்ந்து ஒழுகும் ஒருவனை மதிப்பதில்லை என்பதும் இவ்வறிவுரையில் உணர்த்தப்பட்டது.

குறிப்பு : 3

மாதாவின் கர்ப்பப்பையில் சிசுவாக இருக்கும் பொழுது அமைந்த மனேநிலைகளும், அந்த மனேநிலைகளை விட்டுப் பிரியாத முக்குணங்களின் கலப்பு நிலையுமே, ஒவ்வொரு ஜீவாத்மாவின் சுவகுணத்தை நிர்ணயிக்கிறது. அதனல் ஒவ்வொரு ஜீவாத்மாவுந் தனக்கென அமைந்த சுவகுணத்திலேயே பெருமையைக் காண்கிறது. அதனுலன்றே சுவகுணத்தைப் பற்றி நின்று, சுவகுணத்திற்கு ஏற்ற கர்மாக்களைச் செய்து, ஒவ்வொரு ஜீவாத்மாவும் கர்மசக்கரத்தின் பிடியிலிருந்தும் தன்னை மெல்ல மெல்ல விடுவித்துக்கொள்ள வேண்டியவனுயிருக்கிறுன் என கர்மயோக நெறி கூறுகின்றது.

குறிப்பு : 4

கர்மசக்கரத்தின் பிடியிலிருந்து தன்னைக் கழற்றியதன் பின்னர், ஒவ்வொரு ஜீவாத்மாவுங் குணரகிதன் ஆகின்றதென்றும், ஈஸ்வரனின் கல்யாண குணங்களைப் பெறுகின்றதென்றும், இறைவனின் எண்குணங்களைப் பெற்று மீளா மோட்ச நெறிக்குச் செல்கின்றதென்றும் தத்தம் சமயக் கொள்கைகளுக்கேற்பச் சமயப் பெரியோர் கூறுவதன் உண்மையை இவ்விடத்தில் உணர்ந்துகொள்க.

## 11

## சத்துவகுணத்திற் பிறப்பன எவை ?

**இந்தத் தேகத்தில் எல்லாத் துவாரங்களிலும் ஞானம் என்ற பிரகாசம் எப்பொழுது பிறக்கின்றதோ, அப்பொழுது சத்வம் வளர்ச்சி பெற்றதென்று அறியவேண்டும்.**

பொழிப்பு :

இந்த உடம்பின் எல்லா வாயில்களிலும் ஞானஒளி பிறக்குமாயின், அப்போது சத்துவ குணம் வளர்ச்சிபெற்றதென்று அறியக்கடவாய்.

குறிப்பு : 1

உடம்பின் எல்லா வாயில்களுமெனக் கூறியது, அந்தக்கரணங்கள் நான்கு, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து ஆகிய இவற்றைக் குறிக்கும் பொருட்டு. அந்தக்கரணங்கள் நான்காவன: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. மேலே கூறப்பட்ட தத்துவங்கள் அனைத்தும், ஜீவாத்மா புறப்பொருள்ஞானம் பெறுவதற்கு வாயில்களாக அமைந்திருக்கின்றன. சத்துவகுண இயல்புள்ளவர்கள், மேற்கூறப்பட்ட புறவிந்திரியங்கள் வாயிலாகக் கடவுளுண்மையை உணர்தலும், தேவாரம், திருவாசகம் போன்ற அருள்ஞான நூல்களைப் படித்துப்

பக்தி செய்தலும், ஞான நூல்களைப் பெரியோர் வாயிலாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதலும் ஆகிய தொழில்களைச் செய்து வருபவராதலின், அவர்களது வாயில்கள் அனைத்திலும் ஞான ஒளி தோன்றிக்கொண்டிருக்குமெனக் கூறப்பட்டது.

குறிப்பு : 2

இப்பாடலில் சத்துவகுண இயல்பு பெற்ற பெரியோர்களுட் பெரும்பாலோர், ஞான நிஷ்டைக்குச் செலுத்த வல்ல உயர்ந்த சாதனைகளையே செய்து ஒழுகுபவர் என்பதுங் குறிப்பாக உணர்த்தப்பட்டது.

## 12

## ரஜோகுணத்திற் பிறப்பன எவை?

**பரதரிஷப, ரஜஸ் வளர்ச்சிபெற்றால் விருப்பம், பிரவிருத்தி, கர்மாரம்பம், லோபம் என்றவை பிறக்கின்றன.**

**பொழிப்பு:**

அவா, முயற்சி, கர்மாரம்பம், மனமடங்காமை, விருப்பம் ஆகிய இவை ரஜோகுணம் மிகுதிப்படுவதிலிருந்து தோன்றுகின்றன, பாரதர்காளையே!

குறிப்பு : 1

ரஜோகுணத்தையே சுவகுணமாக உடைய அர்ச்சுனனை விளிக்கும்பொழுது, அவனுடைய வீர இயற்கையைத்தட்டிஎழுப்புபவர்போல பாரதர்காளையே! என விளிக்கின்றார்.

குறிப்பு : 2

கர்மாரம்பம்—சாமானிய கர்மமாகிய தொழிலாரம்பத்தையும் விசேட கர்மமாகிய—யக்ஞாரம்பத்தையுஞ் சேர்த்து கர்மாரம்பமெனக் கூறப்பட்டது.

குறிப்பு : 3

ஒரு பொருளில் அவாக்கொள்ளுதலும், அப்பொருளைப் பெற முயற்சி செய்தலும், முயற்சி நன்கு நிறைவேறு தற்கு விசாரணை செய்து சிந்தித்தலும், அங்ஙனம் முயற் சியாற் பெறப்பட்ட பொருளைப் பிறருக்குக் கொடாமல் தானே அனுபவித்தலும், அவ்வாறு அனுபவித்தாலும் போதுமென்ற மனம் இல்லாமையால் வருத்தமுறுதலும் ஆகிய இவையனைத்தும் ரஜோகுணமிகுதியுள்ள ஜீவாத்மா விடத்திற் காணப்படுவனவாகும்.*

## 13

### தமோகுணத்திற் பிறப்பன எவை ?

**குருநந்தன, தமஸ் வளர்ச்சி பெற்றால் அப் பிரகாசம் அப்பிரவிருத்தி, பிரமாதம், மோகம் என்றவைகள் பிறக்கின்றன.**

பொழிப்பு :

ஒளியின்மை, முயற்சியின்மை, மயக்கம், மறதி ஆகிய இவை தமோகுணம் ஓங்குமிடத்தே பிறப்பன, குருகுலச் செல்வமே !

குறிப்பு : 1

குருகுலத்தாரை மகிழ்விக்கத் தோன்றியவன் அர்ச்சுன னாதலின், அவனைக் குருகுலச் செல்வமே! என விளிக் கின்றார்.

குறிப்பு : 2

தமோகுண வளர்ச்சியாற் தோன்றுவன : புத்தியில் தெளிவுக்குறைவு, கர்மேந்திரியங்கள் தத்தம் தொழில் களைச் செய்வதிற் தாமதித்து நிற்றல், செய்யவேண்டிய கடமைகளை மறத்தல், ஒரு பொருளை வேறு பொருளாகக் காணல், ஒரு நிலையை வேறு நிலையாகக் கருதல் ஆகிய இவை.

---

*இராமநாதர் — பகவத்கீதை: பக். 395.

## 14

## சத்துவகுணம் மறுமையில் எங்கே சேர்த்துவிடுகின்றது?

**தேகத்தைச் சுமக்கின்றவன் சத்வகுண வளர்ச்சி பேற்ற யாதோரு காலத்தில் பிரளயத்தை அடைகிறனே, அப்போழுது உத்தம வித்துக்க ளுடைய அமலலோகங்களை அடைகின்றன்.**

பொழிப்பு :

*சத்துவகுணம் ஓங்கி நிற்கும்பொழுது ஒரு சரீரி இறப்பானுயின், உத்தம ஞானிகளுக்குரிய மாசற்ற உலகங்களை அவன் அடைகின்றன்.*

குறிப்பு : 1

*சரீரத்தை உடையவனை சரீரி என்றும், தேகத்தை உடையவனைத் தேகி என்றும் இந்துசமய ஞான சாஸ்திர நூல்கள் கூறும்.*

குறிப்பு : 2

*மாயாமலம் கர்ம மலங்களிலிருந்து கழன்று, திருவருளை முன்னிட்டு வாழும் உத்தம ஞானிகள் சுகானுபவம் பெற்றுத் திளைக்கும் மேலுலகங்கள் பலவுள. அந்த ஞானி களுக்குரிய உலகுக்குச் சத்துவகுண நிலையில் இறப்பவன் செல்லுகின்றன் என, இவ்வறிவுரை கூறுகின்றது.*

## 15

## தமோகுணம் ரஜோகுணம் ஆகிய இவை மறுமையில் எங்கே சேர்த்துவிடுகின்றன?

**ரஜஸில் பிரளயத்தைப் பேறுபவன் கர்மசங்கம் உள்ளவர்களிற் பிறக்கின்றன். அவ்விதமே தமஸில் பிரளயமடைந்தவன் மூடயோனி களிற் பிறக்கின்றன்.**

பொழிப்பு :

ரஜோகுணத்தில் இறப்பவன் கர்மப் பற்றுடையவர் மத்தியிற் போய்ப் பிறக்கின்றான். அவ்வாறே தமோகுணத்தில் இறப்பவன் மூட கர்ப்பங்களிற் புகுந்து பிறந்து வருகின்றான்.

குறிப்பு : 1

இறக்கும்பொழுது ஜீவாத்மா கொண்டுள்ள குணமே அதன் அடுத்த கதியை நிர்ணயிக்கின்றது என இவ் வறிவுரை கூறுகின்றது. ஜீவாத்மா தான் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப இறைவனுடைய திரோதானசக்தி உடனின்று செலுத்த, சூக்குமதேகத்துடன் சஞ்சாரகதியிற் சென்று, கடைசியில் அந்த ஜீவாத்மா தன் விருப்பத் திற்கும் குணத்திற்கும் இசைந்ததாகிய ஒரு கர்ப்பத்திற் பொருந்தித் தோன்றுமென சைவசித்தாந்த நூல்கள் கூறும். இங்கு திரோதான சக்தி என்றது, ஜீவாத்மா வுடன் உயிர்க்குயிராய் உடனாய் நின்று, அதனை எக்கணமும் விட்டுப்பிரியாது கதிகளிற் செலுத்துந் தெய்வ சக்தியை.

இந்த அறிவுரை ஜீவாத்மா தன்னுடைய குணத்திற் கேற்ற ஒரு கர்ப்பத்தை அடைகின்றது எனக் கூறுகின்றது.

குறிப்பு : 2

ரஜோகுண விருத்தியில் ஒருவன் இறப்பானாயின் அவன் தன் மறுமையில் சாமானிய கர்மம் விசேட கர்மம் முதலியன ஆற்றப்படும் நிலைக்களனாகிய இந்தக் கர்ம பூமியிற் பிறக்கின்றான்.

குறிப்பு : 3

தமோகுண விருத்தியில் ஒருவன் இறப்பானாயின், அவன் தன் மறுமையில் சாமானிய விசேட கர்மங்களை அவமதிக்கின்ற இயற்கையோடு கூடிய தோற்றங்களின் மத்தியிற் போய்ப் பிறக்கின்றான். அன்னவன் அறிவு நிலையில் மிகக் கேடான பிராணிகளாகிய மிருகங்க ளாகவும் விருட்சங்களாகவும் பிறக்கவும் கூடும் என்பதை இவ்வறிவுரை கூறாமற் கூறுகின்றது.*

* இராமநாதர் — பகவத்கீதை: பக். 396.

# 16

## முக்குணங்களால் விளையும் பலன்கள்

**நிர்மலமாகிய சாத்வீகத்தை சுகிருத கர்மத்தின் பலனாகக் கூறுகின்றார்கள். துக்கத்தை ரஜஸின் பலனாகக் கூறுகின்றார்கள். அஞ்ஞானத்தைத் தமஸின் பலனாகக் கூறுகின்றார்கள்.**

### பொழிப்பு :

நற்கருமங்களோடு கூடிய சத்துவகுணத்தின் பலன் நிர்மலத்தன்மை. ரஜோகுணத்தின் பலன் துன்பம். தமோகுணத்தின் பலன் அறிவின்மை.

### குறிப்பு : 1

நற்கருமங்களோடு கூடிய சத்துவகுணம் — ஆருயிர்களிடத்து அன்பு செய்தல், பொறுமையாயிருத்தல், பெரியோர்களைப் பேணுதல் முதலியவற்றோடு கூடிய சத்துவகுணம். மேலே கூறப்பட்ட செயல்கள், வெறுப்பு சினம் முதலிய விரும்பத்தகாத குணங்களின் தொடர்பின்றிச் செய்யப்படுவதால், அவற்றினால் விளையும் பலன்கள் மனத்தூய்மை, சித்தசுத்தி முதலியன. அதனால் சத்துவகுணத்தின்பலன், நிர்மலத்தன்மை எனப்பட்டது.

### குறிப்பு : 2

ரஜோகுணத்திற்கு அடிமைப்பட்டு வாழ்பவன் பல பாவச்செயல்களையுஞ் சில புண்ணியச் செயல்களையுங் கலந்து செய்வான். அதனால் அவனுக்கு வறுமை, வியாதி முதலியவற்றால் துன்பமும், ஓரளவில் சிற்றின்பப் பேறுகளும் வந்து வாய்க்கும். அவன் பெறும் துன்பத்தை நோக்க, இன்பம் மிக மிகச் சிறியது ஆதலின், ரஜோ குணத்தின் பலன் துன்பமெனக் கூறப்பட்டது.

குறிப்பு: 3

தமோகுணத்திற்கு அடிமைப்பட்டு மறதி, சோம்பல், நித்திரை முதலியவற்ருல் தான் செய்யவேண்டிய செயல் களைச் செய்யாதவனுக்கு மேன்மேலும் அறியாமையே வளரும். தமோகுண மிகுதியினுல் வருந்துபவர்கள், ஓரளவிற்காயினும் தமது கடமையை உணர்ந்து முயற்சிகள் செய்து வருவராயின், தமோகுணத்தில் ரஜோ குணம், தமோகுணத்தில் சத்துவகுணம் என்ற குண விசேடங்கள் ஏற்பட்டு இருட்டன்மையிலிருந்து மெல்ல மெல்ல விடுதலை பெற்று ஒளித்தன்மை பெறுதற்கு அருகதையுடையவராகவும் மாறுவர்.

# 17

## முக்குணங்களிலிருந்தும் தோன்றுபவை

**சத்வத்தினின்று ஞானம் பிறக்கின்றது. ரஜஸி னின்று லோபம் பிறக்கின்றது. தமஸினின்று பிரமாதம், மோகம், அஞ்ஞானம் என்றவைகள் பிறக்கின்றன.**

பொழிப்பு:

சத்துவகுணத்திலிருந்து ஞானம் பிறக்கின்றது. ரஜோகுணத்திலிருந்து அவா பிறக்கின்றது. தமோகுணத்திலிருந்து மறதி, மயக்கம், அஞ்ஞானம் என்பன பிறக்கின்றன.

குறிப்பு: 1

ஞானம் என்றது, பிரகிருதி ஜீவாத்மா பரமாத்மா ஆகிய இவற்றைப் பற்றி நன்கு அறியவேண்டுமென்ற ஆன்மவிசாரநிலையையே குறித்தது. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் ஆகிய சாதனைகளில் ஏற்படும் மன எழுச்சியையும், 'ஞானம்' என்ற சொல் இங்கு குறித்தது எனவுங் கூறலாம்.

குறிப்பு : 2

கர்மசக்கரம், குணங்கள் ஆகிய இவற்றின் பிடியிலிருந்து நீங்கியபின்னர், ஒரு ஆத்மஞானிக்கு வந்து பொருந்தும் பரஞானத்தையோ சிவஞானத்தையோ இவ்வறிவுரையில் வரும் 'ஞானம்' என்ற சொல் குறிக்கவில்லை என அறிக.

## 18

## முக்குணங்களினலும் பெறப்படும் உலகங்கள்

**சத்வத்தில் நிற்கின்றவர்கள் உயரப்போகின்ரூர்கள். ரஜோகுணத்தைச் சார்ந்தவர்கள் நடுவில் நிற்கின்ரூர்கள். தாழ்ந்த குணத்தின் விருத்தியில் நிற்கின்ற தமஸைச் சார்ந்தவர்கள் கீழே போகின்ரூர்கள்.**

பொழிப்பு :

சத்துவகுணத்தில் நிற்போர் மேலுலகங்களுக்கு ஏறுகின்ரூர்கள். ரஜோகுணமுடையோர் மத்திய உலகங்களில் நிற்கின்ரூர்கள். தமோகுணமுடையோர் மிகவும் இழிந்த குணங்களும் செயல்களுமுடையராய்க் கீழே செல்கின்ரூர்கள்.

குறிப்பு : 1

சத்துவகுணத்தில் நிற்பவர்களுள் பெரும்பான்மையோர் நிவிர்த்தி மார்க்கத்தையே அனுசரிப்பவர்கள். அவர்கள் இறந்ததன் பின்னர், இந்தப் பூவுலகத்தில் நற்குணம், நற்செய்கை, நற்சிந்தனை ஆகிய இவற்றுடன் கூடிய உயர்ந்த வாழ்வைப் பெறுகின்றனர். மேலுலகங்களாகிய தபலோகம், சத்தியலோகம் ஆகிய இவற்றை அடைந்து உயர்ந்த தபச்செயல்களி லீடுபடுந் தபோதனராகவுஞ், சத்தியந் தவருத நெறியில் ஒழுகுஞ் சத்தியசீலராகவுந் திகழுகின்றனர் எனவுங் கொள்ளலாம். நிவிர்த்தி மார்க்கம் — முழுவதும் அகநோக்கம் வாய்க்கப்பெற்றுத் தன்னையுந் தன்னிறைவனையுந் தன் அகத்திலே கண்டு வாழுதற்கு முயலும் பெருநெறி.

குறிப்பு : 2

இவ்வாறே ரஜோர்குணமுடையோரிற் பலர் பிரவிருத்தி மார்க்கத்தை அனுசரிப்பவர்கள். அவர்கள் இறந்ததன் பின்னர், இப்பூவுலகத்திற் பிறந்து மீண்டும் கர்மங்களையே செய்து ஒழுகுகின்ற ஒரு துன்பம் நிறைந்த வாழ்வையே பெறுகின்றனர். புறவிடயங்களிலும் புறநோக்கிலும் அழுத்தம் பெற்ற இயல்பினராதலின், இவர்கள் ஓரிடத்தி லிருப்பதென்பதின்றி அங்கும் இங்கும் அலைந்து திரியும் சஞ்சாரிகளாகவே தமது பூவுலக வாழ்வை வாழ வேண்டியவராகின்றனர். பிரவிருத்திமார்க்கம் அக நோக்கப் பேறு சிறிதுமின்றி, முழுவதும் புறநோக்குப் பெற்று, உலக சேவை, சமூக சேவை முதலியவற்றிலேயே தமது ஆத்மசாந்தியைப்பெற முயல்பவர்களின் மார்க்கம்.

குறிப்பு : 3

தமோகுணமுடையோர், இறந்ததன் பின்னர் பகுத் தறிவுதானும் வாய்க்கப்பெருத மிருகங்களாகவும் பறவை யினங்களாகவும் மரங்களாகவும் பிறவிகளை யெடுக்கின் றனர்.

## 19

## ஜீவாத்மா குணங்களிலிருந்து நீங்கி நிற்றல்

**எப்பொழுது திரஷ்டா குணங்களைத் தவிர வேறு பொருளைக் கர்த்தாவாக அறிகின்றானில்லையோ, குணங்களிலுந் தன்னை வேருக அறிகின்ருனோ, அவன் மத்பாவத்தைப் பெறுகின்ருன்.**

பொழிப்பு :

எப்பொழுது ஜீவாத்மா குணங்களைத் தவிர வேறுகர்த்தா இல்லை என்பதையும், குணங்களுக்கு வேருகத்தான் விலகிநிற்றலையும் காண்கின்ருனே, அப்பொழுது அந்த ஜீவாத்மா என் இயல்பைப் பெறுகின்ருன்.

குறிப்பு : 1

இவ்வறிவுரையில் குணங்கள், ஜீவாத்மா, பரமாத்மா ஆகிய மூன்று பொருள்களும் மிகத் தெளிவாக விளக்கப்படுகின்றன.

குறிப்பு : 2

ஜீவாத்மா முதலில் தன்னறிவிற் காண்பது யாதெனில், குணங்களே கர்மேந்திரியங்களை ஏவிக் கர்மங்களைச் செய்விக்கின்றமையால், குணங்களே கர்மகர்த்தாக்கள் என்ற உண்மையை. தொடர்ந்து அந்த ஜீவாத்மா அறிவது யாதெனில், மேலே கூறப்பட்ட குணங்கள் அனைத்தும் ஜீவாத்மாவாகிய தனக்கு மிக அந்நியமானவை என்பதை.

குறிப்பு : 3

மேலே கூறப்பட்ட இரண்டு உண்மைகளையும் தன் அறிவிற் கண்டு குணங்களிலிருந்து விலகி நிற்கவே, ஜீவாத்மா பரமாத்மாவின் அருளைப் பெற்றுப் பரமாத்மாவின் குணங்கள் தன்னிடத்தில் விளங்கித் தோன்றும் அற்புதத்தைக் காண்பன். ஸ்ரீ கிருஷ்ணபகவான் 'என் இயல்பைப் பெறுகின்றான்', என இப்பாடலிற் கூறியது, ஜீவாத்மா ஞானமுதிர்ச்சிபெற்றுக் கடைசியில் பரமாத்மாவின் குணங்களைப் பெறுகின்றான் என்ற இந்த உண்மையை உணர்த்தும் பொருட்டே.

குறிப்பு : 4

இவ்வத்தியாயத்தில் 5ஆம் அறிவுரை தொடக்கம் 18ஆம் அறிவுரை வரைக்கும் முக்குணங்கள், முக்குணங்களால் நிகழும் கர்மங்கள், கர்மங்களால் விளையும் பயன்கள், பயன்களால் ஜீவாத்மாவிற் பொருந்தும் பந்தங்கள் முதலியன கூறப்பட்டன. உலகிலுள்ள பொருள்களையும், தனது உடம்பையும் முக்குண ரூபமாகக் காணும் ஜீவாத்மா, தன்னை முக்குணங்களிலிருந்தும் பிரித்து அன்னியமாகக் கண்டு அவற்றிலிருந்தும் கழன்று நிற்கும். அவ்வாறு கழன்று நிற்கையில் ஜீவாத்மா தான் தனித்து நிற்கமாட்டாமையினால் பரமாத்மாவைச்

சார்ந்து அதனுடன் ஒன்றுபட்டு நிற்கும்.* அவ்வாறு ஒன்றுபட்டு நிற்கும்பொழுதே முக்குண சுத்தியும் முக்குண தரிசன யோகமும் ஜீவாத்மாவுக்குக் கைகூடுகின்றன.

கர்மயோக அத்தியாயத்திலும் இவ்வத்தியாயத்திலும் முக்குணங்கள் விளக்கப்பட்டனவெனினும், கர்மயோக அத்தியாயத்தில் கர்மசக்கர ரூபத்தைக் காண்பதும் அதனைத் தன்னறிவிற் தர்சனம் செய்வதும், கடைசியில் ஜீவாத்மாவாகிய தான் அதனிலிருந்தும் விலகிநின்று பரமாத்மாவுடன் ஐக்கியம் பெறுவதுமே கர்மயோக நெறியின் பலன் என விளக்கப்பட்டது. முக்குண ரூபத்தைப் புறவுலகிற் காண்பதும், அதனைத் தன்னறிவில் தரிசனஞ் செய்வதும் கடைசியில் முக்குணங்களிலிருந்துங் கழன்று நீங்கிப் பக்தியோகஞ் செய்து ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியம் பெறுவதும் ஆகிய இவையே இவ்வத்தியாயத்திற் கூறப்படுகின்றன. இந்த இரண்டு சாதனை முறைகளும் இக்காலச் சூழ்நிலையில் வாழவந்த எமக்கெல்லாம், உலக வாழ்வை நல்ல இன்பவாழ்வாக அமைத்தற்கு வேண்டிய மனோபாவ நிலைகளையும் மனத்திட்ப நிலைகளையுந் தரவல்லன என்பதை மாத்திரம் இவ்விடத்திற் குறிக்க விரும்புகின்றோம்.

## 20

## முக்குணங்களையும் கடந்தவன் அமிர்தநிலை பெறுகின்றான்.

**தேகி, தேகத்துக்குக் காரணங்களான இந்த மூன்று குணங்களைக் கடந்து, ஜன்மம் நரை மரணம் என்றவைகளால் ஏற்பட்ட துக்கங்களால் விடப்பட்டு அமிருதத்தைப் பெறுகின்றான்.**

பொழிப்பு :

உடம்பிலே பிறக்கும் இந்த மூன்று குணங்களையுங் கடந்து பிறப்பு, இறப்பு, மூப்பு, துக்கம் என்பனவற்றிலிருந்தும் விடுபட்டோன், அமிர்த நிலையடைகின்றான்.

---

* சிவஞானபோதம் : 8 ஆம் சூத்திரம் — 4 ஆம் அதிகரணம்.

குறிப்பு : 1

குணங்களைக் கடந்தவன், 'தேகம் வேறு நான் வேறு' எனத் தன்னறிவிற் தெளிந்தவன்.

குறிப்பு : 2

அங்ஙனம் தெளிந்தவன், தேகம் நான் என்ற புத்தியிலிருந்து நீங்கியவன் ஆதலின், நான் பிறந்திருக்கின்றேன் என்றும் நான் இறந்துவிடுவேன் என்றும் நான் மூப்பு அடைந்திருக்கின்றேன் என்றும் இங்ஙனம் எழுகின்றனவாகிய நினைவுகளால் ஏற்படும் துக்கங்களிலிருந்து நீங்கியவனாவான்.

குறிப்பு : 3

அமிர்த நிலை – இறவாத இன்ப அன்பு நிலை. அன்பும் இன்பமும் ஒன்றையொன்று விட்டுப் பிரியாதன. ஜீவாத்மாவின் இயற்கைச் சொரூபமாகிய அன்பும், பரமாத்மாவின் இயற்கைச் சொரூபமாகிய இன்பமும் என்றும் ஒன்றையொன்று விட்டுப் பிரியாத நிலையிலேயே உள்ளன. ஜீவாத்மா பந்தங்களிலிருந்து நீங்கிப் பரமாத்மாவுடன் வேறறக் கலந்து ஐக்கியமுறும்பொழுது வாய்க்கும் பேராவியற்கைப் பெருநிலையே, அமிர்தநிலையெனவும் இறவாத இன்ப அன்புநிலை எனவுங் கூறப்படும்.

## 21

## முக்குணங்களையுங் கடந்த ஞானி எங்ஙனம் ஒழுகுவான்?

அர்ச்சுனன்:

பிரபு! இந்த திரிகுணாதீதன் எந்த இலட்சணங்களினால் அறியப்படுகின்றான்? அவன் என்ன ஆசாரம் பெற்றவன்? இந்த மூன்று குணங்களையும் எவ்விதங் கடக்கின்றான்?

பொழிப்பு :

எம் இறைவனே! மூன்று குணங்களையுங் கடந்தோன் என்ன அடையாளங்கள் உடையவன்? அவன் எங்ஙனம் ஒழுகுவான்? இந்த மூன்று குணங்களையும் அவன் எங்ஙனங் கடக்கின்றான்?

குறிப்பு : 1

'ஸ்ரீகிருஷ்ணபகவானே, என்னுடைய மயக்கங்களை யெல்லாம் ஒருங்கே நீக்கவல்ல இறைவனுக்கு வேறல்லாத என்பெருந்தலைவன்' என்று அர்ச்சுனன் தன்னறிவில் நன்கு தெளிந்துகொண்டமையால், தன் முன்னிலையில் நிற்கும் பகவானை இறைவனே! என அழைத்தான்.

குறிப்பு : 2

முக்குணங்களையுங் கடந்தவன் என்றது, முக்குணங்களுக்கும் அடிமைப்படாத ஞானியைக் குறித்தது.

குறிப்பு: 3

''ஞானியின் தோற்றம் எப்படியிருக்கும்? அவன் மனோபாவங்கள் எப்படியிருக்கும்? அவன் இன்ப துன்ப நிலைகள் எப்படியிருக்கும்?'' என்ற இன்னோரன்ன வினாக்களை வினவ விரும்பிய அர்ச்சுனன், ஞானி என்ன அடையாளங்களை யுடையவன் எனப் பொதுவினாவொன்றை எழுப்புகின்றான்.

குறிப்பு: 4

ஞானி தனது நண்பர் பகைவருடனும், உறவினர் உறவினரல்லாதாருடனும், மனிதர் விலங்குகளுடனும், எவ்வாறு தன்னை நடாத்திக்கொள்ளுவான் என்ற வினாக்களுக்கு, விடைகள் பெற விரும்பியே, ஞானி எங்ஙனம் ஒழுகுவான் என்ற வினா எழுப்பப்பட்டது.

குறிப்பு : 5

முக்குணங்களையும் கடத்தற்கு அந்த ஞானி பெற்ற சாமர்த்தியம் யாது? என்பதே கடைசியில் எழுப்பப்பட்ட 'ஞானி எங்ஙனம் அவற்றைக் கடக்கின்றான்?' என்ற கேள்வியின் கருத்தாகும்.

குறிப்பு : 6

அடுத்துவரும் 5 அறிவுரைகளிலும், முக்குணங்களி லிருந்தும் விடுபட்ட ஜீவன்முக்தர்களாகிய ஞானிகளின் தன்மைகளும், அவர்கள் சாமர்த்தியமுஞ் சுருக்கமாய்த் தரப்படுகின்றன.

## 22

## ஞானிகளிடத்து விருப்பு வெறுப்பு இல்லை.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறுகின்றார் :

**பாண்டவ, வந்தவைகளாகிய பிரகாசம், பிர விருத்தி, மோகம் என்பவைகளையும் வெறுக்க மாட்டான். போனவைகளை விரும்பான்.**

பொழிப்பு :

ஒளி, தொழில், மயக்கம் இவை தோன்றும் போது ஞானி இவற்றைப் பகைத்திடான். இவை நீங்கியபோது இவற்றை விரும்பமாட்டான்.

குறிப்பு : 1

முக்குணங்கள் வசப்படாதவனாயினும், ஞானியின் தேகத்தில் நின்று முக்குணங்களுந் தொழிற்படுகின்றன. அவ்வாறு அவை தொழிற்படுவனவாயினும், அவன் தன் உள்ளத்தில் விருப்பு வெறுப்புக்களைக் கொள்ளமாட்டான்.

குறிப்பு : 2

அவன் சத்துவ குணமுடைய சான்றோர்கள், ரஜோ குணமுடைய வீரர்கள், தமோகுணமுடைய சோம்பர்கள் ஆகிய இவர்கள் வேறு வேறு இயற்கையினராயினும், இவர்கள் அனைவரையும் வெறுப்பின்றிச் சமமாகக் காண்பன்.

குறிப்பு : 3

அவன் இறந்துபோன உற்றார் உறவினரைப் பற்றியோ, அல்லது இழந்துபோன பொருள்களைப் பற்றியோ நினைந்து நினைந்து துன்பப்படமாட்டான்.

## 23

## ஞானி அலட்சியம் செய்பவன்போலவு மிருப்பான்; இலட்சியம் கொண்டவன்போலவு மிருப்பான்.

**உதாசீனன்போலிருந்துகொண்டு குணங்களால் அசைக்கப்படான். குணங்கள் குணங்களில் இருக்கின்றன என்றெண்ணி அசைவற்று நிற்பான்.**

பொழிப்பு :

*புறக்கணித்தான்போல இருப்பான். குணங்களாற் சலிப்படையாமல், குணங்கள் சுழலுகின்றன என்று எண்ணி அசைவற்று இருப்பான்.*

குறிப்பு : 1

ஞானியின் மனப்போக்கு செயற்போக்கு முதலியன மிக விசித்திர இயல்புடையனவாயிருக்கும் எனக் கூறப்படுகிறது.

குறிப்பு : 2

குணங்கள் சுழலுகின்றன என்றது, குணங்களிலேயே குண கர்மங்களும் குண காரியங்களுந் தொடர்புபட்டு, ஒன்றிலிருந்து மற்றது விட்டுப்பிரியமுடியா நிலையில் நின்று சுழற்சி கொள்கின்றன என உணர்த்தும்பொருட்டு.

குறிப்பு : 3

குணங்கள் சுழலுகின்றன என எண்ணிக் குணங்களால் தாக்கப்படாதவனய், ஞானி சாட்சி ரூபமாய் இருப்பான் என இவ்வறிவுரையிற் கூறப்பட்டது.

# 24

## ஞானி பொன்னையும் ஓட்டையும் நிகராகவே காண்பன்.

**சுக துக்கத்தைச் சமனாகக் காண்பான். தன் னிலையில் நிற்பான். ஓட்டையும், கல்லையும், தங்கத்தையும் சமமாய்க் காண்பான். பிரிய அப்பிரியங்களை துல்யங்களாகக் கொள்வான். தன்னைப்பற்றிய பழிப்பையும் புகழையும் துல்யங்களாகக் கொள்வான்.**

பொழிப்பு :

துன்பத்தையும் இன்பத்தையும் நிகராகக் கொண்டோன். தன்னிலையில் நிற்பான். ஓட்டையும் கல்லையும் பொன்னையும் சமமாகக் காண்பான். இனியவரிடத்தும் இன்னாதாரிடத்தும் சமானமாக நடக்கும் தீரன். இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் நிகராகக் கணிப்பான்.

குறிப்பு : 1

ஞானி கர்மசக்கரத்திலே அகப்படாது குணங்களிலிருந்து நீங்கி நிற்பவனாதலின், அனைத்தையும் சமமாக நோக்கும் பெரும்பேறு பெற்றவன். பெரியபுராணம் ஞானிகளைப்பற்றிக் கூறும்பொழுது,

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.''*

எனக் கூறும்.

---

* பெரியபுராணம்: திருக்கூட்டச் சிறப்பு — 8ஆம் பாடல்.

குறிப்பு: 2

*தன்னிலையில் நிற்பான் எனக் கூறியது தனக்கு ஆதார மாகிய பரமாத்மாவுடன் ஒன்றுபட்டு வேறின்றி நிற்பான் என உணர்த்தும்பொருட்டு.*

குறிப்பு: 3

*தீரன்—புத்திமான். தன் புத்தி முழுவதையும் ஆத்மா வில் நிறுத்தியவனே, சிறந்த புத்திமான் என்றும் தீர னென்றும் ஞானநூல்களாற் புகழப்படுபவன்.*

## 25

## ஞானி எல்லாச் சங்கற்ப விகற்பங்களையுங் கடந்தவன்.

**மான அபமானங்களில் துல்யன். மித்திர சத்துரு பட்சங்களில் துல்யன். சர்வாரம்பங்களையும் ஈஸ்வரனுக்குப் பரித்தியாகம் செய்பவன். அவன் குணதீதன் என்று கூறப்படுகின்றான்.**

பொழிப்பு:

*மானத்தையும் அவமானத்தையும் நிகராகக் கருதுவான். நண்பரிடத்தும் பகைவரிடத்தும் நடுநிலைமை பூண்டான். எல்லாவிதத் தொழில் ஆரம்பங்களையுந் துறந்தான். அவனே குணங் களைக் கடந்தவன் என்று சொல்லப்படுகின்றான்.*

குறிப்பு: 1

*அவன் சங்கற்பசித்தி யுடையனாயினும் தானாகச் சங்கற் பிப்பவ னல்லன். அவன் ஆரம்பிக்குந் தொழில்கள் ஒன்றாய் இரண்டாய் மூன்றாய் விரிவுபெற்று மலர்ந்து சிறப்புடன் பொங்குவனவாயினும், அவன் தொழில்களை ஆரம்பிப்பவனல்லன்.*

## 26

## பக்தியோகத்தால் இறைவனை வழிபடுபவன் குணங்களைக் கடந்தவன்.

எவன் என்னை வியபிசாரமற்ற பக்தியோகத்தால்
சேவிக்கின்றானோ, அவன் இந்தக் குணங்களைக்
கடந்து பிரம்ம பூயத்திற்குச் சமர்த்தனாகின்றான்.

பொழிப்பு :

வியபிசார நிலையில்லாத பக்தியோகத்தால் என்னை வழிபடுவோன், குணங்களைக் கடந்து பெரிய பிரம்ம நிர்வாணத்தன்மை பெறத் தகுதியுடையோன்.

குறிப்பு : 1

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இறைவனுக்கு வேறல்லாத பெரிய கைவல்ய நிலைபெற்ற ஜீவன்முக்தராகும். அவரை வழிபடுதல் இறைவனை வழிபடுதற்கு ஒக்கும். அதனாற்றான் 'என்னை வழிபடுவோன் குணங்களைக் கடக்கின்றான்' என ஸ்ரீகிருஷ்ணபகவான் கூறினார். கர்மயோக அத்தியாயத்தில் சுவகுணங்களுக்கேற்ற கர்மாக்களைச் செய்வதனாற்றான் கர்மசக்கரத்தின் பிடியிலிருந்து நீங்கிக்கொள்ளலாமெனக் கூறியதுபோல, இந்த அத்தியாயத்தில் இறைவனிடத்திற் கொண்டும் கொடுத்தும் உறவாடி, மனமுருகி, பக்தி வழிபாடுகள் இயற்றுவதனாற்றான், குணங்களின் பிடியிலிருந்தும் நீங்கிக்கொள்ளலாம் என்பது கூறப்படுகிறது.

எனவே, இவ்வறிவுரையிற் குணங்களைக் கடத்தற்குரிய சாமர்த்தியத்தை ஞானி பக்தியோகசாதனை வாயிலாகவே பெறுகின்றான் என உணர்த்தப்பட்டது.

குறிப்பு: 2

*சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுவதுபோல, 'மற்றுப் பற்று' இன்றி, மிகுந்த கற்புத்தன்மையோடு இறைவனிடத்துச் செலுத்தப்படும் மன எழுச்சி வெள்ளமே, அன்பு என்றும் பக்தி என்றும் கூறப்படும்.

குறிப்பு: 3

'வியபிசாரமில்லாத பக்தி யோகத்தால்' என்ற தொடரில் வரும் பக்தி என்ற சொல், கண்ணப்ப நாயனூரிடத்தெழுந்த அன்பு வெள்ளம் போன்ற மிகவுந் தூய்மையான பக்தியைக் குறித்தது.

## 27

## பிரமத்துக்கு வேறில்லாத என்னிடத்தில் தோன்றுவன.

**அமிருதமும் அவ்யயமும் ஆகிய பிரம்மத்துக்கும், சாஸ்வதமான தர்மத்துக்கும், ஐகாந்திக சுகத்துக்கும் நானே பிரதிஷ்டாஸ்தானம்.**

பொழிப்பு:

சாவும் கேடும் அற்ற பிரகிருதிக்கு நானே நிலைக்களன். என்றும் நிலைபெற்று நிற்கும் பெருமை வாய்ந்த அறங்களுக்கும், தனிமையின்பத்திற்கும் நானே இருப்பிடம்.

குறிப்பு: 1

ஸ்ரீ கிருஷ்ணபகவான் 'அஹம் பிரம்மோஸ்மி' என்ற பாவனையில் முதிர்ந்த அனுபவம் பெற்றவராதலின் பிரமத்திற்கு வேறில்லாத தனது நிலையைக் குறிக்கவே

* சுந்தரமூர்த்தி சுவாமிகள் — நமச்சிவாயப்பதிகம்: 1ஆம் திருப்பாட்டு.

என்னிடத்திலேயே அனைத்துந் தோன்றுகின்றன எனக் கூறினார்‡.

குறிப்பு : 2

இறைவனிடத்தில் ஒடுங்கிப் பின்னர் தோன்றி விரிவடைவன :

(அ) பிரளயகாலத்தில் ஒடுங்கிப் பின்னர் விரியும் இயல்பினதாய் எக்காலத்திலும் நிலைபெறுவதாய் உள்ள பிரகிருதி. இது சாவும் கேடும் அற்ற பிரகிருதி எனக் கூறப்பட்டது. (ஆ) பிரகிருதியின் முக்குணங்களாகிய சத்வம், ரஜஸ், தமஸ் என்பனவற்றின் பிடியிலிருந்து உயிர்கள் தம்மை மெல்ல மெல்லக் கழற்றிக் கொள்வதற்கு இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட தர்ம அதர்மங்கள். இவை 'என்றும் நிலைபெற்று நிற்கும் அறங்கள்' எனக் கூறப்பட்டன. (இ) ஏகாக்கிர சித்தத்தில் உதயமாகி அனைத்தையும் விழுங்கிப் பிரவாகிக்கும் பேரின்பம். இது தனிமையின்பம் எனக் கூறப்பட்டது.

குறிப்பு : 3

இவ்வறிவுரையின் சாரம், பிரகிருதி ஜீவாத்மா ஆகிய இவை, பிரளயகாலத்தில் இறைவனிடத்து ஒடுங்கிப், படைப்புக் காலத்தில் ஒடுங்கியாகிய அந்த இறைவனிடத்திலிருந்தே தோன்றுகின்றன என்பது.

---

**கர்மயோகம், முக்குணப்பாகுபாடு ஆகிய இவைபற்றி ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளிய மந்திரங்களை விளக்கும் அறிவுரைகள், பொழிப்பு, குறிப்புரைகள் ஆகிய இவை முற்றுப்பெற்றன.**

சுபம் !

‡ சிவஞானபோதம் : 'யானே உலகு என்பன் இன்று' — 2ஆம் சூத். — 1ஆம் அதிகரணம்.

# அநுபந்தம்

## 1

### கர்மயோகமும் — சாங்கிய தரிசனமும் :

உலகிலுள்ள மிகப் புராதனமான சமய நெறியைக் கர்மயோக நெறியெனக் கூறலாம். ஓரளவு கட்டுப்பாட்டுடன் மனிதன் தனக்குரிய கடமைகளைச் செய்து ஒழுகும் பொழுது அவன் கர்மயோகத்தையே அனுசரிக்கின்றான். அவ்வகையில் உலகிலுள்ள எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா மக்கள் மத்தியிலும் இந்தக் கர்மயோகநெறி ஒவ்வோரளவில் நிலவி வந்திருக்கின்றது.

இந்தியா தேசத்தில் மிகப் பழைய காலத்தில் ஒரு தத்துவஞானிகள் கூட்டம் இருந்தது. அதனைச் சாங்கியர் கூட்டமென அழைத்தனர். அந்தக் கூட்டத்தினர் இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சியில் தலைசிறந்திருந்தனர். இயற்கை முக்கூறுகளாக நின்று இயங்குகின்றது எனக் கண்டனர். முக்கூறுகளாவன: சத்துவகுணம், ரஜோ குணம், தமோகுணம் என்பன. மனிதனுட்பட ஒவ்வொரு பிராணியும் இந்த முக்குணக் கலப்பினாலேயே விளங்கித் தோன்றுகின்ற தென்றும் அவ்வாறு தோன்றினாலும் ஒவ்வொரு பிராணியிலும் ஒரு குணமே மேலோங்கி நிற்கு மென்றும், அவர்கள் தம் ஆராய்ச்சிகள் மூலம் கண்டனர். இதனைத் தெளிவுக்காட்சியாகக் கண்டதன் பின்னர், ஒவ்வொரு மனிதனும் தன் குணத்திற்கேற்பக் கர்மங்களைச் செய்து வாழ்வதனாற்றான், தன்னாலாய முழுப்பயனையும் உலகுக்கு உதவக்கூடியவனாகின்றான், எனக் கூறினர். சாங்கியர் செய்த ஆராய்ச்சியும், அவர்கள் செய்த முடிபுமே இந்திய நாட்டிற் பண்டுதொட்டு நிலவிவரும் கர்மயோக நெறியின் அடிப்படைக் கொள்கையாகும்.

# 2

## ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குச் செய்த உபதேசம்:

யுத்தகளத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் அணிவகுத்து நிற்ப, இரு சேனைகளுக்கும் மத்தியில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தேர்ச் சாரதியாயிருந்து தேரைச் செலுத்த, தேரின்மீது அர்ச்சுனன் செல்லுகின்றான்; அணிவகுத்து நிற்கும் சேனைகளைப் பார்க்கின்றான். பார்த்தவுடன் 'அனைவரும் நம்மவராயிற்றே' என நினைத்து அர்ச்சுனன் கை கால் முதலிய அவயவங்கள் சோர, மனம் தளர்ந்து நிற்கையில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த உபதேச மொழிகளே கர்மயோக நெறியின் பொது நிலை, சிறப்பு நிலைகளை மிகத் தெளிவாக விளக்குவன. ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருச்சுனனுக்கு உபதேசித்த மந்திரங்களின் சாரத்தையே கீழே தருகின்றோம்.

''அர்ச்சுனா! உலகிலே பற்பல போலித் துறவிகளும் போலி யோகிகளும் இருக்கின்றார்கள். மனத்தில் எழுகின்ற ஆசைகள் கைகூடாமையால் இந்தப் போலித்தனமான யோகமும் துறவும் உலகிலே மலிந்து விளங்குகின்றன. தம்முடைய மனத்தில் புலனுகர்ச்சிக்குரிய விடயங்களையுஞ் சுகங்களையுஞ் சதா சிந்தித்துக்கொண்டு கண் மூடிக்கொண்டு தியானஞ் செய்பவர்போல் நடிப்பவர்கள் இந்த உலகில் எத்தனையோ பேர் உளர். அவ்வாறு நடித்து வாழ்பவர்களுள் நீயும் ஒருவனாக இருத்தல் கூடாது என, உன் மீது நான் கொண்ட இரக்கத்தினாற்றான், இவ்வுபதேச மொழிகளை இப்பொழுது உனக்கு யான் கூறுகின்றேன்.

''கௌரவரும் பாண்டவரும் உன்னுடைய பந்துக்கள்—உன்னைச் சேர்ந்தவர்கள்—என்ற காரணத்தினால்—என்ற ஆசையினால், தர்மத்தை மறந்தவனாக நிற்கின்றாய். கை கால் சோர்ந்து மனந் தளர்ந்து, உன் இயற்கைக் குணத்தை —உன் அந்தரங்க சுபாவத்தை— நீ பட்டினி போடுகின்றாய். உன் கைகால் எங்கணும் இயற்கையாகவே விறுவிறுத்து நிற்கும் உன் இயற்கைச் சக்தியைப் பாராமுகஞ் செய்

கின்ருய். உன் தேகமெங்கும் பரந்து பெருகித் துடிக்கும் இயற்கைக் குண சத்திகளை யெல்லாம் ஒரு மூலையில் நசுக்கி ஒதுக்கிவிட்டு, நீ யாது பெறப்போகின்ருய். 'இவர் நமர், இவர் பிறர்' என்று இவ்வாறு, ஆசைச் சுழலில் அகப் பட்ட பேதையரே பேசிக்கொண்டு திரிவர். அறிஞர் எப் பொழுதும் இயற்கையையே, இயற்கைச் சுபாவத்தையே, இயற்கைக் குணத்தையே பேணி ஒழுகுவார்கள். நீயும் ஒரு அறிஞன். நீ உன் இயற்கையை உன் சுவகுணத்தை அறிதல் வேண்டும். சுவகுணத்தை அறிதல் மிக மிகக் கடினம். ஆனுல் உனக்கு ஒன்றுங் கடினமன்று.

"அர்ச்சுன! சுவகுணமென ஒன்று ஒவ்வொரு மனி தனுக்கும் அவன் தன் தாயாரின் கர்ப்பத்திலிருக்கும் பொழுதே உண்டாகிவிடுகின்றது. தாயாரின் கர்ப்பத்தில் சிசுவாயிருக்கும்பொழுது நிலவும் மனோநிலைகளே அந்தச் சுவகுணத்தை நிர்ணயித்து விடுகின்றன. அந்த சுவகுணம் சாங்கியர் கொள்கையின்படி சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவற்றினுலாய ஒரு கலப்புக் குண மென வைத்துக்கொள். ஆயினும் அச் சுவகுணத்தில் முக்குணங்களுள் ஒன்றே மேலோங்கி நிற்கும். அந்தச் சுவகுணத்திற்கு ஏற்பவே, இந்த உடம்பும் உடம்பிலுள்ள கருவி கரணங்களும் அமைந்திருக்கின்றன. இந்த உடம் புக்கும், உடம்பின் கருவி கரணங்களுக்கும் ஏற்ற கர்மங்க ளாகிய தொழில்கள் இந்தப் பரந்த உலகில் நிறைய இருக் கின்றன. அந்தக் கர்மங்களைச் சுவகுணத்திற்கேற்ற சுவகர் மங்களெனக் கூறுவர். இந்தச் சுவகர்மங்களையே உடம்பி லுள்ள கருவி கரணங்கள், தமக்கு இனிய உணவாகக் கருதுகின்றன. அந்தக் கருவி கரணங்களும் சுவகுணத்தி லிருந்து எழுந்தனவே. அதாவது சுவகுணத்தின் காரியங் களே. இப்படியாகச் சுவகுணம், கருவி கரணங்கள், சுவகர்மங்கள் ஆகிய மூன்றும் ஒரு பெரிய கர்மசக்கரத் தின் மூன்று கோணங்களில் நிறுத்தப்பட்ட மூன்று பெரிய அந்தங்களாய் ஒன்றுக்கொன்று, ஆதாரமாய் நின்று சுழலுகின்றன. ஒன்றையொன்று விட்டுப் பிரிந்து நழுவிப் போகாவண்ணம், காரண காரியத் தொடர்பு என்ற

கயிற்றினுல் இந்த மூன்றும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் குணசக்தியின் அடிப்படையில் கர்ம சச்கரம் தாஞகச் சுழன்றுகொண்டு வருகின்றது. அர்ச்சுஞ! இனி உன் சொந்தச் செய்தியைப் பார். உனது சுவ குணமோ ரஜோகுணம். ரஜோகுணத்தின் மகத்துவமான சக்திகள் உன் உடம்பெங்கணும் நிறைந்து உன் அங்கங்கள் வாயிலாகப் பொங்கித் ததும்பியவண்ணம் இருக்கின்றன. உன் சுவகுணத்திற்கேற்ற, உன் உடம்பிலுள்ள சக்திகளின் விறுவிறுப்புக்கேற்ற, சுவகர்மமாகிய போர் உன் முன்னிலையில் வந்து நிற்கின்றது. கர்மசக்கரம் எத்துணை அழகாகச் சுழலுகின்றது பார். 'இவர் நமர், இவர் பிறர்' என்ற எண்ணத்தை இடையிலே செலுத்தி அதன் சுழற்சியைத் தடைசெய்கின்ருய்; இது முறையாகுமா?

''அர்ச்சுஞ! உனக்கு விருப்பு வெறுப்பு வேண்டாம். உனக்கு ஆசை வேண்டாம். 'நமர், பிறர்' என்ற பாகுபாடு வேண்டாம். உன் சுவகுணத்தினின்று உன் சுவ கர்மமாகிய போரினைச் செய். உனது உடம்பும் கருவி கரணங்களும் அப்போதுதான் திருப்திப்பட்டு வளர்ச்சியடையும். அர்ச்சுஞ! உன்னைப் புலன் நுகர்ச்சி நிறைந்த வாழ்வில் யான் செலுத்த முயல்கின்றேன் என நினைக்கப் பார்க்கிருய். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற அந்தப் போலி வாழ்வு உனக்கு வேண்டாம். உன் சுவகுணத்தில் நின்று ஒழுகும், உண்மை வாழ்வே உனக்கு வேண்டும். அர்ச்சுஞ! நீ போரினைச் செய்!! விருப்பு வெறுப்பின்றிப் போரினைச் செய்!!! பற்றற்று நின்று போரினைச் செய்!!!! பலன் நோக்காது நின்று போரினைச் செய்!!!!! இதுவே, யான் உனக்கு இப்பொழுது செய்யும் உபதேசமாகும்''. இங்ஙனம் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளினுர்.

## 3

## கர்மயோக நெறி — அதன் பொது நிலை: புத்தியிற் சரண்புகுதல்

இந்த உலகம் கர்மபூமியென்றும், இந்த உலகில் வாழும் நாம் பெற்றிருக்கும் உடம்பு கர்மங்கள் செய்ய ஏற்பட்டனவென்றும், செய்யப்படும் கர்மங்களும் சுவ குணத்திற்கேற்ற சுவகர்மங்களாயிருக்க வேண்டுமென் றும், தன் அறிவில் தெளிந்த ஒருவனே கர்மயோக நெறிச் சாதனைக்குத் தகுதியுடையவனாகின்றான். அந்தச் சாதனை செய்பவன் உடம்பினுள்ளே பொருந்தியுள்ள உறுப்புக்களை யுங் கருவி கரணங்களையும் அவற்றால் நிகழுந் தொழில் களையும் ஓரளவிற்காயினும் ஆராய்ந்து தெளிந்த தத்துவ ஞானியாயிருத்தல்வேண்டும்.

உடம்பிலுள்ள கருவி கரணங்களுள் முக்கியமாவன:

(அ) கர்மேந்திரியங்கள் ஐந்து: அவையாவன — வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்பன.

(ஆ) ஞானேந்திரியங்கள் ஐந்து: அவையாவன — மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

(இ) அந்தக்கரணங்கள் நான்கு: அவையாவன — மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன.

இவற்றுள் முதற் கூறப்பட்ட பத்தும் புறக்கருவிக ளென்றுங் கடைசியிற் கூறப்பட்ட நான்கும் அகக்கருவி கள் என்றுங் கூறப்படும். சாங்கியர்கள் புறக்கருவிகளைப் புறத் தத்துவங்களென்றும், அகக்கருவிகளை அகத் தத்து வங்கள் என்றுங் கூறுவர். இவற்றுள் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்பன கர்மங்களைச் செய்வன ஆதலின், கர்மேந்திரியங்கள் எனக் கூறப்பட்டன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன புறத்திலுள்ள பொருள் களைப் பற்றிய ஞானத்தைத் தருவன ஆதலின், ஞானேந் திரியங்கள் எனக் கூறப்பட்டன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன, அகத்திலே நின்று புறப்பொருள்

களால் தாம் பெறும் அறிவை, விசாரணை செய்தும், சிந்தித்தும், நிச்சயித்தும் வரும் கருவிகளாதலின், அந்தக் கரணங்கள் எனக் கூறப்பட்டன. இவற்றுள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஞானேந்திரியங்களும் மனம் என்ற அந்தக்கரணமும் ஒருங்கே சேர்ந்து புறப் பொருள் ஞானத்தைப் பெற்று, அந்த ஞானத்தை அகத்தே செலுத்துகின்றன. உண்மையில், ஞானேந்திரியங்கள் ஐந் தும் புலனுகர்ச்சிக்குரிய விடயங்களைப் பெற்றுத் தர, மனம் என்ற அந்தக்கரணம் அந்த விடயங்களை உள்ளே இழுத் துச் சென்று புத்தியிடத்திலே சேர்க்கின்றது. அதனல் ஞானேந்திரியங்களும் மனமும் எப்பொழுதும் புறப் பொருள் நோக்கையும் அநுபவத்தையுமே நாடிக்கொண் டிருக்கின்றன.

சுவகர்மங்களையே செய்தல் வேண்டுமென்று தெளிந்து அதில் உறுதிப்பட்ட ஒருவனுக்கு, ஞானேந்திரியங்களையும் மனத்தையும் உள்ளிழுத்துத் தன் புத்தியிற் சேர்த்து லயம் பெறவைத்தல், ஒரு கஷ்டமான சாதனையன்று. கர்மயோக சாதனைசெய்ய விரும்பும் ஒருவன், முதலில் புத்தியில் சரண் புகுதல் வேண்டுமென ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுன னுக்குக் கட்டளையிடுகின்றுர். எனவே, கர்மயோக சாதனை செய்பவன், முதலில் தன் புறக்கருவிகள் அனைத்தையும் புத்தியில் லயமாக்கிக்கொள்ளுதல்வேண்டும். இந்தப் பயிற்சியை முறையோடு பயின்று வருமொருவன், நாட்கள் செல்லச்செல்ல, புறப்பொருள்களிலும் விடய சுகங்களி லும் தன் ஊக்க நிலைகள் குறைந்து, புத்தியிலேயே சர ணடைந்து வாழுந் தகுதியைப் பெறுவான். அவனிடத்தி லுள்ள விருப்பு வெறுப்பு உணர்ச்சிகள்கூடச் சிறிது சிறி தாகக் குன்றத் தொடங்கும். ஓரளவில் அவனுக்குப் புற வுலகப் பொருள்களைப் பொறுத்தவரையில், சமபார்வை யும் வந்து உதயமாகும். கர்மயோக நெறியின் முதற் படி இதுவே. இதில் நிற்கும்பொழுதே இவன் புத்தியிற் சரண்புகுந்து தன் சுவகர்மங்களைத் திறம்படச் செய்யுந் தகுதியைப் பெறுகின்றுன். தான் செய்யுங் கர்மங்களை

யும் மிகவுஞ் சுருங்கிய காலத்தில் எளிதாகச் சாதித்து விடுகின்ருன். இவனிடத்தில் ஏனையோர்க்கு எளிதிற் கைகூடாத காரியசித்திகளுங் கைகூடுகின்றன. இந்த கர்மயோக நெறியின் முதற்படியின் மிக முதிர்ந்த நிலையி லேயே, தற்கால விஞ்ஞான மேதைகள் தமது விஞ்ஞான ஆராய்ச்சிகளைச் செய்து சித்திகள் பெற்று வருகின்றனர் எனக் கூறலாம். இவ்வாறு புத்தியிற் சரண்புகுந்து, கர்ம யோக நெறியின் முதற்படியில் நின்று ஒழுகுபவர்களை ஆத்மஞானிகளென்று நாங்கள் கருதுதல் கூடாது. குணங் களால்தான் கர்மங்கள் நிகழுகின்றன என்ற உண் மையை, இவர்கள் கர்மயோக சாதனை செய்து வருப வர்களாயினும், சிறிதேனும் உணருவதில்லை. அகங்காரத் தால், தாமே கர்மங்களை நிகழ்த்துபவராக இவர்கள் தம்மைக் கருதிக்கொள்கின்றனர். குணங்களைத் தாமென் றும் தம்மைக் குணங்களென்றும் கருதும் மயக்கத்தால், இவர்களும் — கர்மயோக நெறியின் முதற்படியில் நிற்ப வர்களாகிய இவர்களும்—ஏனையோர்போல கர்மசக்கரச் சுழற்சியில் அகப்பட்டுத் தத்தளிப்பவரேயாவர். உண்மைக் கர்மயோக நெறிச் சாதனை எப்பொழுது ஒருவருக்குக் கைகூடுகின்றதெனில், ஞானேந்திரியங்கள் மனம் ஆகிய இவற்றுடன் புத்தியையும் ஒருங்கே சேர்த்து இழுத்து எப் பொழுது ஒருவர் அனைத்தையும் ஜீவாத்மாவினிடத்திற் சேர்த்துவிடுகின்ருரோ, அப்பொழுதே அவருக்கு அந்தப் பெருநெறி கைகூடுகிறது எனக் கூறலாம்.

## 4

## கர்மயோகம் — அதன் சிறப்பு நிலை (1)

### ஜீவாத்மாவிற் சரண்புகுதல்

கல்வி உலகில் 'எப்பொழுதுஞ் சுவகுணத்திற்கும் சுவ ஆற்றலுக்கும் சுவ அறிவிற்கும் சுவ தேவைகளுக்கும் உயர்ந்த இடம் கொடுக்கப்படல்வேண்டும்' என்ற கல்வியின் உன்னதமான இலட்சியம் இருந்துகொண்டு தான் வருகின்றதாயினும், அந்த இலட்சியம் கல்வி உலகிற் பேச்சளவில் நின்றுவிடுகின்றது. காரணம்

யாதெனில், சுவ குணம் சுவ ஆற்றல் முதலியன பற்றிய உண்மை அறிவு, தற்காலக் கல்வி அறிஞர்கள்பால் இல்லாமையே. சுவ குணம் யாதென விளங்கிக்கொள்ளுதல் கடினம். அதிலும் கடினம், அந்தக் குணம் வாயிலாக விளங்கித் தோன்றும் ஜீவாத்மாவின் இயல்புகளை விளங்கிக் கொள்ளுதல். பொதுவாகத் தற்காலக் கல்வி அறிஞர் அனைவரும் சுவகுணமே ஜீவாத்மா எனக் கருதுபவர். இது சாங்கியரின் தத்துவதரிசனப்படி ஒரு மயக்க உணர்ச்சியாகும். இந்த மயக்க உணர்ச்சி நீங்கினாலன்றி ஒருவருக்கும் கர்மயோக நெறி அதன் உண்மை நிலையிற் சித்திப்பதில்லை. சாங்கிய தரிசனத்தில் உணர்த்தப்பட்டவாறு, குணங்கள் பிரகிருதியில் எழுந்த தோற்றங்கள் என்றும் அவற்றிற்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள தொடர்பு பொதுநிலையில் ஏற்படும் ஒரு தொடர்பு என்றும், ஆனால் உண்மை நிலையில் ஒரு தொடர்பும் இல்லையென்றும் காணுந் தெளிவுக்காட்சி, முதலில் ஒரு கர்மயோகிக்கு வந்து அமைதல்வேண்டும். அது அமையவில்லையெனில், கர்மயோக சாதனையின் சிறந்த பெறுபேறுகளை அவன் எதிர்பார்த்தல் இயலாது. உடம்பில் உள்ள கருவி கரணங்கள் தொழிற்படும்பொழுது அவற்றின் தொழில்களையெல்லாங் குணங்களே நின்று இயக்குகின்றனவென்று காண்பதாகிய தெளிவுக்காட்சியைப் பெறுதல் மிகமிகக் கடினம். அந்தத் தெளிவுக் காட்சியுடையோரே, கர்மயோக சாதனையால் எழக்கூடிய சிறந்த ஆத்மீகஅனுபவத்தைப்பெறத் தகுதியுள்ளவராவர். அந்தத் தெளிவுக்காட்சியுடையோரை 'நைஷ்கர்மிய நிலை' பெற்றவர் என்றும், 'செயலற்ற நிலை' கைவந்தவர்களென்றும், 'உடம்பு வேறு', 'ஜீவாத்மாவாகிய தான் வேறு' என்ற அனுபவக்காட்சி பெற்றவரென்றும், 'சாட்சி மாத்திரையாயிருப்பவ' ரென்றும் பலவாறு கூறுவர். அவர்களுடைய கை கால் முதலிய அவயவங்கள் தொழில்கள் புரியினும் அவைகள் உண்மையிற் செயலற்றிருப்பன. அவர்களுடைய ஞானேந்திரியங்கள், கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்து இருப்பினும், அவர்கள்

இச்செயல்களையெல்லாம் தமக்கு வேறான செயல்க ளெனக் கண்டு தொடர்பின்றி இருப்பர். மனம் புத்தி முதலிய அகக்கருவிகள், சிந்தனை செய்தல், விசார முறுதல் முதலிய தொழில்களைச் செய்யினும், அந்த 'நைஷ்கர்மிய நிலை' பெற்றவர்கள், தாங்கள் சங்கல்பங் களையே செய்யாத சங்கல்ப ரகிதர்களாயிருப்பார்கள். இவ்வாறான ஒரு சாட்சியனுபவநிலை வாய்க்கும்பொழுது, இந்த நைஷ்கர்மிய நிலையினைப் பெற்றவர்களுடைய புத்தி முதலாகிய கருவிகளனைத்தும் ஆத்மாவிற் சரண் புகுந்துகொண்டனவென்றும், இது ஓர் ஆத்மதரிசன நிலை யென்றும் பெரியோர் கூறுவர். கர்மயோகநெறி வாய்க்கப் பெற்ற பெரியோர்களை மூன்று பெரும் பிரிவினராகக் கொள்ளலாம். முதற் பிரிவினர் புத்தியிற் சரண்புகுந்து காரியசித்திகள் பெறுங் கர்மயோகிகள். இரண்டாம் பிரிவினர் ஆத்மாவிற் சரண்புகுந்து அதில் ஓர் உயர்ந்த சாட்சி அனுபவநிலையைப் பெற்றுத் திளைக்கும் கர்ம யோகிகள். மூன்றும் பிரிவினர் பரமாத்மாவிற் சரண் புகுந்து, அதில் ஒரு பரானுபவ நிலைபெற்றுத் திளைக்கும் கர்மயோகிகள். பின்வருங் கட்டுரையில் விளக்கப்படுப வர் இங்கு கூறப்பட்ட மூன்றும் பிரிவினர் எனஅறிக.

## 5

## கர்மயோகம்—அதன் சிறப்புநிலை (2)

### பரமாத்மாவிற் சரண்புகுதல்

கடவுள் உண்மையை ஒப்புக்கொள்ளாத சாங்கி யர் 'நைஷ்கர்மிய நிலை' ஆகிய சாட்சி, அனுபவ நிலை கைவந்தவுடன், தங்கள் சாதனைகளை நிறுத்தி விடுவர். அவர்கள் உடம்பு வேறு, ஜீவாத்மாவாகிய் தான்வேறு என்ற அனுபவக்காட்சிபெற்றவர்களாயினும், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறு என்ற அனுபவக் காட்சி பெறாதவர்கள். அதனால் அவர்கள் நைஷ்கர்மிய நிலைக்கு மேலான நிலைகளைப் பெறுவதற்கு முயலுவதில்லை.

ஆனல் கடவுள் உண்மையை ஒப்புக்கொள்ளுஞ் சாங்கியர் களோ நைஷ்கர்மிய நிலைக்கு மேலான அநுபூதி நிலைகளைத் தாம் அனுபவத்திற் பெறுதல்வேண்டும் என்ற விருப்பத் துடன் மேலான சாதனைகளைச் செய்துகொண்டிருப்பர். ஜீவாத்மாவாகிய தான் உடம்புடன் ஒன்றுபட்டு உடம்பே ஜீவாத்மா என்ற மயக்க உணர்ச்சியில் தத்தளித்த தன்மை போல, ஜீவாத்மாவே பரமாத்மா எனக் கருதிக் கடவுள் உண்மையை ஒப்புக்கொள்ளாத சாங்கியர்கள் முடிவுகட்டி யமை, அவர்கள் தவக்குறைவே என, அவர்கள் கூறுவர். ஜீவாத்மாவாகிய தான் பரமாத்மா விளங்கித்தோன்று கின்ற ஒரு ஆலயம்போல் அமைந்துள்ளே னென்றும், ஜீவாத்மாவாகிய தனக்கு உள்நின்று பரமாத்மா வேண் டிய போக போக்கியங்களையும் அனுபவங்களையுந் தந்து உபகரிக்கின்றதென்றும், தன்னிடத்திலுள்ள அறிவு முதலிய அருங்குணங்கள் ஜீவாத்மா உள் நின்று பிரகாசிப்பதாற் ருன், தனக்கு ஏற்பட்டுள்ளனவென்றும் அவர்கள் கூறுவர். அதனல் சாட்சி அநுபவநிலை பெற்றதன் பின்னர், அவர் கள் தமக்கு உள்நின்று உபகரிக்கின்ற பரமாத்மாவை மற வாது வாழுகின்ற ஒரு பெருவாழ்வை மேற்கொள்வார்க ளென்றும், அங்ஙனம் வாழும்பொழுது அவர்கள் பரமாத் மாவைப் போற்றுதல் புகழ்தல் ஆனந்தங் கொள்ளுதல் பர வசப்படல் முதலிய சிறந்த அனுபவங்களைப்பெற்றுப் பர மாத்மாவுடன் வேறற ஐக்கியமுற்று ஜீவாத்மா என்ற நாமமே அற்றுப்போகும்வண்ணம் அயரா அன்பின் வசத் தராய் நின்று பரமாத்மாவுடன் இரண்டறக்கலப்பர் என்றும் பக்தி ஞான நூல்கள் கூறும். இந்த நிலை யில் உடம்பும், உடம்பிலுள்ள கருவி கரணங்களும், ஜீவாத்மாவாகிய தானும் முழுவதும் பரமாத்மாவிற் சரண்புகுந்து பிரவேசிக்கின்றதாகிய ஓர் அனுபவம் கைகூடுகின்றது. இந்த அனுபவத்தைக், கடவுளுண்மையை ஒப்புக்கொள்ளும் சாங்கியர் பரானுபவம் எனக் கூறுவர். சாட்சி நிலையில் ஏற்படும் அனுபவம் உடம்பி லிருந்து கழன்று நிற்கின்றதாகிய சுகத்தினல் வந்து வாய்ப்பது. இந்தப் பரானுபவம் பரமாத்மாவுடன்

இடையருது ஐக்கியமுறுவதால் வந்து வாய்ப்பது. இந்த அனுபவத்தையே தமிழகத்திற் பண்டுதொட்டு இருந்து வரும் 'சைவசித்தாந்தம்', 'வைஷ்ணவ சித்தாந்தம்' முதலிய நெறிகளில் நின்று ஒழுகிய பெரியோர்கள் மிகவும் மேலான அனுபவமெனக் கருதித் தமிழகத்தில் தானல்லாத 'பரவஸ்துவாகிய பரம்பொருளுக்கு' தமிழ் நாடெங்குஞ் சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் கட்டி எழுப்பினுர்கள் என அறிக.

## 6

## முக்குணப் பாருபாடு

கடவுள் உண்மையை ஒப்புக்கொள்ளுஞ் சாங்கியருள் ஒரு சாரார் இறைவன் சந்நிதியில் பிரகிருதி எனப்படும் இயற்கை இயங்குகின்றதென்றும் அந்தப் பிரகிருதியிலிருந்து இறைவனின் ஆணையால் மூன்று பெரிய குணங்கள் தோன்றுகின்றனவென்றும் கூறுவர். மூன்று பெரிய குணங்களும் சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்பன. இந்த மூன்று பெரிய குணங்களும் சித், அசித் பிரபஞ்சங்களை ஒருங்கே சேர்த்து இயக்கும் மூன்று மாபெருஞ் சக்திகளாகும். சித் பிரபஞ்சம் — அறிவுலகம், அசித் பிரபஞ்சம் — சடவுலகம். இந்த மூன்று பெரிய சக்திகளுடைய தொடர்பு விசேடத்தினுலேயே வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையுமுடையனவாய் உயிர்த்தோற்றங்களின் அறிவு, இச்சை, செயல் ஆகிய அடிப்படைச் சக்திகள் விளங்கித் தோன்றுவனவாயின. உயிர்களின் அடிப்படை அறிவுக்குணத்தை மேலும் விளக்கிநிற்கும் சக்தி, சத்துவம் என்றும், அவற்றின் அடிப்படைச் செய்ற்குணத்தை மேலும் விளக்கிநிற்கும் சக்தி, ரஜஸ் என்றும், அவற்றின் இச்சை என்னும் குணத்தை மேலும் விளக்கிநிற்கும் சக்தி, தமஸ் என்றும் அறிஞர் கூறுவர்.

முக்குணங்களாகிய இந்த மாபெருஞ் சக்திகளின் பிடியிலிருந்து முழுவதுந் தம்மை விடுவித்த ஞானிகள் பிரபஞ்சத்தைப்பற்றி வர்ணிக்கும்பொழுது குணங்கள்

குணங்களோடு இயலுகின்றனவென்றும், குணங்களும் குணங்களும் ஒன்றுகூடிக் கூத்தாடுகின்றனவென்றும் கூறு நிற்பர். சாங்கிய அறிஞர்களுட் சிலர், சத்துவம் மேலான சக்தி என்றும், ரஜஸ் நடுத்தரமான சக்தியென்றும், தமஸ் கீழான சக்தியென்றும் கூறுவர். வேறு சிலர் முக்குணங் களும் சமதன்மையுடையனவென்று கருதுவர். இங்ஙனம் குணங்களாகிய இந்தச் சக்திகளைப் பற்றிய விளக்கத்தில் சமயஞானங்களுக்கு ஏற்றபடி, எப்பொழுதும் வேறு பாடுகள் இருந்தே வருகின்றன.

மூன்று குணங்களின் தன்மைகளையும் அவை மேலோங்கி நிற்பதால் ஏற்படும் கர்மங்களையும் பின்வரு மாறு நாங்கள் பகுத்து அறிந்துகொள்ளல் வேண்டும்:

**சத்துவகுணம்:** தன்மைகள்—நிர்மலத்தன்மை, ஒளித் தன்மை, ஞானத்தன்மை, மேலான உலகங்களில் வாழும் தன்மை முதலியன.

**செயல்கள் அல்லது கர்மங்கள் :** கல்வி கற்றல், தேவ பூசைகள் புரிதல், இன்பத்தின் பொருட்டு உழைத்தல், அமைதியைத் தேடல், சாந்தநிலைபெற்ற பெரியோர்களை நாடல் முதலியன.

**ரஜோகுணம்:** தன்மைகள் — விருப்பு வெறுப்புத் தன்மை, முயற்சித்தன்மை, தொழில்களிற் கலக்கும் தன்மை, பரபரப்புத்தன்மை, உலகத்திற் புகழ் அதி காரம் முதலியவற்றைத் தேடுந் தன்மை முதலியன.

**செயல்கள் அல்லது கர்மங்கள்:** புறத்தொழில்களில் அதிகரித்தல், அகங்கரித்தல், இன்ப துன்பங்களைத்தரும் செயல்களையே நாடித் திரிதல் முதலியன.

**தமோகுணம்:** தன்மைகள் — அஞ்ஞானத்தன்மை, இருட்டன்மை, மயக்கத் தன்மை, பெரியோரை இகழுந் தன்மை, அசையாதிருக்குந் தன்மை, சொந்தக் கடமையை மறந்திருக்குந் தன்மை முதலியன.

**செயல்கள் அல்லது கர்மங்கள் :** நித்திரை செய்தல், மறதியின் வசப்படுதல், தன் கடமையை மறந்திருத்தல், மயங்கிக்கிடத்தல், சோம்பர்கள் கூட்டத்தை நாடல் முதலியன.

மேலேதரப்பட்ட குணங்களாகிய மூன்று பெரிய சக்திகளும் ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருப்பதனுலும் ஒன்றையொன்று எதிர்த்துச் சமன்படுத்துவதனுலும் இந்தப் பெரிய பிரபஞ்சமானது 'யதார்த்தமான இயற்கைப் பெரு வஸ்துவாய்' நிலவி வருகின்றது என்பதே சாங்கியரின் கொள்கையாகும். இந்த மூன்று பெரிய சக்திகளேயுந் தன்னறிவிற் கண்டு, தெளிந்து, இவற்றைக் கடந்து செல்வதற்கு ஞானிகள் மேற்கொள்ளும் மார்க்கங்கள் மூன்று: அவையாவன—ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் என்பன. இவற்றுள் கர்மயோகம் முந்திய கட்டுரைகளில் விளக்கப்பட்டது. பக்தியோகம் யாதென்பது, பகவத்கீதையில் குணவிபாகயோகம் என்ற அத்தியாயத்திற் கூறப்பட்டவாறு, அடுத்த கட்டுரையில் விளக்கப்படுகிறது.

## 7

## பக்தியோகம்

'சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் ஆகிய மூன்று குணங்களேயும் எவ்வாறு ஒருவன் கடக்கின்ருன்' என்று அர்ச்சுனன் ஒரு விஞவை எழுப்பிய பொழுது, ஸ்ரீ கிருஷ்ணபகவான் 'பரிபூரணமான கற்புத்தன்மை வாய்ந்த பக்தியோகத்தால் என்னேச் சரணடைந்து வழிபடுவோன் குணங்களேக் கடந்து பிரம்மபதமாகிய மோட்சத்தைப் பெறுகின்ருன்' என விடைபகர்ந்தார். ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையிலுள்ள தொடர்பு குருவுக்கும் சிஷ்யனுக்குமுள்ள தொடர்பாகும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறிய விடையிலிருந்து நாங்கள் உணர்வது யாதெனில், குருவை வழிபடுதலே முக்குணங்களேயும் கடந்து செல்வதற்கு மிகவும் சிறந்த வழி என்பதாம். கடவுள் உண்மையை ஒப்புக்கொள்ளும் சாங்கிய தரிசனத்தின் வழிவந்த மிகச் சிறந்த நூலாகிய இந்தப் பகவத்கீதை, எல்லா அத்தியாயங்களிலும் பக்தியோகத்தையும் குருவழிபாட்டையுமே சிறந்த மோட்ச சாதனங்களாக வற்புறுத்திக்கொண்டு செல்கின்றது.

பிரகிருதியையும், பிரகிருதியின் குணங்களேயும், அந்தக் குணங்களேயே தாம் தாம் என்று கூறித் திரியும் உயிரினங்களேயும், அந்த உயிரினங்களே நல்வழி தீயவழிக ளிற் செலுத்தித் திரியும் தேவர்கள், அசுரர்கள் ஆகிய சூக்கும சொரூபங்களேயும், ஒருவன் நன்குணர்ந்து அவற் றின் பிடியிலிருந்து தன்னே விடுவித்துக்கொள்ள வேண்டு மெனில், குருவழிபாடு, பக்தியோக நெறி ஆகிய இவை போல் சிறந்த சாதனங்கள் வேறில்லே. அதனுற்றுன், பகவத்கீதை என்ற இந் நூலும், தமிழகத்தில் எழுந்து விளேந்த சைவசித்தாந்தம், வைஷ்ணவ சித்தாந்தம் ஆகிய உயர்ந்த சமயங்களும், பக்தியோக நெறியையே எல்லா நெறிகளிலும் மேலான நெறியென விதந்தெடுத்து ஓதுவனவாயின. இந்தப் பக்தியோக நெறிக்குச் சிறந்த பீடமாய்த் திகழ்வது, குருவழிபாடாகும்.

ஏனைய நெறிகளில் தூலபூதங்கள் சூக்கும பூதங்கள், அந்தக்கரணங்கள், குண சொரூபங்கள் ஆகிய இவற்றைக் குறித்துத் தனித்தனியாக, அவ்வவற்றிற்குரியனவாகிய அதிதெய்வங்களுக்கு வேள்விகள் செய்தும், அர்ப்பணங்கள் புரிந்தும், பிரீதிகள் இயற்றியும், தன் உண்மை உணர் தற்காகிய சாதனங்களே விதிக்கப்பட்டுள்ளன.

பக்தியோக நெறியில் அங்ஙனமன்று. தன்னேயே தன் தலேவனுகிய குருவினிடத்தில் முழுவதாக அர்ப்பணித்துத் தத்தம்செய்து விடுதலாகிய மகத்துவம் பொருந்திய வேள்வியே, இந்த நெறியில் விதிக்கப்பட்டுள்ளது. அதனுற்றுன், ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனேப் பார்த்து 'வியபிசாரமற்ற கற்புப் பெருநெறியில் நின்று உன்னே முழுவதும் என்னிடத்தில் தத்தம் செய்துவிடு' எனப் பணித்தார். 'அவ்வாறு உடல் பொருள் ஆவி யாகிய மூன்றையும் எம்மிடத்தில் அர்ப்பணிக்குஞ் செவ்வி யும் தகைமையும் உனக்கிருக்குமாயின், அர்ச்சுனு! இந்த முக்குணங்களேக் கடத்தல், உனக்கு ஒரு பொருளல்ல' என உறுதி கூறினர்.

பக்தியோக நெறியை அனுசரிப்போர் முதலில் ஒரு குருவைச் சார்ந்து, அவருக்குப் பணிவிடைகள் செய்து அவருடன் கலந்து வாழ்வுற்றும், பின்னர் அக்குருவின் அருவுருவ, அருவ, சொரூபங்களுடன் கலப்புற்று உறவாடியும், அதன்பின்னர் அக்குருவின் அகண்டிதமான ஞானத் திருமேனிமீது பரபக்திகொண்டு, உள்ளமும் உயிரும் கரைந்து ஒன்றுபட்டு நின்றும் பரானுபவப்பேற்றைப் பெறுவாராயினர் என அறிக.

# 8

## சாங்கிய யோகம்

### அதன் பெருமையை உணர்த்தும் பொன்மொழிகள்

1

**ரிஷிம் பிரசூதம் கபிலம் ய: தம் அக்கிறே**
**க்ஞானை: பிபர்தி ஜாயமானம் ச பஸ்யேத். ||**

அந்த இறைவனே அந்த முதல்ரிஷியாகிய கபிலரைத் தோற்றுவித்து, அவரை ஞான உணவுகள் ஊட்டிப் போஷித்தான். கபிலர், சாங்கிய ஞானகர்த்தாவைக் குறித்தது.

— சுருதிவாக்கியம் 1

2

**தத் காரணம் சாங்கியயோக கம்யம்**
**ஞாத்வா தேவம் முச்யதே சர்வபாஸை: ||**

சாங்கிய யோகத்தினுற் பெறப்படும் அந்தப் பரம காரணத்தை உணர்ந்து, எல்லாப் பாசங்களிலிருந்தும் விடுபடுகின்றுன்.

— சுருதிவாக்கியம் 2

3

**கந்தர்வாணும் சித்திரரத: சித்தாணும் கபிலமுனி:**

யான் கந்தர்வருள்ளே சித்திர ரதனுகவும், சித்தர்களுள்ளே கபிலமுனிவனுகவும் இருக்கின்றேன்.

— பகவத்கீதை

4

சாங்கிய மதமாகிய இது கூறும் சற்காரியவாதம் சைவம் முதலிய சற்காரியவாத நூல்கட்கெல்லாம் உபகாரமாம். இது கூறும் அத்தியாசவாதம் மாயா வாதத்துக்கு உபகாரமாம்.

— மாதவச்சிவஞான சுவாமிகள்

5

Kapila is the father of Indian thinkers. Buddhism and other systems are the outcome of his thought.

கபிலமுனிவரே இந்திய தத்துவ ஞானிகளின் தந்தை. அவரது சிந்தனைத் திறவுகோலாலன்ருே, புத்தம் முதலாய சமய வாதங்கள் உருப்பட்டு வந்தன.

— சுவாமி விவேகானந்தர்

6

There is no philosophy in this world that is not indebted to Kapila.

உலகிலுள்ள எந்தத் தத்துவ ஞானமும் ஏதோ ஒரு வகையில் இந்தக் கபிலமுனிக்குக் கடமைப்பட்டே இருக்கின்றது.

— சுவாமி விவேகானந்தர்

7

This wonderful man, the most ancient of philosophers, is mentioned even in the Sruti 'Oh Lord, thou who produced the sage Kapila in the beginning.'

மிகவும் ஆச்சரியம் வாய்ந்த, முதலில் தோன்றிய முனிபுங்கவனுகிய கபிலரைப்பற்றிக் கூறுகையில், சுருதி 'இறைவனே! எங்களுக்குக் கபில முனிவனை முதலில் தந்தனை' என விளிக்கின்றது.

— சுவாமி விவேகானந்தர்

8

சாங்கியம் தனிக் கொள்கையாக இன்று வழங்காமற் போனுலும், இதன் எதிர்ஒலி கேளாத மதங்களே இந்தியாவில் இன்று இல்லை எனலாம்.

— தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்

9

சாங்கியம் வாழ்வின் அடிப்படையாய், உண்பானும் உணவுமாய் அமைந்த விருந்தனுபவத்திலிருந்து தொடங்குகிறது.

— தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்

10

மனத்தின் உண்மை விடுதலை நிலையினையும், அதன் ஒப்பற்ற தன்னம்பிக்கையினையும், அதன் முழு உரிமையினையும் கபிலர் காட்சியில்தான் உலக வரலாற்றிலேயே முதன்முதற் காண்கிறோம்.

— டக்டர் கார்பே

# 9

## சாங்கிய யோகம்

### அதன் சார்பாக ஒரு வேண்டுகோள்

இந்த மிகமிகப் புராதனமான தரிசனம் யதார்த்த வாத முடிபு கொண்டது. சடம், சித்து ஆகிய இரண்டையும் பிரகிருதி புருடன் எனக் கூறி, புருடன் பிரகிருதியிலிருந்து கழன்று தனிமையில் கைவல்யம் எய்தி, சாட்சி ரூபமாய் நிற்கும் சிறந்த அநுபவ சுக நிலையை மிக மிகப் பழைய காலத்திலேயே உணர்த்திய பெருமையோடு கூடியது. இதனுட் கூறப்படும் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும், சற்காரிய வாதம், அத்தியாச வாதம் முதலியனவும், விவேக ஞானம், ஜீவன்முக்தி, விதேகமுக்தி, சவிகல்ப சமாதி, நிர்விகல்பசமாதி முதலிய அநுபவ உத்தேச நிலைகளும், சைவசித்தாந்த வேதாந்த தரிசனங்களுக்கு மிகுந்த உபகாரமாம். எனவே, சாங்கிய நூற் கல்வி, சிறப்பாக சைவசித்தாந்த வேதாந்த நூற் கல்விகளுக்கும், பொதுவாக இந்து சமய தத்துவ ஞான நூற் கல்விக்கும் ஆதார நூற் கல்வியாகும். இதனை, இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் இயங்கும் இந்து சமய தத்துவஞான பீடங்களுக்கு மிகுந்த தாழ்மையுடன் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணம்,
பிலவங்கஹு பங்குனிமீ .

மு. ஞானப்பிரகாசம்

உ

சிவமயம்

# அருஞ்சொற் பொருள்விளக்கம்

அகக்கருவி—உட்கருவி, தேகசம்பந்தமாகிய ஆன்மாவினது உட்கருவிப் பொருள்.

அகங்காரம் — ஒரு தத்துவம், அந்தக்கரணங்களில் ஒன்று. நான் இதனைச் செய்வேன் என்று முற்பட்டு எழும் மனநிலை.

அகநோக்கு — உட்பார்வை. மனிதரை மேனாட்டுத் தத்துவ ஞானிகள் அகநோக்கர் புறநோக்கர் என இரு கூறினராகப் பகுப்பர். அகநோக்குடையோர், சிந்தனையாளராகவும், அகக் காட்சிகள் பெறுபவராகவும் இருப்பர்.

அசாத்தியம் — நம்பமுடியாதது. கைகூடக் கூடியதல்ல. நிகழமுடியாதது.

அசித்து — அறிவுப்பொருளல்லாதது. சடப்பொருள் எல்லாம் அசித்துப்பொருள்,

அசுரர் — தேவர்களது பகைவர். எப்பொழுதும் தேவர்களுக்கு இடையூறு விளைத்துக்கொண்டிருப்பவர்.

அசூயை — பொறாமை (கர்ம — 32).

அஞ்ஞானம் — அறியாமை. அறிவுக்கு நேர்மாறானது. ஆணவமலத்தின் குணம்.

அடிப்படைச் சக்திகள் — ஆன்மாவுக்கு ரூபத்தைக் கொடுக்கும் அறிவு இச்சை செயல் என்பன.

**அண்டம்** — பல உலகங்கள் சேர்ந்து பெருங்கோளமாய் விளங்கும் பேருலகம்.

**அதிசூக்குமநிலை** — சூக்குமநிலைக்கு ஏதுவான காரணநிலை.

**அதிதி** — விருந்தினன்.

**அதிதெய்வம்** — ஒவ்வொரு உயிருக்கும் அந்த உயிரை வழிநடத்தியும் செலுத்தியும் கொண்டிருப்பதாகிய ஒவ்வொரு தெய்வசக்தி உளது. அந்தத் தெய்வ சக்தியை அதிதெய்வம் எனக் கூறுவர்.

**அதிஷ்டானம்**—பார்வைக் கெட்டாத ஆதாரம். (கர்ம-40)

**அத்யாத்மபுத்தி** — ஆன்மாவைப்பற்றிய உண்மை அறிவு. (கர்ம — 30)

**அநித்தியம்** — நிலையில்லாதது.

**அந்தக்கரணம்** — உட்கருவிகள்; மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன. இவற்றுள் மனம், புறப் பொருள்களைப்பற்றிச் சிந்திக்கும்; அகங்காரம், இப் பொருளை அறிவேனென்று முற்படும்; சித்தம், புறப் பொருளின் வடிவத்தைத் தான் பெற்றிருக்கும்; புத்தி, பொருள் இதுதான் என நிச்சயிக்கும்.

**அபக்குவி** — பக்குவமில்லாதவன். குறிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்குத் தகுதியில்லாதவன்.

**அபரஞானம்** — நூல்கள் மூலம் ஒருவர் பெறும் அறிவு. இது வெறும் ஞாபகசக்தியளவில் நின்று ஒருவரிடத்தி லிருந்து வெளிவருவது.

**அபிமானம்** — ஒருபொருளைத் தனது என்று கருதுவதனால், ஒருவரிடத்தில் விறுவிறுப்புடன் எழும் மயக்கமான மனநிலை.

**அபேக்ஷித்தல்** — விரும்புதல் (கர்ம — 30).

**அப்பிரவிருத்தி** – விருத்தியின்றி அறிவு சுருங்கிக் கிடக்கும் சோம்பல் நிலை. (குண – 13)

**அமலலோகம்** - மலம் நீங்கியவர் வாழும் மேலுலகம். (குண - 14)

**அமிர்தநிலை** – இறவாத பெருநிலை.

**அயரா அன்பு** – இறைவனை மறவாது அவனையே நினைந்து நினைந்து உருகுவதனால் எழும் மனக் குழைவு.

**அருவம்** – உருவமில்லாதது. உருவம் ஏற்படுவதற்கு முன்னர் நிகழ்வதாகிய ஒரு சூக்கும சொரூபநிலை.

**அருவுருவம்** – உருவமும் அருவமும் கூடியிருக்கும் ஒரு நிலை. சிவபிரானைக் குறிக்கும் சிவலிங்கத் திருமேனியை அருவுருவத் திருமேனி என்பர்.

**அர்ப்பணம்** – தன்னை இழந்து செயலற்று நிற்றல்.

**அலட்சியம்** – பொருட்படுத்தாது பாராமுகமாயிருத்தல்.

**அவமதித்து** – குறைவாக எண்ணி.

**அவமானம்** – தன் மதிப்பை இழந்து நிற்கும் கீழ்நிலை.

**அவஸ்தையுறுதல்** – வேதனைப்படுதல்.

**அவித்வான்** – கல்வியறிவில்லாதோன். (கர்ம – 25)

**அவ்யயம்**–அரூப இயல்புள்ள அழிவுறாத வஸ்து. (குண-26)

**அனக!** – பாபபுத்தியில்லாதவனே!, விழிவேற்றுமை. (குண - 6)

**அனாமயம்** – துக்கமின்மை, நோயின்மை, வியாதியின்மை. (குண – 6)

**அனாரம்பம்** – தொடக்கமின்மை, முயலாமை, செய்ய வேண்டிய கர்மங்களைத் தொடங்கிச் செய்யாதிருக்குந் தன்மை. (கர்ம - 4)

**அனுஷ்டித்தல்** — ஒழுகுதல்.

**அஹம் பிரம்மோஸ்மி** — இது உபநிடதங்களில் வரும் மகா வாக்கியங்களில் ஒன்று. இதன் பொருள், 'நான் பிரமமாயிருக்கின்றேன்' என்பது.

**ஆசிரயம்** — அண்டி இருப்பதற்கு வாய்த்த புகலிடப் பொருள். (கர்ம - 39)

**ஆசை** — ஆணவமலத்தினுல் உயிர்களிடத்திலிருந்து இடையருது பிரவாகித்துக்கொண்டிருக்கும் ஒரு மலசக்தி. அது காம குரோத வடிவமாய் வெளிவருவது. காமம் தீவிரமான இச்சையைக் குறிக்கும் ஒரு சொல். குரோதம் தீவிரமான வெறுப்பை உணர்த்தும் ஒரு சொல். காமம் நிறைவேற இயலாத பொழுது, அந்தக் காமமே தீவிரமான வெறுப்பாய்—குரோதமாய் வெளிவருகிறது.

**ஆணவமலம்** — நான் என்ற அகம்பாவ உணர்ச்சிக்கு ஏதுவான மூலமலம்.

**ஆணை** — எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் இறைவன் தன் ஆணையின்கீழ் வைத்துளான் எனக் கூறுவர். இறைவன் ஆணை செலுத்தும்பொழுது பதி என்று அழைக்கப்படுவன். இறைவனின் அதிகார நிலை.

**ஆத்மஞானி** — தாளுகிய ஆன்மாவையும், தன் தலைவனுகிய இறைவனையும், தன்னறிவில் வைத்துத் தெளிந்த ஒருவன் ஆத்மஞானி எனப்படுகிருன். ஆன்மா இறைவனிருக்கும் ஆலயம் எனக் கண்டுகொண்டிருக்கும் சிறந்த ஞானி.

**ஆத்மதரிசனம்** — தாளுகிய ஆன்மா, உடம்பிலிருந்து நீங்கி நின்று உடம்பைத் தனக்கு வேருகக் காண்கையில் நிகழுவது ஆத்மதரிசனம். இந்தத் தரிசனம் எப்பொழுது பூரணப்படுகின்றதெனில், ஆத்மா தன்

னுண்மைச் சார்பை உணர்ந்து இறைவனைச் சார்ந் திருக்கும் பொழுதே இத்தரிசனம் பூரணப்படுகின்றது.

ஆத்மதிருப்தி — ஆன்மா உண்மையை உணர்ந்து, சுகத் துடன் நிறைவு பெற்றிருத்தல்.

ஆரோபித்தல் — ஏற்றிக்கொண்டிருத்தல் (கர்ம - 39).

ஆவரண சக்தி — சூழ்ந்து நின்று, உண்மையை மறைத்துக் கொண்டிருக்கும் ஆணவமல சக்திகளுள் ஒன்று.

ஆன்ம விசாரம் — நான் யார், என் தலைவன் யார், பிர கிருதி யாது, என்ற வினாக்களுக்கு விடையை அறிந்து தெளிவதற்கு மனம் ஆவலுற்றிருக்கிறதாகிய ஒரு நிலை.

இகபரசுகம் — இம்மை மறுமைகளில் வாய்க்கும் சுகநிலை. உடம்போடு கூடி இருக்கும் நிலையிலும், இறந்ததன் பின்னரும் நிகழும் சுகாநுபவம்.

இச்சை — உயிருக்குள்ள அடிப்படைச் சக்திகளில் ஒன்று. மற்றைய அடிப்படைச் சக்திகள் கிரியை, ஞானம் என்பன. இம்மூன்று சக்திகளையும் ஒருங்கே சேர்த்து 'நுண்ணுணர்வு' எனக் கூறலாம்.

இந்திரியக்கிரீடை—இந்திரியங்களின் விளையாட்டு. அதாவது இந்திரியங்கள் தத்தம் விடயங்களைச் சதா நாடிக் கொண்டே இருக்கும் இழிநிலை.

இந்திரியம் — உடம்பிலுள்ள புறக்கருவிகள் ஞானசக்தி பிரவாகிக்கும் ஞானேந்திரியங்கள் என்றும், கிரியா சக்தி பிரவாகிக்கும் கர்மேந்திரியங்கள் என்றும் இந்திரியங்கள் இருவகை எனக் கூறுவர் சாங்கியர்.

இந்திரிய விஷயங்கள் - இந்திரியங்கள் நுகர்வதற்கு என அமைந்திருக்கும் புறப்பொருள்கள்.

இயற்கை — இதனைச் சாங்கியர் பிரகிருதி எனக் கூறுவர்.

இயற்கைச் சொரூபம் — இய்ற்கையாகவே அமைந்துள்ள ஒரு வடிவம். சைவ சித்தாந்திகள் ஆன்மாவின் இயற்கைவடிவம்—அன்பு வடிவம் என்பர். இறைவனின் இயற்கை வடிவம் இன்ப வடிவம் என்பர்.

இலட்சியம் — குறிக்கோள்.

இஷ்டதேவதை—பக்தர்களால் தமது சொந்தக் குணசுபாவத்துக்கேற்ப உபாசிக்கப்படும் தெய்வ வடிவம். இஷ்டதேவதை வணக்கம் பக்தர்களுக்கே உரியது.

ஈஸ்வரார்ப்பணம் — ஈஸ்வரன் தன்னை ஆள்பவன் எனக் கண்டு, தன்னை ஆள்பவனாகிய அவனிடத்தில் தன்னை ஒப்பாக ஒப்புவித்துவிடுதல். ஈஸ்வரார்ப்பணசாதனை ஞான முதிர்ச்சியுடையோர்க்கே எளிதிற் கைகூடும்.

ஈஸ்வரப்பிரீதி — ஈஸ்வரனுடைய திருவுள்ளத்திற்கு உவப்பான செயல்கள்.

உத்தாரணம் — செயலற்ற நிலையிலிருந்து தூக்கி எடுத்து விடுதல். தூக்கி எடுத்து, வெளியில் சுதந்தரத்துடன் நடமாடவிடுதல்.

உபசாந்தம் — மிகவும் உயர்ந்த அனுபூதிநிலை. இறைவன் திருவருள் வெள்ளத்தில் திளைத்து அதனை மறக்க முடியாது அதன் பெருமையைச் சிந்தித்துச் சிந்தித்து அரற்றி நிற்கும் ஒரு அற்புதநிலை.

உபதேசம் — கண்ணில்லாத ஒருவனுக்குக் கண்ணைக் கொடுத்து வழியைக் காட்டிவிடுவதுபோல்—மாணவனுக்கு ஞானக் கண்ணையும் கொடுத்து, செல்லும் கதியையும் காட்டிவிடும் ஒரு அருஞ் செயல். உபதேசம் செய்யும் உபதேசகுரு, வித்தியாகுரு கிரியாகுரு ஆகிய இவர்களுக்கு வேறானவர்.

உபாசித்தல் — தன்னால் வழிபாடு செய்யப்படும் தெய்வ சக்தியைத் தன்பால் அழைத்து, தன்னுள் வீற்

திருக்கும்படி வைத்தல். வேதம் உபாசனை காண்டம் ஞான காண்டம், கிரியாகாண்டம் என மூன்று பெரும் பிரிவுகளையுடையது.

**உயர்ந்தோன்** — கல்வி கேள்வி ஒழுக்கங்களிற் சிறந்தவன்.

**எண்குணம்** — இறைவனுக்குரிய அநந்த குணங்களுள் எண்குணங்களே சிறப்பாக எடுத்து ஓதப்படுவன. அவையாவன: தன்வயமுடைமை, தூயஉடம்பு, இயற்கை உணர்வு, முடிவிலாற்றல், வரம்பிலின்ப முடைமை, பேரருளுடைமை, இயல்பாகப் பாசங் களில் நீங்குதல், எல்லாமறிதல் என்பன.

**ஐகாந்திகசுகம்** — ஏகாக்கிரசித்தம் வாய்க்கும் நிலையில் உதயமாகும் சுகம். (குண — 26)

**கணம்** — நொடிப்பொழுது; ஒரு காலஅளவு. (கர்ம — 5)

**கதி** — வழி அல்லது மார்க்கம். இறந்ததன்பின்னர் உயிரானது செல்லுகின்ற வழியையும், சென்றதன் பின்னர் பெறுகின்ற பேற்றையுமே கதி என்ற இச்சொல் குறிக்கின்றது.

**கர்மசக்கரம்** — இந்து சமய தத்துவ ஞானிகள் இரண்டு வகையான சக்கரங்களைப்பற்றிக் கூறுவர். அவையா வன: பிரமசக்கரம், கர்மசக்கரம் என்பன. பிரமசக் கரம் மேல்நின்று ஆணைசெலுத்த, கர்மசக்கரம் கீழ் நின்று சுழல்கின்றதென்பர்.

**கர்மசங்கம்** — ஆசைகாரணமாக விருப்பு வெறுப்பு நிகழ, அவற்றால் கர்மங்கள் நிகழ, அவை காரணமாக வரும் தேவையற்ற தொடர்புகள். (குண - 7)

**கர்மநிஷ்டை** — நிஷ்டை இருவகைப்படும். அவையாவன: கர்மநிஷ்டை, ஞான நிஷ்டை என்பன. ஞானநிஷ்டை கர்மக் கலப்பில்லாத உயர்ந்த ஞானம் பெற்றோர்க் கும், கர்மநிஷ்டை யோகிகளுக்கும் உரியன எனப்

பகவத்கீதையாகிய இந் நூல் கூறுகின்றது. விருப்பு வெறுப்பின்றி மனோலயத்துடன் கர்மத்தைச் செய்து ஒழுகுவதனால், கர்மநிஷ்டை வாய்க்கிறது.

**கர்மபலம்** — ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு மனோ பாவத்துடனேயே ஆற்றப்படுகிறது. இந்த மனோ பாவம் செய்யப்பட்ட தொழிலுக்குக் காலகதியில் விதைபோலவிருந்து ஒரு பலனைத் தருகின்றது. தொழி லின் பலன் கர்மபலம் எனப்படும்.

**கர்மமலம்** — நல்வினை, தீவினைகள் உயிர்களைப் பந்தித்தலின் அவை கர்மமலம் எனக் கூறப்படுவன. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களாலும் நிகழ்த்தப் படும் செயல்கள் அனைத்தும் உருவம்பெற்று வந்து காலகதியில் உயிர்களைத் தாக்கிக்கொண்டிருப்பன. எங்கள் தேகமே பூர்வகன்மத்தால் விளைந்த வடிவம் என்பர்.

**கர்மம்** — தொழில். கர்மம் இருவகைப்படும். ஒன்று சாமா னிய கர்மம். மற்றையது விசேட கர்மம். வேள்வி, தபம், யக்ஞம் முதலியன விசேட கர்மங்களாம். பூர்வமீமாம்சகர் எனப்படும் சமயிகள் இந்த விசேட கர்மங்களே எங்களுக்குக் கடைசியில் முத்தி நிலையை யும் தருவன எனக் கூறுவர்.

**கர்மயோகி** — தான் செய்யும் தொழிலிலேயே மனோலயம் பெற்றவனாய், அதன் பலாபலனை எதிர்பாராதவனாய், அந்தத் தொழிலை இறைவனின் கைங்கரியமாய்க் காண்பவன் கர்மயோகி எனப்படுவன்.

**கர்மவஸ்து** — இச் சொல் இறைவனின் ஆணையைக் குறிக்கு மென்றும், மூலகன்மத்தைக் குறிக்குமென்றும் தத்தம் மதங்களுக்கேற்ப ஆசிரியர் இரண்டு வகை யாகப் பொருள் கூறுவர்.

**கர்மேந்திரியம்** — வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்பன. இவற்றினால் கர்மங்கள் நிகழ்வதனால், இவை கர்மேந்திரியங்கள் எனக் கூறப்படுவன.

**காமசொரூபம்** — ஆசைவடிவம் (கர்ம - 43).

**காமதேனு** — விரும்பியவற்றை வரம்பின்றி வழங்கும் தெய்வப் பசு. (கர்ம - 10).

**குணம்** — பிரகிருதியின் சேர்க்கையினுல் உயிரினிடத்தில் வந்து பொருந்தும் செயற்கைத் தன்மை. குணம் மூன்று வகைப்படும் என்றும், அவையாவன சத்துவ குணம், ரஜோகுணம், தமோகுணம் என்றும் சாங் கிய நூல்கள் கூறும்.

**குணரகிதன்** — குணங்களைக் கடந்த ஞானி குணரகித னுவன். இறைவனும் முக்குணங்களுக்கும் அப்பாற் பட்டவனுதலின், அவனும் குணரகிதன் என்று அழைக்கப்படுவன்.

**குணவிபாகம்** — குணங்களின் பாகுபாடு.

**குருநந்தன** — குருகுலத்தார்க்கு மகிழ்ச்சி விளைவிப்பவனே. இது விழிவேற்றுமை. (குண — 13).

**குருவணக்கம்** — இது கடவுள் நம்பிக்கையுள்ள எல்லாச் சமயங்களுக்கும் உயிர்க்கொள்கையாய் விளங்கு கின்றது. கிறீஸ்துவ சமயம், முஸ்லீம் சமயம் இவ் வணக்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்தது போல் சைவ, வைஷ்ணவ, சாக்த சமயங்கள் உணர்ந்திருக்கின்றன எனக் கூற இயலாது. தம் கண்முன் காணப்பட்ட ஒரு குருவினிடத்தில் ஒருவன் முழுவதும் தன்னைப் பறிகொடுத்து இழக்கும் பொழுதே — அவனது கடவுள் வணக்க நெறி தொடங்குகிறது என்பது பெரியோர் கொள்கை. முதலில் உருவ வணக்கத்தில் அநுபவங்கள் பெற்று, அந்த அநுபவங்கள் வாயிலாகக் கடவுள்பால் திட பக்தியை வளர்த்தல் வேண்டும் என்பதே பெரியோ ரின் உள்ளக்கிடக்கை.

**குரோதம்** — ஆணவ மலத்தின் குணங்களுள் ஒன்று. ஆசை நிறைவேற முடியாத வேளைகளில், ஆசையே குரோத மாக மாறுதலடைகிறது. குரோதம் — தீராத வெறுப்பு.

**குழப்பம்** — மனத்தெளிவில்லாத ஒரு கலக்கநிலை

**சங்கமற்று** — தொடர்பை நீக்கி (கர்ம — 7).

**சங்கம்** — தொடர்பு (குண — 9).

**சங்கற்பம்** — உலக நன்மையின் பொருட்டு உயர்ந்த அநு பூதிகைவந்த ஞானிகளின் தூய உள்ளத்தில் உரு வாகும் தூய எண்ணம்.

**சச்சிதானந்தம்** — இச்சொல் சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய மூன்று சொற்களாலாயது. இறைவன் என்றென்றும் நிலைத்து நிற்பவன் என்பதைக் குறிப்பது 'சத்து' என்ற சொல். அவன் என்றென்றும் அறிவு வடிவினன் என்பதைக் குறிப்பது 'சித்து' என்ற சொல். அவன் என்றென்றும் இன்ப வடிவினன் என்பதைக் குறிப் பது 'ஆனந்தம்' என்ற சொல்.

**சடசக்தி** — அணுக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்வதனாலும் ஒன்றிலிருந்து இன்னொன்று பிரிவதனாலும் விளங்கித் தோன்றும் ஒரு தூலசக்தி. வெப்பம், ஒளி, ஒலி, காந்தம், மின் முதலியன சடசக்திகளாகும். சூக்கும பூத தன்மாத்திரைகளின் சேர்க்கையால் விளங்கித் தோன்றுவது 'உணர்வுமயமாகிய சித்சக்தி' என அறிக.

**சடத்துவம்** — அணுத்தன்மை — உயிர் விளக்கம் அற்ற தன்மை எனவும் கூறலாம்.

**சத்துக்கள்** — நல்லவர்கள் (கர்ம — 13).

**சத்துரு** — பகைவன்.

**சத்துவகுணம்** — முக்குணங்களுள் மேலானகுணம் எனக் கைக்கொள்ளப்படுவது. இக் குணம் வாய்க்கப் பெற்றோர் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணப் படுவர்.

**சந்நியாசம்** — முற்றத்துறந்த நிலை. கர்மபலனில் பற்றற்ற நிலை. (கர்ம — 4)

**சபலம்** — தளர்ச்சி, உறுதியின்மை, நடுக்கம்.

**சபலமனம்** — நிலையற்ற மனம்.

**சமபுத்தி** — விருப்பு வெறுப்புக்களைக் கடந்து வாழும் பெரியோர் உள்ளத்தில் விளையும் நோக்கவிசேடம்.

**சமர்த்தன்** — தீரன்.

**சம்சாரகதி** — யாத்திரை மார்க்கம். செல்லும் வழி. பிறப் பிறப்புக்களுள் அகப்பட்டு அவஸ்தையுறும் ஜீவாத் மாக்கள் இறந்ததன் பின்னர், செல்லும் வழியையே இச்சொல் சிறப்பாகக் குறிக்கும்.

**சம்சித்தி** — நைஷ்கர்மிய நிலை. உடம்பிலிருந்து உயிர் கழன்று, தான்வேறு, உடம்பு வேறு எனக் காணும் நிலை. (கர்ம — 20)

**சம்பவம்** — தோற்றம். (குண — 3)

**சரண்புகுதல்** — ஒருவன் வேறொன்றினிடத்தில் தன்னைப் பறிகொடுத்தல்.

**சராசரங்கள்** — அசைவனவும், அசையாதனவும் ஆகிய பொருள்கள்.

**சரீரி** — சரீரத்தையுடையவன். இச் சொல் சரீரத்தை யுடையவனாகிய ஆன்மாவைக் குறிக்கும்.

**சர்வஞானமூடர்** — அறியவேண்டிய அனைத்தையும் அறியாது அரைகுறையாக ஒரு சில விஷயங்களை மாத்திரம் அறிந்த அறிவுடையோர். இவர் தம்மைத்தாமே அறிவுடையோராய் மதித்துக்கொள்பவர்.

**சர்வவியாபகப் பரப்பிரமம்** — அனைத்தையும் தனது பெரிய வியாபகத்துள் அடக்கி இருக்கும் பெரும் பெயர் இறைவன்.

**சலனப்படுத்தல்** — தளர்ச்சியுறும்படி செய்தல்.

**சாங்கியம்** — மிகப்பழைய தத்துவதரிசனம். பிற்காலத்தில் எழுந்த சைவசித்தாந்தம், வைஷ்ணவ சித்தாந்தம், சாக்த சித்தாந்தம் முதலிய சமய தரிசனங்களை விளங்குவதற்கு சாங்கிய தரிசன ஞானம் இன்றியமையாதது.

**சாசுவதம்** — எக்காலத்திலும் நிலைபெறுவது. (குண — 27)

**சாதர்மியம்** — ஒத்த தர்மத்தைப் பெற்றிருக்கின்ற தன்மை. (குண — 2)

**சாதனை** — எதனையும் சாதித்தற்கு உரிமையுள்ளது ஆன்மா. ஆன்மா உண்மைப் பொருளைச் சார்ந்து உயர்ந்த, ஆத்மீக சாதனைகளில் ஈடுபடும்பொழுது, தெய்வ குணங்களால் பொலிவுபெற்று விளங்குகிறது. அகமுகத்தில் மேற்கொள்ளப்படும் உயர்ந்த அகவொழுக்கமே, சமய நூல்களிற் கூறப்படும் சாதனை என அறிக.

**சாதுர்யம்** — தான் தன் வலிமையை அல்லது தந்திரத்தை உபயோகித்து ஒன்றை நிறைவேற்றி முடித்தல்.

**சாமர்த்தியம்** — கெட்டித்தனம்.

**சாமானிய கர்மம்** — கை, கால் முதலிய அவயவங்களினுலும் உட்கரணங்களாலும் எல்லோரும் எளிதாகச் செய்து நிறைவேற்றும் சாமானிய தொழில்.

**சாஸ்திரம்** — ஞான நூல்.

**சித்தசுத்தி** — சுவகுணம், சுவதர்மம் முதலியவற்றை அனுசரித்து வாழ்வதனுல், ஒருவனிடத்தில் வந்து வாய்க்கும் மிகத் தூய மனநிலை.

**சித்தம்** — இது ஒரு தத்துவம். அந்தக்கரணங்களுள் ஒன்று. புறப்பொருள்களின் பிம்பங்களைத் தரித்து, அவற்றின் வடிவமாய் நிற்கும் உட்கரணம்.

**சித்தி** — மனேலயம் வாய்க்கப்பெற்ற பெரியோர்கள் வாயிலாக நிகழ்வதும், ஏனையோரது புத்திக்கு ஆச்சரியத்தையும், அதிசயத்தையும் விளைவிப்பதும் ஆகிய அற்புத நிகழ்ச்சி.

**சிரத்தை** — இச்சொல், வேதாகமங்களிற் பெரிய மந்திரம் போல் உபயோகிக்கப்படுவது. சமயநெறியை அனுசரித்து வாழும் பெரியோரிடத்திற் சமய சாதனைகள் மீது எழும் தூய மன எழுச்சியே சிரத்தை எனப்படும்.

**சிரேயஸ்** — அகவொளியோடு கூடிய உயர்ந்த ஞானத்திரு. (கர்ம — 2)

**சிரேஷ்டன்** — உயர்ந்தோன் (கர்ம — 21).

**சிவஞானம்** — சிவபிரானே அனைத்தையுஞ் செய்தும் செய்வித்தும் வருகின்றார் என்று உயிரினிடத்தில் பிரவாகமாய் எழும் அனுபவஞானம்.

**சிறப்புநிலை** — ஒவ்வொரு பொருளும் தனக்கு அன்னியமான பிறபொருள்களின் தொடர்பின்றித் தனிமையில் நிற்கும் பொழுது ஏற்படும் நிலை, சிறப்புநிலை எனப்படும்.

**சிற்றின்பம்** — புலன்களால் அநுபவிக்கப்படும் இன்பம், சிற்றின்பம் எனப்படும். சிற்றின்பம் எப்பொழுதும் நீர்க்குமிழியை ஒத்தது. ஒரு கணப்பொழுது தானும் நிலைத்து நில்லாத இன்பம் ஆதலின், சிற்றின்பம் எனப்பட்டது.

**சுவகர்மம்** — தன்னுடைய பிறவியில் ஏற்பட்ட குணத்திற்கும், அக்குணத்தினுல் உருவாகிய தனது உடம்பின் அமைப்பு ஆற்றல் முதலியவற்றிற்கும் பொருந்திய கர்மம். கர்மம் என்பது தொழில்.

**சுவதர்மம்** — உடம்புக்கும் கருவிகரணங்களுக்கும் ஏற்ற வகையில் சுவகர்மங்கள் நிகழும்பொழுது, அவற்றின் பரஸ்பர ஒற்றுமையால் ஏற்படும் அன்புமயமான தர்மம்.

**சுவீகரித்தல்** — வேருெருவர்க் குரியதாகிய பொருளைத் தனது என்று வைத்துக் கொண்டாடுதல்.

சூக்கும உடம்பு — தூல உடம்புக்கு ஏதுவானதும், தன்மாத்திரைகளும் அந்தக்கரணங்களும் ஒருங்கே சேர்ந்து விளங்குவதுமாகிய நுண்ணுடம்பு.

சூக்குமம் — தூலத்திற்கு ஏதுவானது, சூக்குமம் எனப்படும்.

ஞானத் திருமேனி — இறைவனுக்குக் கூறப்பட்ட திருமேனிகள் நான்கு. அவையாவன: உருவம், அருவுருவம், அருவம், ஞானம் என்பன. இறைவனின் ஞானத் திருமேனியுடன் ஐக்கியமுறுபவர்கள் மிக உயர்ந்த அநுபவநிலைபெற்ற ஞானிகளே.

ஞான நிஷ்டை - ஞானயோகி கடைசியில் 'தான்' என்ற உணர்வையுங் கழற்றி நிற்கும்பொழுது, அவனிடத்திற் பொருந்தும் மிக உறுதியான சமாதிநிலை.

ஞானி — உண்மை அறிவுக்கு இருப்பிடமானவன்.

ஞானோபதேசம் — பரிசதீட்சை, நயனதீட்சை முதலியவற்றாலும், மந்திரம் பாவனை கிரியை முதலியவற்றாலும், பக்குவமுள்ள சிஷ்யனுக்கு ஞானத்தை உணர்த்தி வைக்கும் நிகழ்ச்சி.

ததர்த்தகர்மம் — பரம்பொருளைக் குறித்துச் செய்யப்படும் கர்மம் (கர்ம — 9).

தத்தஞ்செய்தல் — கொடுத்தல்.

தத்துவக்கொள்கை — தத்துவஞானி தன்னறிவில் தெளிந்து ஏனையோர்க்குக் கூறிய முடிபுகள். தத்துவஞானி தன்னறிவில் தெளிந்தது, ஏனையோர்க்குக் கொள்கையாய் அமைகிறது.

தத்துவஞானி — பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் பொதுநிலை சிறப்புநிலைகளைத் தன்னறிவில் வைத்து ஆராய்ந்து தெளிந்தவன்.

தமோகுணம் — பிரகிருதியிலிருந்தும் தோன்றும் முக்குணங்களுள் ஒன்று. இக்குணத்திலிருந்தும் தோன்றுவன சோம்பல், மறதி, நித்திரை என்பன.

தரிசனம் — அகக்காட்சி.

**தர்மதேவதை** — வேதாகமங்களில் அருளப்பட்ட தர்மங்களை, உயிர்க்குயிராய் உள்நின்று நடாத்திவைக்கும் தெய்வசக்தி.

**தர்மம்** — ஆசை, அபிமான நிலைகளிலிருந்தும் தம்மை நீக்கி, இயம நியம நிலைகளில் தம்மை அமைக்க விரும்பும் உயிர்களின் பொருட்டுத் தர்மம் அருளப்பட்டது. இறைவனால் வேதாகமங்களில் அருளப்பட்ட விதிகள் தர்மம் எனப்படும்.

**தர்மராச்சிய தாபனம்** — வேதாகமங்களில் விதிக்கப்பட்ட தர்மங்கள் சிறந்தோங்கும் வண்ணம் உருவாக்கப்படவேண்டிய உலக இராச்சிய அமைப்பு.

**தர்மாதர்மம்** — உயிர்கள் ஆசைகளை நீக்கி உண்மையை உணர்ந்து உய்யும்பொருட்டு இறைவனால் வேதாகமங்களில் அருளப்பட்ட விதிகளும் விலக்குகளும். இயம நியமங்களுள், இயம அனுஷ்டானம் வாயிலாக ஆசைகளை நீக்குதலும், நியம அனுஷ்டானம் வாயிலாக நெறிநின்று ஒழுகுதலும் கைகூடும் என்பது பெரியோர் துணிபு.

**தவம்** — விரதமனுஷ்டித்தல், யாத்திரை செய்தல், உண்ணாது உறங்காதிருத்தல் முதலியன.

**தளை** — கட்டு அல்லது பந்தம்.

**தன்மாத்திரை** — சப்த பரிச ரூப ரச கந்தங்கள் — இவை சூக்கும பூதங்கள். ஞானேந்திரியங்களை இடமாகக் கொண்டு புறவிடயங்களைக் கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்து, உயிர்கள் உலகாநுபவம் பெறுவதற்கு உபகரித்து நிற்பன சூக்கும பூதங்களெனப்படும் இந்தத் தன்மாத்திரைகளே.

**தன்னறிவு** — தானாகிய ஆன்மாவின் அறிவு. ஆன்மா மலங்களின் வசப்படாது இருக்கும் நிலையில் பிரகாசித்து நிற்கும் அறிவு.

**தன்னிலை** — தனது உண்மைநிலை. அதாவது தானாகிய ஆன்மா மலங்களின் வசப்படாதிருக்கும் நிலையில் வந்து பொருந்தும் உண்மை நிலை.

**திரஷ்டா** — சாட்சிநிலை கைவந்த பெரியோன் (குண—19).

திரிகரணசுத்தி — மனம் வாக்குக் காயம் என்பன திரிகரணங்கள். சுவகர்மங்களை முறையாகச்செய்து ஒழுகுவோர் மூன்று க்ரணங்களையுஞ் சுத்தி செய்பவராவர். திரிகரணசுத்தி வாய்த்ததன் பின்னரே, ஒருவன் மேலான தெய்வானுபவங்களுக்குத் தகுதியுடையவனுகின்ருன்.

திரிகுணுதீதன்—முக்குணங்களையுங் கடந்தோன் (குண—21).

திருஷ்ணு — புறப்பொருள்களைக் கண்ட மாத்திரத்தில், மனத்தில் எழுவனவாகிய மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை முதலியன.

திரோதானசக்தி—இச்சக்தி உயிர்களை மாயையுட் செலுத்தி, அவற்றின் மலங்களையெல்லாம் போக்கிப் பரிபக்குவப் படுத்துவது.

துல்யம் — சமம் (குண — 25).

துவேஷம் — சினத்தோடு கூடிய தணியாத வெறுப்புநிலை.

தேகி — தேகத்தையுடையவன். ஆன்மா. (குண — 5)

தேம்புதல் — புலம்புதல்.

தேவபூசை — இறைவனை வணங்குதல் வேண்டும் என்றும், அவனைச் சார்ந்து வாழுதல் வேண்டும் என்றும், தம்மறிவில் தெளிவுபெற்ற உயிர்கள் தேவபூசை செய்வதற்குத் தகுதியுள்ளவராவர். அவர்கள் தத்தம் அறிவாற்றல், நம்பிக்கை முதலியவற்றிற்கு ஏற்ப ஒரு மூர்த்தியை மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை செய்து வணங்கிவருவர். தேவபூசை செய்பவர்கள், புற ஒழுக்க நெறிகளில் மாத்திரமன்றி அகவொழுக்கத்திலும் சிறந்தவர்கள்.

தேவாம்சம் — தேவர்களுடைய அம்சங்கள் தம்மிடத்தில் பொருந்திவாழும் மனிதர்கள் தேவாம்சம் பெற்றோர் எனக் கருதப்படுவர்.

நிக்கிரகம் — அடக்குதல். (கர்ம — 33)

நியதி — இறைவனுல் உயிர்கள் உய்யும்பொருட்டு அமைக்கப்பட்ட தெய்வீக வரம்பு.

**நியம குணம்** — தாயாரின் கர்ப்பத்தி லிருக்கும்பொழுது ஒவ்வொரு சிசுவினிடத்திலும் அமைந்த பிறவிக் குணம். இக்குணம் சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் ஆகிய முக்குணங்களின் வடிவாகவே இருக்கும்.

**நியாசம் செய்து** — அர்ப்பணஞ் செய்து, யோகம் செய்து. (கர்ம — 30)

**நிவிர்த்திமார்க்கம்** — அகக்காட்சிகள் கைவந்த பெரியோரிடத்தில் வந்து பொருந்தும்நெறி. தானுகிய ஆன்மாவையுந், தனக்கு உயிர்க்குயிராயிருக்கும் இறைவனையும் தரிசிப்பதற்கு உரிய பெருநெறி. நிவிர்த்தி மார்க்கம் பிரவிருத்தி மார்க்கத்திற்கு நேர்மாறுனது.

**நிவேதனம்** — தன்னுல் உபாசிக்கப்படும் இஷ்டதேவதையின் முன் படைக்கப்படும் திருவமுது, வெற்றிலை, பாக்கு, பழம் முதலிய உணவுப்பொருள்கள்.

**நிரப்பொணுத் தீ** — எத்துணை விடய அநுபவங்களையும் உணவாக ஊட்டினுலும் பசிதீராது மேன்மேலும் விடய அனுபவங்களையே காதலித்துக்கொண்டு கிடக்கும் காமக்குரோத வடிவமாயிருக்கும் ஆசையே இங்கு குறிக்கப்பட்டது. 'தணிந்து நிறைவுபெருத பெரிய நெருப்பு' என்பது இதன் பொருள்.

**நிராசை**—ஆசையின்மை; ஆசைகளை அடக்கிய பெரியோர்களிடத்திற் காணப்படும் ஒரு குணவிசேடம்.

**நிர்மலத்தன்மை** — தூய்மை; பரிசுத்தத்தன்மை.

**நிஷ்டை நிலை** — தியானத்தில் எழும் ஆத்மப்பிரவாகத்தில் உறுதிப்பட்டு நிற்கும் நிலை.

**நைஷ்கர்மியநிலை** — கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் வாயிலாகக் கர்மங்கள் நிகழும்பொழுது, தான் அவற்றிலிருந்து கழன்று சாட்சிரூபமாய் நிற்கும் நிலை.

**பகவத்கீதை** — பகவான் மொழிந்தவை.

**பக்தியோகம்** — இறைவனின் பெருமையை மறவாது அயரா அன்புநிலை பெற்று, உள்ளம் நெகிழ்ந்து பிரவாகிக்கும் பொழுது பொருந்தும் யோகம்.

**பஞ்சகிருத்தியம்** — இறைவனின் ஐந்தொழில்கள். அவையாவன: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன.

**பஞ்சபூதங்கள்** — பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. இவற்றை வெறுஞ் சடசக்திகள் எனக் கருதல் பிழையாகும். இவை ஒவ்வொன்றும் ஆன்ம அறிவு விருத்தியின் தொடர்பினுல் சின்மயமாய்த் திகழ்வன.

**பதவி** — மேலான உலகங்களில் அனுபவிக்கப்படும் போக முக்திநிலே.

**பந்தம்** — கட்டு.

**பரஞானம்** — மேலான ஞானம். இது சிவஞானத்தையுங் குறிக்கும்.

**பரதர்மம்**—சுவகுணத்திற்கும், உடம்பு, கருவி, கரணங்கள் முதலியவற்றிற்கும் மாருகச் செய்யப்படுந் தொழில்.

**பரபக்தி** — இறைவன்பால் இயற்கையாகவே எழும் அயரா அன்பு. பக்தி இருவகைப்படும். ஒன்று இறைவனிடத்தில் தான் விரும்பும் பொருள்களேப் பெறுவதற்கு எழுவதாகிய சாமானிய பக்தி. மற்றையது இயற்கைஅன்பு தூண்ட இறைவனேடு ஐக்கிய முறுவதற்கு எழும் பக்தி. இந்தப் பக்தியே பரபக்தி எனப்படும்.

**பரம்** — மேலான பதவிகள் (கர்ம — 19).

**பரமாத்மா** — அநாதியே பந்தங்களிலிருந்து நீங்கி நிற்கும் இறைவன். அனேத்தையும் வியாபித்து நிற்கும் பரம் பொருள்.

**பராநுபவம்** — மேலான முக்திநிலே. இந்நிலேயைப் பெற்றவர் பிறப்பதில்லே; இறப்பதில்லே; மீளாமுக்தர்களாய் இறைவனுடன் இரண்டறக் கலந்து இருப்பர்.

**பரிக்கிரகசக்தி** — மாயாசக்தி, இறைவனது பரிக்கிரகசக்தியென்றும், வைப்புச் சக்தி யென்றும் சொல்லப்படும். சைவசித்தாந்த நூல்கள் இச்சக்தியைப் பராசக்திக்கு வேறென்று விளக்குவன.

**பரிணமித்தல்** – மாறுதலடைதல். மாற்றம் இருவகைப் படும். ஒன்று பரிணமம்; மற்றையது விருத்தி. பால் தயிராதல் பரிணமமாற்றம் எனப்படும். படம் குடி லாதல் விருத்திமாற்றம் எனப்படும்.

**பரித்தியாகம்** – முற்றும் விடுதல் (குண – 25).

**பரிபந்திகள்** – நேர்விரோதிகள் (கர்ம – 34).

**பாவனை** – இது இருவகைப்படும். போலிப் பாவனை, உண்மைப் பாவனை என்பன. ஒன்றை இன்னொன்ருகப் பாவித்தல் போலிப் பாவனையாகும். குருவின் அருள் பெற்று, அவருடைய அருள் உபகாரத்துடன் மந் திரம் பாவனை கிரியை முதலியவற்ருற் பாவிக்கப் படும் பாவனை உண்மைப் பாவனையாகும். மந்திரம் வாக்கின் செயலென்றும், பாவனை மனத்தின் செய லென்றும், கிரியை காயத்தின் செயலென்றும் அறிக.

**பிண்டம்** – உடம்பு. விளாங்கனிப் பிரமாணமாகப் பிதிர்க ளுக்கு இடப்படும் பலி.

**பிதிர்** – இறந்த பெற்ருேர் முதலியோரின் ஆன்மா.

**பிதிர்கடன்** – இறந்த இனத்தார்க்குச் செய்யும் கருமம்.

**பிதிர்கணம்** – பிதிர் தேவதைகள். இவர்கள் வசத்திலேயே இறந்தோரின் ஆன்மா இருக்கின்றது என்பர். இறந் தோர்க்கு நன்றிக்கடன் செலுத்த விரும்புவோர் பிதிர் தேவதைகளையே பிரீதிப்படுத்தல் வேண்டும் என்பது கொள்கை.

**பிம்பம்** – சாயை.

**பிரகிருதி** – இயற்கை. சாங்கியர் இந்தப் பிரகிருதியைப் பற்றி நன்கு ஆராய்வர். வைஷ்ணவர்கள் இந்தப் பிரகிருதியையும், இதற்கு மேலாக உள்ள பரப் பிரகிருதியையும் ஆராய்வர். சைவர்கள் இந்தப் பிரகிருதியை, அசுத்தமாயை எனக் கூறி, இதற்கு மேலாக உள்ளனவாகிய சுத்தாசுத்த மாயையையும், சுத்த மாயையையும் ஆராய்வர்.

**பிரதிஷ்டாஸ்தானம்** – ஆதாரநிலையம் (குண – 26).

**பிரமம்** – வேதோபநிடதங்களில் மிகவும் பயிலப்படும் மந்திர சக்தி வாய்ந்த சொல். எல்லாமாகவும், எல்லாவற்றையும் வியாபித்துநிற்கும் பரம்பொருளாகவும் நிற்கும் பரவஸ்துவைக் குறிக்குஞ் சொல்.

**பிரமாணம்** – அத்தாட்சி, ஆணை, உண்மையான நிலை.

**பிரமாதம்** – அவதானமில்லாமை (குண – 8).

**பிரம்மபூயம்** – பிரம்மநிர்வாணபதம். இதனைச் சைவசித்தாந்த நூல்கள், சிவசாயுச்சிய நிலை என்றும், இறைவனுடன் இரண்டறக் கலந்தநிலை என்றுங் கூறும்.

**பிரவிருத்திமார்க்கம்** – புறவுலகிற் சென்று பல விருத்திகளுடன், உலக நடைமுறையைப் பேணி வாழ்பவரிடத்திற் காணப்படும் மார்க்கம். புறநோக்கர், எப்பொழுதும் எவ்விடத்தும் இம் மார்க்கத்தையே அநுசரிப்பர்.

**பிரளயம்** – யுகமுடிபில் உலகுக்கு ஏற்படும் ஒடுக்கம் (குண – 2).

**பிரிய, அப்பிரியங்கள்** – விருப்பு வெறுப்புக்கள் (குண – 24).

**பீஜம்** – விதை (குண – 4).

**புத்தியிற் சரண்புகுதல்** – கன்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், அந்தக்கரணங்கள் ஆகிய அனைத்தும் தத்தம் தொழில்களை அறவேவிட்டுப் புத்தியினிடத்துப் பொருந்தி, அதன் பெரிய வியாபகத்தினுள் புகுந்து, தம்மை முழுவதும் இழந்து நிற்றல்.

**புத்தியுக்தன்** – புத்திநிச்சயம் பெற்றவன் (கர்ம – 26).

**புராதனம்** – மிகவும் பழைமைவாய்ந்த தன்மை.

**புலனுகர்ச்சி** – மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய இந்திரியங்கள் தத்தம் விடயங்களில் மிகவும் அழுந்தி, கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்து அவ்வவ் விடய அநுபவங்களிற் கூர்மைப்பட்டுச் சிறந்திருத்தல்.

**புறநோக்கு** – வெளிப்பார்வை. புறநோக்கர் சாமான்ய உண்மைகளையேயன்றி ஆன்ம சம்பந்தமான விசேட உண்மைகளை உணரமாட்டார். அல்லும் பகலும் மனத்தில் எழும் ஆசைகளைப் பின்தொடர்ந்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கொள்கையுடன் வாழ்பவர் அனைவரும் புறநோக்கரே.

**புறவிடயங்கள்** – இந்திரியங்களின் நுகர்ச்சிக்கென புற உலகில் பிரகிருதி பொங்குவதனுல் தோன்றும் புறப் பொருள்கள்.

**பூதங்கள்** – பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. இவற்றைத் தூல பூதங்கள் எனக் கூறுவர்.

**பூதானம்** – பழையகாலத்தில் அந்தணர்களுக்குச் செய்யப் பட்ட பலவகைத் தானங்களுள் ஒன்று. பூதானம் என்பதன் கருத்து, பூமியைத் தானஞ் செய்வதாகும். இக்காலத்தில் பூதான இயக்கத்தை நடாத்திவருபவர் ஆச்சார்ய விேேபாவே அடிகளாவர்.

**பேதபுத்தி** – நான் வேறு, அவன் வேறு என்று பாகுபடுத்தியும் வேற்றுமைப்படுத்தியும் காணும் புத்தி, பேதபுத்தி எனப்படும்.

**பேதலித்தல்** – மனங் குழம்புதல்.

**பேதித்தல்** – வேற்றுமைப்படுத்தல். உறுதிப்பட்டு நிற்கும் மனநிலையை முழுவதுங் குழப்பிவிடுதல்.

**பேராவியற்கை** – எக் காலத்திலும் நிலைபெற்றிருக்கிறதாகிய, மீளாநிலையோடு கூடிய உயர்ந்த முத்திப் பேறு.

**பொய்ம்மையொழுக்கம்** – உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று ஒழுகுதல். ஆசையடங்காதவர்கள், ஆசையடங்கியவர்கள்போல நடித்து வாழுதல்.

**பொருமையின்றி** – மிகுந்த பொறுமையுடன்.

**போகம்** – அநுபவப்பேறு. சைவசித்தாந்த நூல்கள் மூன்று சரீரங்கள் உளவென்றும், அவை - தூலசரீரம்,

சூக்குமசரீரம், அதிசூக்குமசரீரம் என்பன என்றும் கூறும். இவை முறையே போக்கிய காண்டம், போக காண்டம், பிரேரக காண்டம் என்றும் கூறப்படுவன.

**போக்கியம்** – அநுபவிக்கப்படுவது. அனுபவப் பொருள்.

**போலித்துறவு** – அகத்துறவு உண்மையில் நிகழாவிடத்து, ஒருவரிடத்திற் காணப்படும் துறவு, போலித்துறவு என்று கூறப்படும்.

**போலியோகம்** – மனோலயம், தியானப்பேறு முதலியன வாய்க்கப்பெறாத ஒருவர் புறவிடயங்களையே சதா சிந்தித்துக்கொண்டு கண்மூடித் தியானத்தில் இருப்பதுபோல் நடித்தல், போலியோகம்எனப்படும்.

**மகத்துவம்** – பெருமை.

**மத்பாவம்** – எமக்குரிய சொரூபம் (குண - 19).

**மந்திரபூர்வம்** – மந்திரங்களுடன்.

**மயக்கம்** – அறிவு தெளிவு பெறாது, அறிவு அறியாமை ஆகிய இரண்டிற்கும் நடுவில் அகப்பட்டுத் தத்தளித்தல்.

**மலசக்தி** – ஆணவம் முதலிய மும்மலங்களிலிருந்தும் அறியாமையை வருவிப்பதற்கும் அறிவை மயக்குவதற்கும் எழும் சக்தி. மாணிக்கவாசக சுவாமிகள் 'ஆறுகோடி மாயாசக்திகள்' எனக் கூறுவர்.

**மனோபாவம்** – மனம் ஒவ்வொரு கோணத்தில் நின்று, ஒவ்வொன்றையும் நோக்கும் நோக்கவிசேடம்.

**மனோலயம்** – மனம் இன்னொன்றைச் சார்ந்து அதனில் தன்னை இழந்து முழுவதும் ஒன்றுபட்டு நிற்கும் நிலை.

**மஹத்** – பெரியது.

**மஹத்பிரமம்** – இது பிரகிருதியைக் குறிக்கும். இதிலிருந்து பொங்கி எழுந்து பிரவாகித்துவரும் சூக்கும

பூதங்களாகிய தன்மாத்திரைகளின் விசித்திர சக்திகளையும் விசித்திர கோலங்களையும் கண்ணுற்ற பெரியோர் பிரகிருதியையும் ‘மஹத்’ எனக் கருதினர் என அறிக.

**மஹேஸ்வரர்** – சிவனடியார்.

**மாசு** – அழுக்கு அல்லது குற்றம்.

**மாயாமலம்** – விடய ஆசைகளைத் தூண்டி மயக்குகின்ற எண்ணிறந்த சக்திகளை உடையதாதலின், மாயை மாயாமலம் எனவும்படும். மாயை விளக்குப்போலிருப்பதுமன்றி மயக்கமுஞ் செய்யும் எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும்.

**மாயை** – மாயா என்ற வடமொழிச்சொல் தமிழில் ‘மாயை’ என வழங்கும். தோன்றுவதும் ஒடுங்குவதுமாக இருப்பதனல், மாயை என்ற பெயரைப் பெற்றது.

**மித்யாசாரன்** – பொய்யொழுக்கமுடையவன். (கர்ம - 6)

**முக்குணதரிசனம்** – முக்குணங்களையுந் தனக்கு வேருகக் காணும் ஞானி, முக்குணதரிசனம் பெறுகின்ருன்.

**முதற்காரணம்** - காணப்படுகின்ற இவ்வுலகம் தன் காரண நிலையில், தன் முதற்காரணமாகிய மாயையில் ஒடுங்குகின்றது என்பர். இறைவன் நிமித்தகாரணம் என்றும், சக்தி துணைக்காரணம் என்றும், மாயை முதற் காரணம் என்றும் அறிக.

**முக்திபரியந்தம்** – ஜீவாத்மா கர்மசக்கரத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கும் நிலையைக் கடந்து, மேலான உலகங்களிற் போகங்கள் புசித்து, போகங்களும் தமக்கு அந்நியமானவை என உணர்ந்து பரஞானம்பெற்றுக் கடைசியிற் பேரானந்தப் பெருவாழ்வாகிய முக்தியைப் பெறுகின்றது. ‘முக்திபரியந்தம்’ என்றது, அந்தச் சிறந்த முக்தியைப் பெறுங் காலம்வரைக்கும் என்பதை வலியுறுத்தும் பொருட்டு.

மூடயோனி — அறிவு விளக்கத்திற்கு உதவிபுரியாத கர்ப்பப்பை. (குண — 15)

மூலப்பிரகிருதி — மிகுந்த ஒடுக்கம்பெறக்கூடியதும், மிகுந்த விரிவுபெறக் கூடியதுமாகிய, இயற்கையின் மூலம். (குண — 3)

யக்ஞகர்மம் — அக்கினி வளர்த்து, ஓமஞ்செய்து, பலிகள் ஊட்டி, தேவப் பிரிதியின் பொருட்டு மந்திரபூர்வமாகச் செய்யப்படும் வேள்வி.

யக்ஞசிஷ்டம் — உபாசனை செய்யப்படும் தேவர்களுக்கு நிவேதனஞ் செய்தபின், எஞ்சிய அன்னம், பழம் முதலிய திரவியங்கள். (கர்ம — 13)

யக்ஞார்த்தகர்மம் — வேள்வி செய்வதன் முன்னர், வேள்விக்காகிய நெய், ஓமத்திரவியங்கள், பலி உணவு வகைகள் ஆகிய இவற்றைத் தேடிச் சேகரித்தல் முதலாய தொடக்க கர்மங்கள்.

யாத்திரை — கதி, போக்குவரவு. (கர்ம — 8)

யானெனது — 'யான்' என மனத்தில் எழும் எண்ணம் அகங்காரம் என்றும், 'எனது' என மனத்தில் எழும் எண்ணம் மமகாரம் என்றுங் கூறப்படும். இந்த யான், எனது என்னுஞ் செருக்குமயமான எண்ணங்களிலிருந்து நீங்கியவர்கள், வானோருலகங்களுக்கும் மேலான உலகத்தை அடைவர் எனத் திருவள்ளுவ நாயனார் கூறுவர்.

யோனி — கர்ப்பப்பை. (குண — 7)

ராகசொரூபம் — தணியாத ஆசை வடிவம். (குண — 7)

ராகதுவேஷம் — விருப்பு வெறுப்பு. (கர்ம — 34)

லோகசங்கிரகம் — உலக தர்மத்தைச் செவ்வனே உணர்ந்து, உலகம் கெட்டவழியிற் செல்லாமல், பாதுகாக்கும் நெறி. (கர்ம — 20)

லோபம் — பொருளாசை, ஈயாமை. (குண — 12)

**விகற்பஞானம்** — வேறுபடுத்திக்காணும் ஞானம்.

**விகற்பம்** — வேறுபாடு, சந்தேகம்.

**விசாரணை** — ஆராய்ச்சி.

**விசாரம்** — ஆராய்வு, ஆலோசனை, விவாதம். ஆன்மவிசார மென்பது, தன்னைப்பற்றித் தன் சுவகுணத்தைப் பற்றித், தன்னுண்மை நிலையைப்பற்றி அறிதல் வேண்டும் எனத் தன்னுள்ளத்தில் எழுங் காதல்.

**விசேடகர்மம்** — வேள்வி, தவம், தானம் முதலியன. தேவர்களை நோக்கிச் செய்யப்படுவனவாகிய உயர்ந்த கர்மங்கள்.

**விஞ்ஞானம்** — உண்மை அறிவு, மேலான அறிவு, பஞ்சகந் தங்களுள் ஒன்று. இக்காலத்தில் பேசப்படும் விஞ்ஞானம் வேறு.

**வித்தியாதானம்** — வித்தையை ஏனையோர்க்குப் பாத்திர மறிந்து இலவசமாக வழங்குதல்.

**வித்துக்கள்** — அறிவுடையோர். (குண — 14)

**விபரீதம்** — ஒன்றை மற்றொன்ருக நினைப்பது.

**வியஞ்சகம்** — விளக்குங் கருவி. உடம்பும், உடம்பிலுள்ள கருவிகரணங்களும் உயிரறிவை விளக்கும் கருவிக ளாதலின் அவற்றை வியஞ்சகசக்திகள் எனக் கூறுவர்.

**வியபிசாரநிலை** — ஒருவன் தன்னியற்கைக்கு மாருகக் கர்மங் களைச் செய்கையில் அவன் வியபிசாரியாகின்ருன். அவனது கருவிகரணங்கள் ஒளிகுன்றுகின்றன.

**வேள்வி** — ஓமகுண்டங்கள் அமைத்து, அக்கினி வளர்த்து தேவப்பிரீதியின் பொருட்டுச் செய்யப்படும் யாகம்.

**வைஷ்ணவ சித்தாந்தம்**—விசிஷ்டாத்வைதக் கொள்கையில் அமைக்கப்பட்ட உயர்ந்த சமயதரிசனம். விஷ்ணுவே முழுமுதலிறைவன் என்ற கொள்கையையுடையது.

**வ்ருஷ்ணி** – ஸ்ரீகிருஷ்ணபகவான் அவதரித்த குலம் 'வ்ருஷ்ணிகுலம்' எனப்படும் யாதவகுலம்.

**க்ஷத்திரியன்** – அரசகுலத்தைச் சேர்ந்தவன். ரஜோ குணம் மேலோங்கி விளங்குபவன். யுத்த கர்மத்தையே சுவகர்மமாகக்கொண்ட வீரன்.

**க்ஷேத்திரம்** –புனிததலம். தர்மக்ஷேத்திரம் என்பது, தர்ம ராச்சிய தாபனத்தின் பொருட்டு தர்மயுத்தம் நிகழ்த்தப்பெற்ற புனிததலம்.

**ஜனார்த்தனன்** – ஸ்ரீ கிருஷ்ணபகவானின் நாமங்களுள் ஒன்று. மக்களால் விரும்பப்படுபவன் என்ற கருத்தையுடையது.

**ஜனித்தல்** – தோன்றுதல்.

**ஜன்யகுணம்** – தாயாரின் கர்ப்பத்தி லிருக்கும்பொழுது பொருந்திய இயற்கைக்குணம்.

**ஜீவன்முக்தர்** – உடம்போடு இருக்கும்பொழுதே முக்தி பெற்றுச் சுதந்திர ஆன்மாக்களாய் இறைவனுடைய திருவருளோடு வேறற ஐக்கியமுற்றுத் திரிபவர்.

**ஜீவாத்மாவிற் சரண்புகுதல்** – கன்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக்கரணங்கள் ஆகிய அனைத்தும் ஜீவாத்மாவைப் புகலிடமாகக் கொள்ளல்.

**ஹிதம்** – திருப்தி (கர்ம-30).

**ஹோமம்** – வேள்வி நிகழும்பொழுது, வளர்க்கப்படும் யாகாக்கினியிற் செலுத்தப்படும் ஆகுதி.